உ

கடவுள் துணை.

கொங்கணநாயனார் அருளிச்செய்த

# கடைக்காண்டம்-௱.

இஃது

திருமயிலை,

வைத்திலிங்க தேசிகரால்

பார்வையிடப்பட்டு.

---

டி. சாரதா புத்தகசாலை தலைவர்,

த. துரைசாமி முதலியார்.

அவர்களால்

சென்னை.

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1628.

பதினென்சித்தர்களில்மஹாமகத்துவம்பொருந்திய போகமஹாமுனிவர் அருளிய

## போகர் சப்தகாண்டாம் 7000 பாடல்.

மஹா மகிமை வாய்ந்த சித்தர்களும், நாற்பத்தெண் முனிவர்களும் நவ கோடி ரிஷிகளும் ஜீவர்களின்பேரில் உள்ள காருண்யததால் 21-இலட்சம் கிரந்தங்கள் செய்தருளினர் ஒவ்வொருகிரந்தத்திலும் அநேக மகத்துவங்கள் நிறைந்தன போகர் சப்தகாண்டமாகிய இந்நூலில் அநுபவ வைத்திய முறைகளும் வாத முறைகளும் சரக்குகளின்கட்டுகளும் கற்பங்களின் முறை உப்புவகைகளின் கட்டுவேதைகளும், பாஷாண வகைகளும் போகர்தமது சமாதிகளில் விளங்கியதும் இத்துடன் விரிவாக எழுதுவதற்கு இடம் தராமையால் இத்துடன் நிறுத்துகின்றனம் இதன் விபரமும் புஸ்தகத்தின் விஷய அட்டவணையில் விபரமாக காண்க இதன் விலை ரூபா 3.

நீங்கள் சுதேச வைதியராக வேண்டுமானல்,

## அனுபோக செய்முறை பாக்கெட்வைதியம்.

இதில் நமது சித்தபுருஷர்களின் அநுபோகத்தில் வந்த ஔஷத முறைகளை அநேக ஆண்டுகள் தொண்டுசெய்து நமது முன்னோர்கள் அறிந்து அதனை அநுபோகத்தில் கையாடி வந்த சுமார் 800 முறைகளை திரட்டி லோகோபகாரமாக சுதேசவைத்தியர்களின் சகாயத்தின் நிமித்தம் சொக்காய் பைக்குள் அடங்கக்கூடிய பாக்கெட் அளவில் புதிதாக அச்சிடப்பெற்றது.

இதன் விலை ரூபா 1. (தபால் சார்ஜ் வேறு)

| | | |
|---|---|---|
| போகர் ஜனனசாகரம் | 0 | 10 |
| போகர் 700 பாடல் | 0 | 10 |
| போகர்சரக்குவைப்பு 800 | 0 | 14 |
| அகஸ்தியர் வயித்திய காவியம் 1500 பாடல் | 1 | 0 |
| அகஸ்தியர் ஜாலநிகண்டு | 0 | 4 |
| அகஸ்தியர் தயிலமுறை 100 பாடல் | 0 | 4 |
| ரோமரிஷி வயித்தியம் | 0 | 10 |
| அனுபோகவயித்தியம் 8 காண்டம் | 4 | 0 |
| சிகிச்சா ரத்தின தீபம் | 2 | 0 |
| ஷை இரண்டாம்பாகம் | 2 | 0 |
| ஷை கண்ணுசாமியம் | 1 | 8 |
| ஞானவெட்டியான் மூலம் உரை | 2 | 8 |
| ரத்தின வயித்திய சிந்தாமணி 800 | 1 | 4 |
| ஜீவரக்ஷாமிர்தம் | 7 | 8 |
| வயித்தியசார சங்கிரகம் | 1 | 4 |
| ஷை திக்கு | 2 | 0 |
| யதார்த்தகுண சிந்தாமணி | 1 | 4 |
| 18-சித்தர் வைத்திய கோர்வை | 1 | 8 |
| சாதக அலங்காரம் மூலம் | 0 | 12 |
| ஷை மூலம் உரை | 2 | 0 |
| மாட்டுவாகட அஸ்வசாஸ்திரம் | 1 | 4 |
| புலிப்பாணி வயித்தியம் 500 | 0 | 4 |
| மெடீரியா மெடிகா இங்கிலீஷ் முறை | 3 | 0 |
| மச்சமுனி 800-பாடல் | 0 | 10 |
| கொங்கணர் கடைக் காண்டம்-500 | 0 | 8 |
| தேரய்யர் வயித்தியம்.1001-பாடல் | 0 | 12 |
| ஷை 500 பாடல் | 0 | 12 |
| ஷை கரிசல் 300 | 0 | 8 |
| கருவூரார் பலதிரட்டு | 0 | 8 |
| அகஸ்தியர் பஞ்சபட்சி சாஸ்திரம் மூலம் உரை | 0 | 12 |
| அகஸ்தியர் ஞானசரநூல் மூலம் உரை | 0 | 4 |
| கமலமுனிரேகை சாஸ்திரம் மூலம் உரை | 1 | 0 |
| போகர்பஞ்சபட்சிசாஸ்திரம் | 0 | 14 |

டி. சாரதா புத்தகசாலை,

நெ. 23, பாலையப்பன் தெரு மின்ட் போஸ்டு மதராஸ்,

உ

கடவுள் துணை.

கொங்கணநாயனார் அருளிச்செய்த

# கண்டக்காண்டம்-௱.

## காப்பு.

அண்டரண்டங்கடந்தபொருள் நிற்குணமாய்நின்ற
அளவில்லாப்பூரணமே சூட்சாசூட்சம்
எண்டிசையும்பரநிரஞ்சனமேயாகி
ஏகசச்சிதானந்த வாலைஞானங்
கொண்டதொருபூரண மெந்நாளுங்காப்பு
குறியானவெளியாளு மொளியாளுங்காப்பு
புண்டரீகவெளியொளியாஞ் சுழிமுனைமேவும்
போதமுறும்வேதாந்தத் தாதிகாப்பே.

## மவுனநிலை.

ஆதியேதந்தமே தகண்டமேது
அப்புறத்தேநின்றபூ ரணந்தானேது
நீதியேதறிவேது நினைவங்கேது
நேரானசுழிமுனை தனை நினையாதார்க்கு
சோதியேது துரியமென்ற துரியமேது
துரியாதீதத்தடயகுஞ் சூட்சமேது
பேதியாதொருமனமே பிலக்கவேணும்
பிலத்தக்கால்மவுனமது பிலக்குந்தானே. 2

## தேவிபூசை மகிமை.

தானென்ற ஆணவமா மலத்தைப்போக்குந்
தருகாதேகிரியைவிட்டு யோகத்தேசெல்
மானென்றபெண்மயக்க மாகாதப்பா
மாயிதுரோதாயியுட வலுமைமெத்த
வூனென்றதிரிகோணத் துள்ளேநின்று
றுரைத்துவிட்டாள் ஞானமெல்லா மோகோபாரு
ஏனென்றுற்றேசமெல்லாஞ் சித்தாய்ப்போகு
மெரிதல்லதேவியைநீ பூசையண்ணே. 3

பூசையிலே வெகுகோடி [பூசையுண்டு புகழானமந்திரமோ கோடா
கோடி,: பூசையிலே வெகுநுணுக்க மறியமாட்டார் பூரணமாம் வழலை
யல்லோவாம்பூசை, பூசையிலேயிது வல்லோமறைத்தார் சித்தர் போக்
கறியாதினாலே கெட்டுப்போனார், பூசையென்றால் திரிகோண வாம்
பூசை பொன்னானாற்பத்து முக்கோணந்தானே. 4

## நாற்பத்து முக்கோணம்.

தானென்ற நாற்பத்து முக்கோணத்தைச் சார்வான எந்த நிட
பிள்ளாய்கேளு வானென்ற சதிரமிட்டு ரேகைமூன்று வளமிதுக்குள்
சூரியன்போல் வட்டமிட்டுக் கானென்ற நவரேகை வட்டத்தைக்கீறி
கைமுறையாய்நாற்பத்து முக்கோணத்தை, நானன்றாய்ரேகை பிரமா
ணஞ்சொல்வே னன்றாக நெல்லிடை பிரமாணந்தானே 5

பிரமாணமமேல்ரேகை ரவியின்ரேகை பேரானரேகையின் மேல்
வட்டத்திற்கீறி, திறமாக ஆற்றை நெல்பங்குபோடு சிறப்பாக ரவியின்
கீழாறுபங்கு, அறமானமதிரேகையதின் கீழ்வீதி யப்பனே அஞ்சே
கால்பங்கு போடு, நிறமான செயரேகையதின்கீழ்வீதி நிலக்கவே மூன்
றரை நெல்பங்குபோடே. 6

போடப்பா புந்தியுட ரேகையின்கீழ் புகழான ரெண்டரை நெல்
பங்குபோடு, ஆடப்பா குருவினிடரேகையின் கீழப்பனே நாலரை
நெல்பங்குபோடு, சூடப்பாபுகருடைய ரேகையின்கீழ் சுழன்ற மூன்
றேமுக்கால்பங்குபோடு, தேடப்பாமந்தனிடரேகையின்கீழ் திறமான
ஆறுபங்குதீர்க்கங்காணே. 7

காணப்பாராகுவின்கீழாறுபங்கு கைமுறையாய்கேதுவின் கீழா
றுபங்கு, தோணப்பா அன்பது நெல்பங்குமாச்சு தொடுகுறி போலின்
னமொரு குறிசொல்வேன்கேள், பூணப்பாரவிரேகைநீளஞ் சொல்
வே னுத்தமனே மூன்றுபத்து நாலரையேகீறே. 8

கீறடா செவ்வாயின் ரேகைநீளங் கெடியாக விருப்பத்து ஏழ
ரைதான்பங்கு, கீறடாபுகரேகை பதினேழப்பா கெடியான குருரே
கைபதினைந்தேதான், கீறடா வெள்ளியுடரேகை பதினேழு கீழாகச்
சனிரேகை நீளங்கேளு, கீறடா நாற்பத்தேழரைதான் பங்கு கீழாகு
மூன்றுபத்து நாலரைதான்பங்கே. 9

பங்கிருபத்கஞ்சாகுங்கேதரேகை பண்பாகவங்குலமோ பிரமாண
ந்தான், நங்குமிந்தப்படிகீறி குப்பமுனி அய்யா நடுரேகை முனை
மய்யம் நன்றாய்ச் சொன்னு, ரங்கதிலேதீட்சைவிதி யிருநூற்றுக்கு
ளப்பனே திரிகோணம் வகுத்தார்பாரு, சங்கைபெற்ற நாற்பத்து முக்
கோணந்தான் சாற்றியதோர் வகைகேளு தர்மயாமே 10

ஆமப்பாவுட்கோண முக்கோணந்தா னதின்மேலே யெண்கோண
மதின்மேற்சேரு, ஓமப்பா தசகோண மதின்மேற்சேரு உத்தமனே தச
கோண மதின்மேற்சேரு, நாமப்பா பதினான்குகோணமாகும் நாற்பத்து
முக்கோணம் மிட்டாச்சு, காமப்பால் கரணப்பால் கொண்டார்க்கல்லாற்
கருத்திலேநினைத்தாலும் கருமந்தானே. 11

கருமமெல்லாந் தீர்ப்பதற்கு வகையைக்கேளு கைமுறையாய்ச்
சொல்லுகிறேன் கபடில்லாமல், தருமமென்ற சதுர்த்திசை மேற்கோ
ணந்தான் சம்புவென்ற சிவந்தவர்ணஞ்சார்வு சொன்னேன், வறுமை
யெல்லாந் தீருமடா பின்கலையிற்பாரு வேதாந்தமேற் கோண மதின்
கீழ்கோணம், வர்மமடா சிவந்தவர்ணமதின் கீழ்கோணம் வளமான
வர்ணமது கறுப்புத்தானே. 12

தானென்றதிரிகோணமதின் கீழ்கோணந் தான்கறுப்பா மிதின்
கீழேசிவந்தவர்ணங், கானென்றவிதின்கீழே கார்மேகம்போல் கறுப்
பானவர்ணமடாவதின் மேற்சேரு, வானென்றவிதின்கீழே வெளுத்த
வர்ணம் வகையாக விதின்கீழே சிவந்தவர்ணம் கோனென்றசிவப்பாகு
மதின்மேற்கோணங் கொள்ளையடாவெள்ளைநிறங்கொண்டவாறே. 13

வாறானவிதின் மேலே சிவந்த வர்ணம் வாய்ப்பான விதின்மேலே
கறுத்தவர்ணம், வீறானவிதின்மேலே கறுப்பாம் வர்ண மேற்கொண்டு
சிவந்தவர்ணம் பதினான்குமாச்சு கூறான தசகோண மேற்கோணந்தான்
கொள்ளையடா வெள்ளைநிறம் பின்கலைக்கீழ் பேறானகறுப்பிதிற் கீழ்
கோணந்தன்னில் பெருமையுற்ற கறுப்புநிறம் பேசிப்பாரே. 14

பாரப்பா கீழ்க்கோணஞ்சிவப்புமாச்சு பண்பான கீழ்க்கோணம்
வெண்மையாகு, பாரப்பாகீழ்க்கோணங் கறுப்பதாகு மப்பனே மேல்
கோணம் வெண்மையாச்சு, சீரப்பா மேற்கோணஞ் செம்மையாச்சு சிற
ப்பானமேற்கோணங் கறுத்தவர்ணம் பாரப்பாமேற்கோணங் கறுமை
யாச்சு வகுத்தவட்ட தசகோணம் வளத்தைப்பாரே. 15

வளமான விதினுள்ளே தசகோணத்தில் வாரமுள்ள மேற்கோண
ம்நீலவர்ணம், களமான பின்கலைக்கீழ்கோணந்தன்னில் கருமைநிறமிதி
ன்கீழே செம்மையாச்சு, பளமானவிதின்கீழே நீலவர்ணம் பண்பாகவி
தின்கீழேசெம்மையாச்சு, உளமானவிதின்கீழே செம்மைகாணு முத்தம
னேயிதின்கீழே செம்மைதானே. 16

தானானவிதின்மேலே நீலவர்ணமாச்சு தருவான விதின்மேலே
சிவந்தரூபங், கானான விதின்மேலே கருமையாச்சு கைமுறையாச்சொ
ல்லிவிட்டேன தசகோண ரூபம் வானான விதினுள்ளே அட்டகோணம்

வகையானமேற்கோணங் குங்குமத்தின்ரூபங், தேனுனையின்கலைக் கீழ்க் கோண மஞ்சளாமே. 17

ஆமப்பாவதின் கீழே நீலமாச்சு அழகான கீழ்கோணஞ் சிவந்தரூபந்தாமப்பா மேற்கோணம் நீலவாணந்தயவான மேற்கோண மஞ்சள் வர்ணமோ மப்பாமேற்கோணஞ் செம்மையாச்சு உத்தமனே அஷ்டதச கோணத்துள்ளே, வாமப்பாவாமியடா வாலைரூபி மகத்தான கோணமடா மொன்றுதானே. 18

ஒன்றானகோணமது சிவந்தரூப முத்தமனே முருக்கம்பூ வர்ணமொவ்வா, ஒன்றானசிவகலை யிருக்தமார்க்கமூல கெல்லாம் படைத்தழிக்குமுமைத்தாய்வீடு, ஒன்றான திரோதாயி காமரூபி யுத்தசனங்களை மடக்குமோமரூபி, ஒன்றான திலுக்குள்ளே வித்துவாசல் ஓமென்றவாம்மா மவுனந்தானே. 19

மவுனமென்றதிரிகோணம் ரீங்காரபீடம் வாச்சுதடா நந்திக்கு கொலுவிருக்க, மவுனம்போலிருந்தல்லோ தாண்டவங்கள் மகத்தன நடனமது காணலாகு, மவுனமது நாவிற் சொல்வதல்ல வறுமையெல்லாமகற்றிவைத்தாள் மாதாவப்பா, மவுனத்தையுச்சரித்து திரிகை பூசை வளமானசக்கரத்தை வகுத்திட்டேனே. 20

வகுத்திட்டே னூர்பத்து முக்கோணத்தை வள்மான கோணமெல்லாந் தானந்தோறும், வகுத்திட்டேன் முப்பத்திரண்டுதீட்சை வகையாகப் பாடிவைத்தேன் கற்பநூரில், வகுத்திட்டேனுது வறிந்து கோணந்தோறும் வரிசையாய் வண்மையுள்ள கோணமெல்லாம், வகுத்திட்டேன்சிவதீட்சை வரைந்துபோடு வளமான குங்குமத்திற் சமாதியையே. 21

தீட்சைமுறை.

வையப்பா சிவப்பெல்லாஞ் சத்திதீட்சை மார்க்கமாய் நீலமெழு சபையின்தீட்சை, செய்யப்பாகறுப்பெல்லா மவுனதீட்சை திரமானபூரணமே நவமுக்கோண, மெய்யப்பா தீட்சையெல்லாஞ் சிவனிற்க விளங்கவே பிரணவத்தை வீடுதோறுந், தொய்யப்பா மகாரத்தையாருஞ் சொல்லார் சுழிமுனையின் கண்டத்தே தொடாந்துபாரே. 22

பாரப்பாமற்றவைகள் *பச்சைவர்ணம் பரிசமது பிரணவத்தைப் பத்திவைப்பாய, ஆரப்பா வட்டத்தின்மேலேகேளு அங்குலமபத்ததின்மேலேவட்டமொன்று, சிரப்பாவங்குலம் பததானதின்மேற் சிறப்பான வட்டமொன்று அதின்மேல்கேளு சாரப்பாவங்குலம்பத்தானதின்மேற் சக்கரம்போல் வட்டமொன்றுதன்னைக்கீறே. 23

சேற்றெல்லாமிட்ட பின்பு வீதிக்குள்ளே கிருபைறெவே வென்று ஓம்சிவயநாட்டு, சேரத்தெல்லாமவ்வீதிக்குள்ளேகேளு சேரவே பதிறுஹு இதழும்போடு, பார்த்தெல்லாமறு வீதிக்குள்ளேகேளு பண்பாக ரெண்டுபெத்தோடஞ்சிதழுமபோடு, காத்தெல்லாமுள்ளடங்குதழ்கள் தோறும் கைமுரையாயகாரமுதற்சகாரமாமே. 24

அட்சரமுறை.

ஆமடாஅன்பத்தோரட்சரத்தை அஷ்டவிதழ்முதலிருபத்தஞ்சும ட்டும், நாமடாநாற்பத்தொன்பதுவெழுத்தை நாட்டுவாய்தரணவமும் நாட்டித்தீரும், ஓமாடாவென்றவைக்கில் சீவனுச்சு வுத்தனேவிதின்மே லங்குதமொன்றின்மேல், தாமடாசதுரமாய்நகாரமாகச் சாத்துவாய் நா ல்வால்விட்டுத்தானே. 25

தானென்றவிதின்மே லங்குல மொன்றின்மேல் சார்வாகச்சதுர மொன்றுநால்வாசல்விட்டு, தானென்றதிவ் வண்ணமூன றுவரையிட்டு தனமானவுள் வீதிக்குள்ளேசேளு, தானென்றவட்ட பெலிதம்மென் றிட்டு தருவான மறுவீதிக்குளளேகேளு, தானென்றஅஷ்டசத்தி அஷ்டநாகந் தருபாலாள்திகிலீயோடுசாத்தினேனே 26

சாத்தினேன் பாலருக்கு மும்மென்றேதான் தருகிரிக்குய்பவ்வெ ன்றுஙகிச கெம்மென்றும், போத்தினேன்ராவுக்கு மஙசென்றேதான் புகழாகத் பிரவணவங்கொண் டிட்டுவைப்பாய், தேத்தினே நால்வாசல் தோறுமேகேள் சிறப்பாக துவாரபாலாளிருக்க, வாத்தினேன் உம் மென்று நிருதிமூலே யப்பனேகணேசனுக்குக்கெங்கின்றிட்டே. 27

ஈடாகமுகத்தடுக்கமேன்முகத்தில் ஏகாந்த மூர்த்திக்கு மங்கென் றேதான், சாடானவராயுவினிற் சுப்பிரமணியன் சஙகென்று வடபுறத் திற்குபேரன்சண்டன், வீடாகசவ்வென்று ஈசானத்தில் வேதாந்த வயி ரவர்கு கெண்றேதான், கூடான கீழ்முகந்தான் கிரிடிபிரிக்கி கூற்றுன சிங்கென்று கூறினேனே 28

கூறுகிறேனக்கினிக்குத் தெட்சணாமூர்த்தி கோலமடா அவ்வென் றேவதன்முகத்தில், மாறினேன்ரிஷிகளுட கொலுவாய் மைந்தாமகத் தான நிஙகென்றுவரைந்திட்டாய்நீ தேறியேயிதின் வீதியிங்கலேகொ ண்டேதான் தெளிவான அட்சரங்கள் சேர்த்துப்போடு, வாறியே பச் சை நிறக்கோணமல்லா மஷ்டகர்ம அஷசரகளடைத்திடடிமே. 29

அடைத்திட்டே னுள்வீதி முகவாசற்கெதிரே அம்மம்மகொடிக் கம்பம்வுஙலஙகென்றாணு, வுடைத்திட்டேன்வஙகு சிஙசெஙறேயூனு வுத்தமனேபீசயொளிப்பில்லாமல், படைத்திட்டேன் பிள்ளைகளேயுங்

கட்காகப் பண்பாக பூசைசெய்பச் சக்கரத்தை, வுடைத்திட்டேன்வே தாந்தசிரோசண்பணியாய் வானவெளியாகக் கிரிகையிலேபூசைபண்ணே.

### பூசிக்குமுறை.

பூசைசெய்ய வகைசொல்வேன் கைமுறையாய்ப்பாரு புகழான வெளிபூசைகிரிகைபூசை, பூசைசெய்து மவுனத்தே மனமுறைக்கமாட்டாய் போதமுள்ள யோகத்தைச் செய்யமாட்டாய், பூசைசெய்யகிரிகையிலே வருத்தால் மெத்த பூட்டெல்லாமனம் நன்றாய்ப் பூணுபூணு, பூசையிலேமுதற் பூசைவாம்பூசை பொற்சிலைபோல் பெண்ணைவைத்து பூசைசெயயே. 31

செய்யப்பா பதினாறு வயசுபெண்ணும் தீர்க்கமுடன் ரெண்டுபத்துவயசுபெண்ணும், செய்யப்பா மூன்றுபத்து வயசுபெண்ணும் செல்வமுள்ள நாலுபத்து வயசுபெண்ணும், செய்யப்பா நாலுதிரம் வழியாய்க் கொன்றேந்திடமான முதற்றாமேமகத்தாம் பூசைசெய்யப்பா பெண்தனக்குச்சாபஞ்செய்து திறகாகமுன்னாலும் பின்னாலுஞ்சேராதே. 32

சேராதே பாய்படுக்கை தன்னிலேதான் தெளிந்துகொண்டு மூன்றுநாள்விரதமேசொல், வந்தாய்கேள் சொல்லுகிறேன் மங்கைபர்க்கு வளமாகப் பச்சைமஞ்சள் வாடைசேர்த்து, நீராடிப்பட்டுடுத்தி பணிகள்பூண்டு நீதிபெறப்பூதியிட்டு வகிலூமூட்டி, கோரோசனைகஸ்தூரி குங்குமப்பூகும்பமென்ற கற்பூரஞ்சவ்வாதுகூட்டே. 33

கூட்டுவாய் புகழுடனே பூரஞ்சேர்த்துகொட்டுவாய்தாழம்பூதாளி தன்னை, நாட்டுவாய்மரிக்கொழுந்துமிச்சிமுல்லை நண்பானசெண்பகப் பூவாடைதானும், தீட்டுவாயவளதனக்குப்பன்னிருக்குள் சிறப்பாகவிந்நாடை தேகமெல்லா, மூற்றுவாய் அடைவனன்க்குமுடியப்பூசி மூன்றுநாள்கழித்தபின்புநாலேநாளா. 34

நாலாநாள் பூருவபச்சநவமியன்றுநன்றடா நாதவிடைவரம்பூசைமாலானவாலையடா சிறுபெண்தேவி மனமகிழப் பூசைபண்ண வகையைக்கேளு, சேலானவடமுமாய்பூசைபட்சஞ் செய்துதிடமாக நாற்காலினைபலகைமீதே, மேலானமெத்தைவிரித்தெழுக்குப்போட்டு மின்னையதின்மேல்வைப்பாயே. 35

வைப்பாய் நீதேயிவ் வண்ணங்கைமுறைதான்செய்யில் மகத்தான நால்வருமேரநாற்காலாசசி, பெய்ப்பானதானந்தி பலகையாச்சவிடங்கொண்டபட நாகமெத்தையாச்சு, கைப்பாகமறவாதே பராபரமேபோலுங்கயிலாசபராநந்தி மடிமேற்சென்றான், பொய்ப்பான ரதியல்லோவாத்தாள் பூசைபூரணியே காரணியேயென்றுபோற்றே, 36

போற்றியல்லோ பூசைசெய்ய வகையைக்கேளு புகழான மெத்தையின்மேல் தாயைவைத்து போற்றியே யரவபடம் நீர்விட்டாட்டி பூட்டடா கைகரணஞ் செய்தாற்சித்தி போற்றியே சிவசூட்சங் காதிற் செப்பு புகழான மணத்தையல்லோ ஒன்றாய்ச்சேர்த்து போற்றியே விரலுகிரிற்சனசபாரஞ்செய்து பூணவே பீங்கானிற்றேனைவாங்கி. 37

வாங்கிறதோர் வகையேது புழுகுபூரம் வழலையொத்த பரிகாரஞ் சுன்னங்கூட்டாய், காங்கிசையாய் புழுகுமொரு காசுதூக்கு கற்பூரங் காரம் பணவிடையேபோடு, பாங்கான பசுத்தழையின்பால் மாகாணி பண்பான தேவங்காற்படியேகூட்டி, தேங்காமற் கறுப்பஞ்சாறுபடி யரைக்கால்விட்டு திருமந்திரப்படிதான் சேரவாரே. 38

வாரப்பாபச்சையதிற் படிமாகாணி வயமாகக் கலக்கியல்லோ வைத்துக்கொண்டு சேரப்பாதறகனியிற் றேய்த்துத்தோய்த்து சிறப்பாக கைகரணஞ்செய்துவாங்கு, கூரப்பா காமிகளை திருத்திபூறி குமுகுமெணவேவடியுந் தேனைவாங்கு சாரப்பா பீங்கானிற் றூபதீபந்தான்காட்டி நாற்காலிக்குள்ளேவையே. 39

வைத்தபின்பு சலம்விட்டு கழுவிப்போட்டு வாகானசெம்பரத்தம் பூவுள்ளாக்கி நைத்ததின்மேல் மலர்தெரியவிட்டுச்சாத்தி நன்றாகத்தங்க மாருபலத்தகட்டில், மெய்த்திடவேநாற்பத்து முக்கோணத்தை வியங்கவேவரைந்து கடிதடவாய்மேலாயத், தைத்ததிலே தாழம்பூ சென்றொருகைச்சாற்றி செண்பகப்பூசாஞ்சாற்றி சவ்வாதுசாற்றே. 10

சாற்றுவாய்தகட்டுக்கு பூரமொடு புழுகுசாதிக் கோரோசனை குங்குமப்பூவோடு, சாத்துவா யரையிடையிற் சிவந்தபட்டு தருவானநோங்கைக்கு வாடைபூசி, சாத்துவாய் முடிக்கண்ட சரமோடு பதக்கந்தங்க ரத்தினக்கட்டு பொட்டுக்காறை, சாத்துவாயிருகாதில் பொற்றோடப் பாதங்கமணிக்கொப்பணிந்தங் கரைநாண்பூட்டே. 41

பூட்டுவாம் மோகநமாமுத்துமாலை புகழான கைக்கடகஞ் சரிகை விரலாழி, பூட்டுவாய் மணிக்காப்பு பாதமிரண்டுக்கும் பொற்பணியாம் நூபுரங்கள் பூணச்சாத்தி, பூட்டுவாம் பணிகள்புஷ்பம் பாதமிரண்டுக்கும் பொற்றகடுகுதிகாலின் கீழேவைத்து, பூட்டுவாய் மணத்தையங்கே பாதபூசை புகழானபெருவிரலிற் புஷ்பஞ்சாத்தே. 42

சாத்தியபின் ஓமென்றபூதியிட்டு ஸ்தன்னியத்திற் சாமளையத் தியானம்பண்ணி, நேத்திரே யாமளையின் தியானம்பண்ணு நிலையான திரிபுரையும் புவனையோடு, தோத்தரிக்க விருப்பத்தின் பெருவிரலிற் றியானந்தோணவே சிரசின்மேற் பரையின் தியானந் தோத்திரமாம் பஞ்சசத்தி முகத்தியானங்கூறடா வாமத்தேவாலைதானே. 43

தானென்ற வாலைசிறுபெண் தாய்தேவி தனைப்பெற்றாயம்மம்மா நிசாதங்கொண்டாய் ,வானென்ற வாலையிருந்தாயேயென்று மவுனகத் தேகேசரியா மகண்டத்தன்னில், ஏனென்ற சுழிமுனையாம் புருவமய்ய மிடைகிழாய் லட்சியத்திலியல்புகாணுங், கானென்ற புருவமய்யத்தஞ்ச னேழாய்க் கண்கொள்ளவெளியிருந்த சிவத்தைக்காணே. 44

காணப்பா கண்மூடி விழிவைத்தானே கண்டமெனுஞ் சுழிமுனை யில்கருத்தைவைத்து, தோணப்பா நேத்திரத்தையோட்டிப் பாருசுகமா கக் கடைக்கண்ணை விரலாலாட்டு, பூணப்பா சூரியன்போல் வட்டமாகும் புகழாக வொளியினிடபிரகாசம்வீசும் வீணப்பாமற்றதெல்லாந் தேவி பூசை வேதாந்தஅந்தமிது விளம்பினேனே. 45

விளம்பினேன்சிவரூப மிதுதானப்பா வேதாந்த சாயுச்சியதபமீதப் பா, விளம்பினேன் கிரிகையுட பூசையாலே வெளிப்பூசை யான்சொன் னேன் சுழினைக்குள்ளே, விளம்பினேன் பிறப்பிறப்புரெண்டுமங்கே விந் துவொடு நாதமங்கேமவுனமங்கே, விளம்பினேன் ஓங்காரவட்டங்கொ ண்ட விடமதிலேஎட்டும்ரெண்டும் விளங்கும்பாரே. 46

பார் அப்பா பிள்ளைகளே யுங்களுக்குச்சொன்னேன் பரமானதிச வாலையோகவாலை, யேப்பா மாமத்திறகடிதடத்தி லேகாந்தமாயிருந்த வாலைப்பெண்தான், சாரப்பா மகாரவித்தை மூன்றொன்றாக்கி சந்திர கலைக்குள்ளாக சோமவட்டம், வேரப்பா அசவையுறு மவ்விடமேயன்றி வேறொன்றுமில்லையில்லை வேரைப்பாரே. 47

வேரானகேசரமாமதின்மேல்உண்மை வேதாந்தத்திரிகோண மூல தாரஞ், சீரான சுழினையிலே சுத்திசுத்தி தெளிந்துபார் பிங்கலையில்ரவியி னோட்டந், தாரான விடகலையேசந்திரன்வாழ்க்கை சாதகமாய்ப் பூரித்துக் கும்பத்துத்தான், பாராதேரேசித்தார் பண்பதாகும் பாங்குபெற வாசி தனைப் பகரக்கேளே. 48

கேளப்பாபூரகத்தால் மாத்திரைதான்தோண்டு கெடியானகும்பகந் தான் மாத்திரைதானுலுவாரப்பா ரேசகத்தால் மாத்திரைதானென்று வளமாக இப்படியே வாசியோகம், நாளப்பா வருஷமொன்றிற் சித்தி யாகு நலமானவாலையப்பா மவுனஞ்சொல்வாள், கேளப்பா வாராது வொருநாளுந்தான் கூறினேனண்டாண்டங் கூறினேனே. 49

கூறினேனிப்படியே தேவிபூசை கொடுத்தாக்கால் தாயங்கே வார்த் தைசொல்வாள் மீறினேன்தேவிக்கு நெய்பாலன்னம் வெண்டயிரு மண்டமொடு காய்கறிகளெல்லா, மாறியேபடைத்துவைத்து பலகாரங் கள் வகையாகப்படைத்துவைப்பாய்மாங்கிஷங்களோடு, தேறியே நைவேத்தியஞ் செய்தபின்பு தீபதூபங்காட்டிச் சங்கமூதே. 60

சங்கமொடு செயக்கண்டி மணிபிரேமைச சத்தமுமுந்ஞ் சின்னங்கள்சாமத்தாளம், பொங்கமாய் சோடசங்க ளுபசாரங்கள் செய்து போதமெல்லாம் நிறைந்திருந்த பிங்கான்தன்னை, அங்கமுடன்றயகரத்திற் கொடுத்துகொண்டு வங்கையிலைனைத்துப் பாதனில்வைத்து, கொங்கையிட நடுவாக பூசைசெய்து கொடுத்திடுவாய் கற்பூரதீபந்தானே.()

பரிகலசேடங்கொள்ள.

தானனை மந்திரத்தைதமா றுகால்வாங்கி சார்வான குருநாதன் கரத்திலேந்திப், பானைமகியமுதமாமென்றெண்ணி பரமகுருநாதனுட பருவமையத்தே, கானனாமகளமந்திரத்தை கருணைபெறவே யுட்டியசை மாமற்கொண்டே, னைனனதெவிகைகயிற் கொடுக்கக்கொள்வ ளேகமாயவள்பொசித்த சேடம்வாங்கே. 52

வாங்கியல்லோகுருநாதன்பின்புகொள்வார் மறுபடிதான் மீஞ்சினதோர்சேடமெல்லாந், தாங்கியல்லோ சிஷாருக்குக்கரத்திலீவார் தன்னையெனும் பிள்ளைகட்குகயவாய்ப்பேச, தேங்கியே தெண்டனிட்டு பதங்கைகொண்டு தேவிதனைப் பூசித்து பூதிசாத்தி, பாங்குடனே துளசிபத்திரங் தலைமேற்கொண்டு பாங்காகமந்திரத்தை யுட்கொள்வாரே. 53

வாரமுடன்மந்திரங்கள்கொண்டபின்பு மாயிக்குப்படைத்தபடைப்பெல்லாம்வாங்கி, சீராக நிர்மாலியஞ்சுத்திபண்ணி சிறப்பாகவெல்லோர்க்குமன்னமீந்து, சாரமுள்ள பலகாரங்கனிகளீந்து தானேமுதற் பிள்ளைவரை தாகந்தீர்த்தே, பாரமெனும் காதாதியொழிந்தார்சிஷர் பத்தியுடன் குருநாதன் பரங்கொண்டாரே. 54

பரங்கொண்டார் வாலையெனும் பெண்ணாப்பா பாவமெல்லாமெய்தவுண்டாள் மோட்சம்பெற்றாள் தரங்கொண்டபூசையிது கிறிகைபூசை சாதித்தால் மவுனமிதுயோகபூசை, திரங்கொண்டே செய்யலாம் வழுவாராது செல்லாட்டாற் சிறப்போஞ்சித்தியில்லை, வரங்கொண்ட புண்ணியர்க் கிந்நூல்கிட்டில் வகையாகக் கைமுறையாய்ப் பூசிப்பாரே. 55

பூசிப்பாரிப்படியே மவுனத்தாலே புகழாகமனத்தாலே தியானஞ்செய்து, பூசிப்பார் சொர்னகும்பந்தாய்பெண்ணிப்புகழாகஸ்தன்னியத்தின்பதத்திலேதான், பூசிப்பார் பொற்றகட்டில் விக்கிரத்தில் பூமேருகொண்டகையிற் சாளக்கிராமம், பூசிப்பாரிதுக்கெல்லா மனமுறைத்தால் புகட்டலாம்புருவமய்யம் புகட்டலாமே. 56

ஆமப்பா சிவயோகிசெய்யும்பூசை யவர்க்கெல்லா மனமுறைக்குதியானம்பண்ணு, வோமப்பாலோகருக்குமனமுறைக்கமாட்டா வுத்தம

னேயதினாலே வெளிப்பூசை சொன்னேனும் நாமப்பா வொளிக்கறியோர்
தேவிபூசை நலமாக சொல்லிவிட்டேன் வடுகன்பூசை, தாமப்பா வர
வரவே வெவ்வேறே பூசைசாதிப்பார் சடாதாரவடுகன்தானே. 57

தானென்ற மூலத்திலாறு கோணத்தில் சமமான யிடகலையின்கீழ்
கோணத்தில், வானென்ற நிர்வாணி மவுனரூட்ச மனக்கியானத்தியான
மதுவலுக்கப்பூணி, தேனென்ற வபிஷேக மெல்லாஞ்செய்து திறமாக
வஸ்திராபரணஞ் சாத்தி, மானென்ற புஷ்ப பரிமளங்கள் சுகந்தம் வாச
முறுங்கிரீடம்வைத்து வடமாலைசாத்தே. 58

சாத்தியபின் கயிலாச சட்டமுனிநாதன் தருவான சுந்தரானந்த
ரோடு, தேத்தியபின் னடுக்காவலாறுரூட்சஞ் செப்பினேன் றாலத்தே
யலக்கவென்று போற்றியே பொங்கலிட்டுக் காய்கறிகளெல்லாம் பொ
றித்துவைத்து மாங்ஷ்மூமதுக்குடமும்வைத்து, நாற்றிசையும் பந்த
னஞ்செய்யிற் கோணத்துநடுவிலே வங்கென்றுநாட்டிடாயே. 59

நாட்டியபின்தாம்பூலம் பால்பழங்கள் நற்கனிகள் பரமானமுடன்
படைத்து, தாட்டிகமாய் தீபமொடு தூபங்காட்டி சகலமெல்லாம் நெய்
வேத்யமானபின்பு, பூட்டிவாய்மௌனியோசைசங்கினோசை புகழானநாத
செயகண்டியோசை, மீட்டியே பிரணவமே யிதுக்குள்ளாதி மிகுத்த
மயேஸ்பரமூலம் நிற்வாணியென்றே. 60

வடுகன்பூசை.

என்றேது வடுகாயாசுவாஆவென்று வென்னசொல்வே றாற்றெ
ட்டுவுருவிற்சித்தி, நன்றான மூதண்டலேகியத்தை நலமானமவுனத்தால்
தொடுதுவாங்கு, சென்றாடும் யோகபடா வுள்ளேகொள்ளுஞ் சித்தனும்
வடுகனங்கேயிருத்தஞ்செய்வார் வெற்றியுள்ள அஷ்டமாசித்தியெல்லாம்
விளங்கவே கைவசமாய் விள்ளுவாரே. 61

கணபதிபூசை.

விள்ளக்கேள் கணபதியின் பூசைதன்னை வேதாந்தமூலத்தி லாறு
கோணத்துள், பிள்ளையைக்கேள் பின்கலையின்மேற்கோணத்தில் பிலக்க
வேகணேசனுட ரூட்சஞ்செய்வாய், வள்ளலே சகலவபிஷேகஞ்செய்து
வஸ்திராபரணங்கள் பரிமளங்கள்சாத்தி, ஒள்ளியதோர் முடிசூட்டித்
தங்கப்பூணுலணியே யிதிற்ரூட்சமுறைக்கச்செய்யே. 62

செய்யப்பா பொரிகடலை வடைதேங்காயும் செவ்விளநீர் கரும்பு
வால்பரமானங்க, ளுய்யப்பா சக்கரைதேன் கனிகளோடு வுத்தமனே
தாம்பூலமெல்லாம் வைத்து, மெய்யய்யா கமலமுனிபிட்சா வேதமுனி

மூவரையுங்கூடப்பண்ணி பையப்பாசகலமது நெய்வேத்தியம்பண்ணி பண்பாகதீபமொடு தூபங்காட்டே. 63

காட்டியேமணியோசை சங்கவோசை கனமானசேகண்டிநாதவோசை, யூட்டியேபிரணவமுமுதலாயாவும் அவ்வுமவ்வுஞ் சிறீறிஞ் சிவாய கணபதியே நாட்டினமா வென்றோது மவுனத்தர்லே நாதாந்தமூலத்தி லொளிகாண்மட்டுங், காட்டியே வாசியுடயோகம்பாரு கணேசனங்கே வார்த்தைசொல்வார் சித்தியாமே. 64

நந்திபூசை.

சித்தியாமஷ்டகாமமெல்லாமப்பா செகசால மந்திரயிந்திரசாலமெல்லாம், முந்தியாம்நந்திசர்பூசைகேளு மூலத்திலறுகோணமேற்கோணத்தில், பத்தியுடன்மவுனத்தால்நந்திமூர்த்தி பாமகுரு சூட்சமங்கே திருமூலாங்கே, சத்தியானந்தாங்கே மூவரையும்போற்றி சகல வபிஷேக முறை வைத்திட்டாயே. 65

வத்திராபரணங்கள் புட்பபரிமளங்கள் வளமானமுடிசூட்டி தியானம்பண்ணி, பத்தியாய் பால்பழங்க ளிளநீர்தேங்காய் தோன்று பாமானங்கள் பலகாரங்கள், வெத்திபெறச் சக்கரைநெய்வேத்தியஞ் செய்து விளங்கவே தாம்பூலமிகவேவைத்து, அத்தீபதூபமொடு கற்பூராலாத்தியன்பாகமவுனத்தே பூசைபண்ணே. 66

பண்ணப்பா மணியோசை சங்கவோசை பரத்திலே நந்திதனைத் தோத்திரமே பண்ணு, வெண்ணப்பா பிரணவமுமிதனுள் மூலமென சிவாநந்தியேநமாவென்றோது, வுண்ணப்பாமூலத்தில்நந்திதானு முரைத் தாக்கால் மவுனத்தே தெரிசினையுமுண்டாம் விண்ணப்பா மூலத்தே யாருஞ்சொல்வார் வேதாந்தசாஸ்திரத்தை வெளியிட்டேனே. 67

யோகநிலை.

வெளியொளியாய்நின்றதடாசுழினை நாடிவேதாந்தவாதத்தே நிற்குணத்திருடி, யொளியான விழியாலே மருட்டிப்பாருவுத்தமனே கண்கடுத்தலுருட்டிப்பாரு, தெளிவான சிவனங்கே வார்த்தை சொல்வார் சித்தியொடு முத்தியெல்லாஞ்சேரச்சொல்வார், வளியானயசலை கொண்டு இடைகலைபிற்பாரு மகத்தான பூரணத்திலவங்கென்றாதே. 68

ஊதடாவங்கென்று கும்பித்தேநில் ஓகோகோசிங்கென்று ரேசகஞ்செய், வாதடாவாலைவிட்டாலொன்றுமில்லை வாயுத்தம்பனக் குளிகை வாயில்போடு, போதடாமூதண்டலேயங்கொள் புருவமய்யத்தமர்திறக் கும்புக்காலம்பின், னேதடாவாதுவட்டும் சுழினையாரு வேதாந்தவொளி கண்டாற் சித்தியாமே. 69

### சுப்பிரமணியர்பூசை.

ஆமப்பா சுப்பிரமணியன்பூசைகேளு அந்தரமாமூலத்களறுகோ
ணத்துள், மோமப்பா விடகலையிற் சரவணபவாவென்றிட்டு ; ஙாமப்பா
மேற்கோணத்துள்ளே, வோமப்பா சரவணபவாவென்றிட்டு வுள்ளறை
யில் விந்திட்டுவங்கிங்கிட்டு தாமப்பா சண்முகமாஞ் சுப்பிரமணியன்
தன்னையே சூட்சஞ்செய் தியானத்தாலே. 70

தியானத்தா லபிஷேகமெல்லாஞ்செய்து சிவந்த வஸ்திராபரணஞ்
சுகந்தஞ்சாத்தி தியானத்தால்முடிகிரீடம் பரிமளங்கள் சிறக்கவே மவு
னத்தால்திரமாயூஹு, தியானத்தால் பரமானம் பால்பழந் தேங்காயுந்
தேனுரு பலகாரந் தாம்பூலமுதலாய், தியானத்தால் நெய்வேத்தியஞ்செ
ய்துகொண்டு தீபமொடுதூபமிடு தோத்திரஞ்செய்யே. 71

செய்யவேமணியோசை சங்கவோசையே கண்டிநாத ஒலிகின்ன
மூது, வையாடசோறுகறிபானம்அரு கண்ணரிடைகாட்டார் மூவமர
மூலசூட்சன், கையடா பிரணவமும் வங்சங்கோடுங்சுப்பிரமண்யா நமா
வென்றூது, மெய்யடா வேல்லனங்கே கிருத்தஞ்செய்வான் வேண்டிய
தோர் சித்தியெல்லாம் விளம்புவாரே. 72

### தட்சிணாமூர்த்திபூசை.

விளம்புவேன்தட்சிணாமூர்த்திபூசை வேதாந்தமூலத்திலறுகோணத்
தில், தளங்கினேன்பின்கலையின்கீழ்கோணத்தில் வட்டத்தில்திரிகோண
ராசியென்றிட்டு, குளம்பாதேஎன்னுடனேகோரக்கநாதன் கூறினேன்
குறுமுனி யானந்தரோசடு, தளம்பெறவே மூவரையுஞ் சூட்சஞ்செய்து
சாதித்தால்மவுனமங்கே தடைகொள்ளாதே. 73

### மானதபூசை.

தடையில்லா மனத்தாலே மானதம்பூசைசாதித்தால் க்ஷணத்துள்
ளேசித்தியாகு, மூடையவனு மபிஷேகமெல்லாஞ் செய்து வுற்றதோர்
வஸ்திர ஆபரணம்புஷ்பம், விடையமாம் பரிமளங்களெல்லாஞ் சாத்தி
வேணபடி பரமானமிரசவர்க்கங்கள், திடமுறவே தாம்பூல முதலாய்க்
கொண்டு தீபமொடுசாம்பிராணி தூபங்காட்டே, 74

காட்டியேகர்பூரம்பணிவாரப்பா கலங்காதே மணியோசை சங்கி
னோசை, சூட்டியேசெகண்டிநாதவோசை துய்யதாம்பூலம் நெய்வேத்தி
யஞ்செய்து, பூட்டியே தோத்தரிக்க பிரணவந்தான் புகலுவேன் மாவெ
ன்றுபிரணவத்தாதி, ஙாட்டியேமறவாதேயதோமுகத்தில் நலமானசிறீயு
மகத்தியாவென்றோதே. 75

அகத்தியமாரிஷிகமாவென்றேது அட்டசித்திதனையீவார்குளிகை யீவார், அகத்தியரோ காஷாயம் வேடமீவா ரப்போது சித்தரெல்லாங் கைக்கொள்வார்கள், அகத்தியரைத் தெண்டனிட்டு மேதுசொல்வார் யாருக்குந்தடையில்லை அரசேயென்பார் அகத்தியர்தா மெக்கியத்தில் பிறந்தயோகி ஆயிரத்தெட்டண்டமெல்லா மாணையாச்சே. 76

சண்டிகேசர்பூசை.

ஆச்சப்பா மூலத்திலறுகோணத்துள்ளவில்லாப் போகரொடு சண்டி கேசர், வாச்சப்பா திரோதாயிகீழ்கோணத்தில்வளமான கருவூரானந ரோடு, பாச்சப்பா மூவரையுஞ் சூட்சஞ்செய்து பரிவாக வபிஷேகமெல் லாஞ்செய்து, நீச்சப்பா சகலவஸ்திராபரணஞ்சாத்து நீதிபெற பரிமள ங்கள் சுகந்தஞ்சாத்தே. 77

சாத்தியே முடிசூடிபால்பரமானங்கள் சக்கரைதேங்காயொடு பல காரங்கள், நீத்தியே தாம்பூலநெய்வேத்தியஞ்செய்து நேசமுடன் தூப தீபங்களோடு, போத்தியே மணியோசை சங்கிஞோசை புகழான செய கண்டிநாதவோசை, தோத்திரமாமூவமெனவுமாங்வாங் தரிசணடி கே சரயநமாவென்றேதே 78

ஓதப்பா குபேரனங்கே நிதிகளீவார் ஓகோகோ வாதமெல்லாம் வா காய்காணும், வாதப்பாவருமையெல்லாமோடிட்போகு மகத்தானயோக மொடு ஞானம்ரெண்டும், போதப்பா செல்லாது அஷ்டசித்தி பொன் னோடு வெள்ளிவித்தைரெண்டுஞ்சித்தி, யேதப்பாமூலத்தே சண்முகமாம் பூசையிதுவுண்டாய் தேவியைப்பின்பூசைசெய்யே. 79

செய்யவேதேவியங்கே வார்த்தைசொல்வாள் தேகமெல்லாமுத்தி பெறமார்க்கஞ்சொல்வாள், அய்யனே நாங்களெல்லாஞ் சிவனெங்கேயெ ன்று ஆத்தானைப் பூசித்தோ மன்பாய்ச்சொன்னாள், மெய்யான கடைக் கண்ணில் விரலழித்தி நெருட்டினால் சிவனங்கே காண்பாயென்றாள், மையான மணம்புணவே னுமென்றால் வளமானசுழிமுனைதனைப் பற்றென் றாளே. 80

பிரமதேவர் பூசை.

பற்றுசைவைப்பதற்குபிரமதேவன் பாங்குசொல்வேன்சைவிதினன் ருயக்கேளு, சித்தான நாற்கோண மந்தாரபீடத்தேவி சாஸ்வதியோடு பிரமதேவர், முத்தானவுள்ளத்தே மனத்தியரனமூடியல்லோ பிரமற்குச் சூட்சஞ்செய்து, சுத்தானதூலம்விட்டு யோகம்பாரு சகல வபிஷேக மெல்லாம் செய்தபின்பே. 81

பின்புநீவத்திராபரணம் புட்பம்பிரளாமே பரிமளங்கள் ளெல்லாஞ் சாத்தி, இன்பமுடன் பதமான பால்ரசவர்க்கமிளநீர் சக்கரை தேங்காய்

பலகனிகளோடு, முன்பாகவைத்தங்கே தாம்பூலமுதலாய் முழக்கமு
டன் நெய்வேத்தியஞ் செய்தபின்பு வன்பாகதூபமொடு தீபங்காட்டி
யஞ்சோடே மூன்றெழுத்து அங்கென்றோதே. 82

ஓதவே பிரமசிருஷ்டிதன்னையிவா ருத்தமனே அஷ்டசித்திகைக்
குள்ளாச்சு, மாதவேசரசோதியென்றேயோத வாச்சுதடாகற்பன்ன பா
ஷையின்விஸ்தாரம், வேதரிசினன்பார்களிவர் புவனையென்பார் மேலுமிவ
னறியாதவறிவுமில்லை, யாதரவாய்ப் பூசைசெய்து தீர்ந்தா லப்புறத்தே
மணிபூரகத்தைதப்பாரே. 83

## விஷ்ணுபூசை.

பாரப்பா பிறைகோண மகாரபீடம் பாங்கானவிஷ்ணுவு மகாலட்சு
மியுமொன்றாய், சேரப்பா யிருந்தவர்தாமொன்றாய் சிந்தையிலே மவுன
மாய்சூட்சஞ்செவ்வாய், சாரப்பா வபிஷேகமெல்லாஞ்செய்து சகலவஸ்
திராபரணஞ்சுகந்தபுட்பம், மாரப்பா பரிமளங்களெல்லாஞ்சாத்தி வள
மாகப்பரமானம்பாலும் வைத்துவையே, 84

வையப்பாரசவற்கம் பலகாரங்கள் வாகானதாம்பூலம்பழந்தேங்கா
எல்லாஞ், செய்யப்பா நெய்வேத்தியஞ்செய்தபின்பு திறமாகதூபமொடு
தீபங்காட்டி, மெய்யப்பாவெட்டெழுத்துஞ் சாத்தியங் கொண்டோது
விளங்கவே லட்சுமியும் விஷ்ணுமாவாய், பொய்யப்பா சொல்லவில்லை
புருவமய்யம் பூட்டடாதிறவுகோ லசவைதானே. 85

தானென்ற யோகத்தில் வாசியார்க்கில் தடையறவே மவுனமூன்
னுங்கண்டத்தேதான், கானென்னசுழினையடாபிடரிகண்டங்கை முறை
தானிவ்வண்ண மாருஞ்சொல்வார், வானென்ற கேசரியமவுனமுட்டில்
மக்களே சிவயோகம் வழியேகாணு, மூனென்ற மந்திரமே யனுதிபீட
முரைத்தாக்கால் மவுனமதுஞானமாமே. 86

## ருத்திரபூசை.

ஆமப்பாவனுகதத்தில்முக்கோணத்தி லப்பனேனடுவேகேள் சிகா
ரபீடம் ஓமப்பா ருத்திரனும் பார்வதியுமாக ஒளிபோலே யிருந்தார்க
ளுள்ளத்தேதான் நாமப்பா மனத்தியானபூசைசெய்தோம் நன்றாக வபி
ஷேகமெல்லாஞ் செய்து வாமப்பா வஸ்திராபரணம் புட்பம் மலரான
சுகந்தபரிமளங்கள் சாத்தே. 87

சாத்துவாயுருத்திரனைச் சூட்சஞ்செய்து தாம்பூலம்பால்பரமா னங்கள்கனிகளோடு ஏத்துவாய் தீபமொடு தூபங்காட்டே யேகாந்த புருவமையத்தேறிப்பாரு, தோத்திரிக்க எட்டெழுத்து சாத்தியங் கொண்டோது துரியமென்றசுழித்தியிலே மனம்புகாது, நாற்றிசைக்கு ஞ்சங்காரகர்த்தனுவாய் நாதாந்தசுழினையிலே நாட்டுநாட்டே. 88

மகேஸ்வரபூசை.

நாட்டாதபேருக்குவாதமென்ன ஞானமென்ன யோகமென்ன அறிவங்கேது, சூட்டாதலட்சியந் தானிருந்தாலேது தொடுகுறியாஞ் சுழினைநந்திகாணுதற்கு, காட்டாதேயோகமொடு ஞானமிரண்டுங்கசடனென்ற பிள்ளைகட்குச் சொல்லவேண்டா, மூட்டான விசித்தியறு கோணந்தன்னில் முத்தியாம் வகாரவிதனை முறையைக்காணே. 89

காணப்பாமயேசன மயேஸ்பரியுமார்க்கம் கலந்து நின்றகண்டமதுசுழினைநாடி, தோணப்பாவிது சூட்சந்தூலமகேனு சொல்லுகிறேன்கழுத்துள்ளே பிடரிகண்டம், வீணப்பா தூலமது வேறிப்பாருவே தாந்தவந்தத்தே யாறும்பாரு, ஆணப்பாவிதுவல்லோ சூட்சமார்க்க மொளிகண்டால் வெளியாகு மூற்றுப்பாரே. 90

மவுனபூசை.

பாருநீ மனத்தியான மவுனபூசைபண்பாக வபிஷேகமெல்லாஞ் செய்து, சாருவாய் வஸ்திராபரணம்பூட்டி சகல புஷ்ப பரிமளங்களெல்லாஞ்சாத்தி, நேருநீயசங்கமயேசுவரசூட்சம் நினைவாலே லட்சியத்தினடுக்கைப்பாரு, காருநீரசவர்க்கம் பலகாரங்கள் கட்டாகத் தீபமொடு தூபங்காட்டே. 91

காட்டியே நெய்வேத்தியஞ் செய்தபின்பு கயிலாசதேகமதாந்தூலசூட்ச, முட்டியே யெட்டெழுத்துஞ் சாத்தியங் கொண்டோது முத்திபெறவாசியொடுவாதம் யோகம், நாட்டியே கோபமென்ற அக்கினி தான்போச்சு நலமானகற்பமெல்லாஞ்சித்தியாச்சு, பூட்டியேயட்டகர்ம மவர்க்கேயாச்சு புகழானவாதமங்கே பொருளுமாச்சே. 92

ஆச்சப்பாலட்சியமே இடமதாச்சு வாகாரமூன்று மொன்றாய்சுழி முனைநாடி, வாச்சப்பா சுழிமுனையிலி லட்சியமாம்வீதி மவுனமுற்ற வாலையங்கே கொலுவிருந்தாள், பேச்சப்பா இவள் பூசைவாம பூசை பிலப்பதற்குதவனத்திற்கண் முகமாம்பூசை மூச்சப்பா வற்றிடத்தே சூட்சபூசை மூவுலகாம் வெளிப்பூசை யொளியைக்காணே. 93

காணப்பா வாங்கிலையேலலாடபீடங் கயிலாசபுருவமையஞ்சக லருக்குஞ்சித்தி, பூணப்பா மவுனமிட்ட பிறைபொற்கோணம் புகழா ணநடுவிருந்தாள் சதானந்திமணியுந், தோணப்பா யிருவருந்தானொளி யாய்நின்றார் சொர்க்கமென்ற பதவியிது மவுனத்தோர்க்கு, வீணப்பா மற்றதெல்லாங்கிறிகையாச்சு மேலாமாதாரமென்ற சூட்சந்தானே. 94

சூட்சத்தைப்பார்த்தறியார் சொன்னாலுந்தான் தூலத்தேபார்த் தறிவாருலகமாடு, சூட்சத்தையாராலே சோதிக்கப்போம் துரியமென்ற வுதவுத்தே சூட்சமெல்லாஞ், சூட்சத்தை யாராய்ந்து பூசை செய்தேன் சுகமாகவாய்க்குள்ளே குளிகைபோட்டு, சூட்சத்தை யபிஷேகமெல் லாஞ்செய்து சுகந்தவஸ்திராபரணஞ் சூட்சஞ்சாத்தே. 95

சாத்தினேன் சதானந்தி சூட்சஞ்செய்து தாய்பேசப் பூசைசெய் தேன்பரமானம் வைத்து, சேத்தியாய் பால்பழஞ் சக்கரை பலகாரங்க ளிட்டையிலே நெய்வேத்தியமார்க்க மீந்தேன், போத்தினேன் தூப தீபங்கள் காட்டி புகழாகவெட்டெழுத்தாற் சாத்தியங்கொண்டே, தே த்தினேன் தேகமடா யோகத்தாலே சிறப்பான குளிகையிற் கைக்குள் ளாச்சே. 96

கைக்குள்ளாஞ் சகலசித்துங் கர்த்தாவேயென்று கண்டுகொள்ளா தொளிப்பார்க்கப் புருவமைய மெய்க்குள்ளே மேலாறுங்கீழாறுந்தான் வேதாந்தசதாசிவத்தின் பூசைமார்க்கம், பொய்க்குள்ளாய்ப் போகாது போதஞ் சொன்னேன் புத்திகெட்டசித்தர்களே புகலக்கேளு, முக்கிய மூடன் பராபரமாம் பதத்தில்நின்ற முத்தியுமே லன்றான பூசை கேளே. 97

கேளப்பா சரிகையொடு கிரிகையோகம் கேவலமாஞ்சாலோக சாமீபந்தான், நாளப்பா சாரூபங்காணமூன்று நலமான வெளிப்பாரு மொழிப்பாழுந்தான், வேளப்பா சித்தரொடு சித்தானந்தம் வேறுவித மாகவே காணுதப்பா, வாளப்பா இடகலையின் கலைசுழிமுனையோடுமகா கோடிமூன்றுவிதமாகக்காணே. 98

காணப்பா இதுகடந்தால் சாயுச்சியமென்பார் கண்வெளுத்தநிற் குணத்தின்பரந்தானென்பார், தோணப்பா ஞானமென்பார் கேசரி தானென்பார் சொல்லுக்கு மெட்டாதபொருள்தானென்பார், ஆண ப்பாவல்லவென்பார் பெண்ணே என்பார் ஆச்சரியஞ் சச்சிதானந்த மென்பார், பூணப்பா வேதாந்த வந்தமென்பார் பொற்சடையோன் கோலமுற்றபூட்டென்பாரே. 99

பாரப்பா இதுவெல்லாந் தூலப்பேச்சு பாராபரத்தைச்செல்லு கிறேன் சூட்சமாக, வாரப்பா சொல்லாகள் நூலிற் சொல்வராச்

சரியஞ்சிரசு நடுசெத்தவெள்ளஞ், சாரப்பா தாமரை பூவாயிரத்தெட்டி தழாய் தத்துவங்கள் சூழ்ந்து நிற்கச்சக்தியெட்டு, வாரப்பாநாடியெ ல்லாஞ் சூழ்ந்துநிற்க வாழுமே நாற்பத்து முக்கோணந்தானே 100

தானென்ற நாற்பத்துமுக்கோணந்தான் தாமரைக்காயதின்மேலே நால்வாசலாய், வானுலுஞ் சதானந்தி பலகையாக வாசமுறுமனந்த படநாகமெத்தை, பானுவதின் மீதிற்பராபரந்தான் பரையோடு கூடியொன்றுயொளியாய் நின்றார் தேனுவமுதர்களையுண்ட நாதன் சித்தியெல்லாமிவராலாம் பூசை பண்ணே. 101

பண்ணப்பா குருசூட்சங் கணேசபீடம் பரிவான பிரணவத்தின் பீடவட்டம், ஒண்ணப்பா மவுனமென்பார சுழிமுனைமேலே ஓங்கோ கோபுருவமைய பொளியைப்பாராய், விண்ணப்பா விந்துவல்லோமவுன சூட்சம் வேதாந்த சித்தாந்தமெல்லாமாகும், கண்ணப்பா பற்றியல் லோநந்திகாணும் கலங்காதேசுழிமுனையிக் கண்கொள்ளாதே. 102

கண்கொள்ளா திருப்பதென்ன சூடுசூடு கண்மூடியுருட்டிப்பார் கடுப்பத்தீரும், விண்கொள்ளா திருப்பதுண்டோ வேதாந்த சித்தி மேலெழுந்த வந்தமல்லோ பூரணந்தான் பண்கொள்ளாரிசைகொள் ளார்பாடுநூலில் பரிபாஷைபோலாகும் பாட்டெல்லாந்தான், நண்ண ப்பா மவுனமடா பூசைமார்க்கம் நலமாக வபிஷேக மெல்லாஞ்செய்யே.

செய்தபின்பு வஸ்திராபரணம் புஷ்பம் சிறப்பான சுகந்தபரிமளங் கள்சாத்தி, செய்தபின்பு பால்பழம் பாயானஞ் சர்க்கரைதேங்காய் பழ ரசவர்க்கம் பலகாரங்கள், செய்தபின்பு தாம்பூலமுதலாய்ச் செய்து தீபதூபங்காட்டிகருணை கூறச், செய்தபின்பு மணியோசைசங்கவோ சை சேகண்டிநாத ஓசையுடன் தோத்திரம்பண்ணே. 104

பண்ணப்பா அறிவோமஞ்சங்கிவாயா பராபரதேவாய் நமாவென் றோது, விண்ணப்பா சுழிமுனையிலொளியே காணும் வேதாந்ததத்து வங்களில் வெளியாகக்காணு மொண்ணப்பா பராபரமாமனமு மொன் ணுமொல்த்துப் பார்த்தம்மனமாங் குளிகைரசம்நேரும், கண்ணப்பா வப்பவல்லோ வெல்லாங்காணுங் கயிலாச சொர்க்க மென்பார கர்ண லாசசே. 105

ஆச்சப்பா வஷ்டசத்தியெல்கேட்கு மஷ்ட பாலாள் கணங்க டெல்லாங்கேட்கு, மாச்சப்பா பஞ்சகர்த்தாளேவல்கேட்கு மகத்தான வரதாரபூசைமார்க்க, மூச்சப்பா வற்றிடத்திற் சித்தியாகு மூலமட குளிகையினுற் சித்தியாகும், பேச்சப்பா இதினலே கற்பஞ்சித்தி பேய் மக்களிறப்பதெல்லா மிதினுற்பாரே. 106

## சிதம்பரபூசை.

பாரப்பா சிதம்பரத்தின் பூசைகேளு பண்பான ரவிவட்டமெட்டு மிட்டு, நேரப்பா வெழுவீதிக்குள்ளேகேளு நேராகக் கும்பமுனி தீட் சைக்குள்ளே, சாரப்பா இதனுட்டவகையைச் சொன்னேர் சார்வறிந்து வீதிதொறுந் தானேயிட்டு, காரப்பா வஞ்சுபத்தோடக்காமு மிட்டு காணவே நடுவெளியோமாமென்றிட்டே. 107

இட்டபின்பு வட்டத்தின்மேலேகேளு என்மக்காள் மூன்றுவரை சதுரமாக, இட்டபின்பு உள்வீதிக்குள்ளேகேளு இளங்கவேயஷ்டகெ சமஷ்டகரிகாகம், அட்டசத்திபாலரொடு வீசமிட்டு வரகாகுமவ்வீதிக் குள்ளேகேளு, திட்டமொடு கணேசனொடு கந்தன் சண்டன் திறமான வடுகனொடு துர்க்கைதானே. 108

தானனகேஷத்திரனுங் கிரீடிபிருங்கி தட்சிணமூர்த்தி ரிஷிக ளோடு, தானன சித்தரொடுதேவரோடு சாதிப்பா யிவர்களிடவீசமிட் டு, கோணன லிங்கத்தில் நேராய்நந்தி குருபீசங்கொடிக் கம்பம் பூசமிட் டு, வானனவஷ்டபெலி வீசமிட்டுமவுனமாய் நடுவரையில் சிதம்பரத் தைவையே. 109

வையடாசிவகாமியவட்குச் சூட்சம் வளமாகத் தியானித்துவபி ஷேகமெல்லாஞ், செய்யடாவக்கிராதிபாணம் புஷ்பம் சிறந்த பரிமளசு கந்தமெல்லாஞ் சாத்தி, வையடா ஆனந்தநடராய சூட்ச மவுனமென்ற சுழிமுனையில் மனத்தைப்பூணி மெய்யடா பரமானம் பால்ரசவர்க்கங்க ள்விளங்கவே மிகபடைத்துமேவுமேவே. 110

மேவடா தாம்பூல முதலாய்வைத்து விளங்கவே தூபதீபங்கள் காட்டி, மேவடாமணி நாதஞ்சங்கநாதமேலான செயகண்டிநாதவோ சை, மேவடாதோத்திரத்தையோ மென்றேதான்விந்து ரதத்துடனே வவ்வுஞ்சிறீயு, மேவடா அவ்வுஙகிலியுஞ்சவ்வு மேலான சிவாயமென் றுஞ்சிவாயமென்னே. 111

என்னவே சிதம்பரதே வாயநமாவென்று இஷ்டமுடன் சேவிக்க ப்புருமையத்தே, புனவேயொளிகாணும் வெளிமனமு மொன்று பூணவேகண்டாக்கால் வாதசித்தி, யன்னவேகாயசித்தி குளிகைசித்தி யப்பனேமவுனசித்திவர்சித்தி, மன்னவேகாயசுத்தி யோகசித்தி மவு னத்தே ஞானசித்திகற்பஞ்சித்தே. 112

சித்தானவஷ்டசித்தி கைக்குள்ளாகுந் தேகமெல்லாங் கயிலாச தேகமாகும், பத்தானரிஷியாகு மனந்தகோடி மண்டானயுகங்கடிகை யமூர்தஞ்சிந்து, மகத்தான வுதாதேபாயுபாயும் வலமாக வெட்டே

ட்டாந்திருவிளையாட்டாடுங், கொத்தான நடராசர் திருநடனஞ் செய் வார்கோலங்கள் பலரூபங்கொடுக்குங்கூடே. 113

கூடுகட்டிக் கொண்டவர்க்குப் பஞ்சகர்த்தாள் குடியிருப்புநிசமா குமாதியந்தம், ஆடுமப்பா நடனமங்கே பூரணர்தா னறிவாலே இத்தனை யுமறியவேணும், வீடுகட்டிப் பிலப்பதற்கு சிவயோகம் வேணும் விள ங்கவே தம்பனமாங்குளிகைவேணும், பாடுபடவேண்டாங்காண் குளி கைசெய்தேன் பண்பான முதற்காண்டமைந்நூற்றுள்ளே. 114

உள்ளபடி தம்பனவாங்குளிகையொன்று உத்தமனே லகுவாகச் சொல்லிவிட்டேனை எள்ளளவுந் தப்பில்லை குளிகைபோட்டலென்மக னேயோகமெல்லாங் கைக்குள்ளாச்சு, வள்ளலே யோகத்தின்குறியைக் கேளு மகத்தான ரிஷிசித்தர் சொல்லார்சொல்லார்கள்ளங்களில்லாமற் சொல்லுகிறேன்கேளு களவில்லாப்பிள்ளைகட்கு விளம்பிடாயே.

## யோகக்குறி.

விளம்புகிறேன் பூரகந்தான் முப்பத்திரண்டு மேலான கும்பகந் தானறுமத்துநாலு, விளம்புகிறேன் ரேசகந்தான் பதினாறும் விரு தானமாத்திரைகளறியச் சொன்னேன்விளம்புகிறே னங்வங்வய நமசி யென்றுமீறி யொருதிரஞ் சொல்ல மாத்திரையொன்றாகு விளம்பிகி றேனிரண்டுதிரல் பூரமஞ்செய் வெளி யொளியை விழிமனததால் மேவி யூணே. 116

மேவியே கண்மூடி இறக்கிப்பாரு மின்னொளிபோல் காணுமங் கேநந்திமூலந், தாவியே கும்பகஞ்செய் மாத்திரைக்குதருகாதே ஓங் அங்அங்யநமசிவாவென்று கூவியேநாலுதிரங் கும்பித்தாற்பின் கூசா மல் பின்கலையில் ரேசகஞ்செய் சேவியே ஓங்சிங்நவாயநமா வென்று செப்பொருக்கால் மாத்திரை சிறுயாகுந்தானே 117

ஒன்றான மாத்திரையால் ரேசகஞ்செய் உத்தமனே யோகத்திலி துவேமூலம் நன்றானபதினாறு தரமுந்தீர்ந்தால் கந்தியுறுரேசகமே பௌரணையைத்தொட்டு சென்றாய் அமாவாசைவரைக்குந் தீருசிறப் பானபங்குனிசிததிரை இரண்டு - லன்றடா அமாவாசி ஓகந்தீர்ந்தா லப்பனேமதிதேய்ந்தாப்போலாப்பாரே. 118

பாரப்பா சோடசமாய் திருவோர்கருப்பண் பாகச்சொல்லிவிட் டேனுருஞ் சொல்வார் - சேரப்பாறிதுவல்லோ வாசியோகந்தீர்த்தப் பாகைமுறையாய் தீர்க்கமாட்டார் காரப்பா என்னுற்சச்சிவனுலு யொவ் வாகைகண்டபடி சொன்னேன் யோகசாதந்தீரப்பா ரேசகத்தில் மாத் திரைநாலானுல் திடமானமயிற் சாய்கை சென்றுகாணே. 119

காணப்பா மாத்திரைதானூற்றுப் பன்னிரண்டுங் கைமுறையாய் மாத்திரைதானன்று பத்தாறந் தீர்ந்தால் தோணப்பாபிரதமையாஞ்

சாதகமேசெய்யில் சோதனையாம் சதுர்த்திவரை சொல்லக்கேளு பேணப்பாவென் போலவெவருஞ் சொல்லார் பிலக்குமடா அஷ்டமியிற் பிலத்துப்பாரு - ஊணப்பா மாத்திரையின் குறியைச் சொன்னேனுத் தமனே அமாவாசைவரைக்கு மூன்றே. 120

ஊணடா பூர்வபட்சம் பிறகையின்மட்டும் ஓகோகோமாத்திரைதா நூற்றுப் பன்னிரண்டுங்-காணடாசம் பூரண்டுவிடுது மார்க்கங் கைமுறையாய்ச் சொல்லிவிட்டேன் வாசியோகம் - பூணடாபௌரணையைத்தொட்டே சம்பு பூட்டிடாயமாவாசை மறுநாள் மட்டும் - வீணடா மற்றதெல்லாம் யோகமாமோ விண்மதியந்தேய்ந்தாப்போ லிடைகலையுமாமே. 121

இடைகலையே சந்திரகலைமதி தேய்ந்தாப்போ லிதமாகப்பின்கலையைசேர்ந்து போச்சு-அடையாளஞ் சொல்லக்கேள் பதினாறுமாகமப்பனே இவ்வண்ணம் யோகந்திரு - விடையாதேசந்திரகலை தேய்ந்து போச்சு வேதாந்த நந்தியைப்போல் பேசலாச்சு - உடையாணிபோலிருந்தபுரியஷ்டகந்தான் ஓ முடிந்துபோச்சுதா உண்மைதானே. 122

உண்மையென்ற பூரணமே தெய்வந்தெய்வ முற்றகுலதெய்வமெனும்பஞ்சபூதம் வண்மை யென்புரியஷ்டமாய்ந்தபோதே மனம்பிலத்து பஞ்சகர்த்தாள் மாண்டாரெல்லாந் தண்மை யென்ற சுழிமுனையேயிடரியோர்ந் தாக்கியல்லே விழிமனத்தா லறியவுமாச்சு சணமயலாமயோகத்திற்கடுப்புத் தோன்றுங் கசக்கவிழியுருட்டிவிடுகண் கொள்ளாதே.

## யோகத்திற்குப்பத்தியம்.

கொள்ளடா மூதண்ட லேகியத்தைக் கொண்டுகொண்டு கேசரியில்வாசியூது-யெள்ளடாவானாலுந் தருகாவாசி இரதத்தின் தம்பனமாங் குளிகையாலே-வள்ளலே பூரகந்தானிவத்தேபூரி வளமாகநந்தியிலேகும்பித்தேதில்-சள்ளடாபின்கலையில் ரேசகந்தான் கற்றுச் சாகார் தகை முறையாய்ச்சார்த்துபாரே. 124

பார்க்கையிலேபயம் விரித்துச் செந்தூரத்தின் பரிவாகமண்டலமேகொண்டபின்பு - வேற்கையிலே வல்லாரையிதுக்குப்பின் கோளின் புதுல்பமிபண்டுமேற்று ஓந்க்கவகாரு-கார்க்கையிலே யறுசுவையுந் தள்ளிப்போட்டால் கடினமுஞ்லைவழலை தனைவாகுடபோது-மூற்கமாய் வையாசிமாதந் தொட்டு முழுமோசவழலைதனை வாங்குவாயே. 125

வாயகும்போத முறியிலே கஞ்சிக்கய் கொள்ருநவளுமாக இருபதுஞ்நாள்காண்டபின்பு - தேங்கும்போதமுளியிலே மிளசேயுன்னு சோரவேபசெமுதல் நூறுமட்டும் பாக்கும்பற மூதண்டகஷாயந்தன்னை பரி

வாகமாலையிலே பண்பாய்க்கொள்ளு-ஏங்காத நடுசாமப் பசுவின்பால் கொளிவ்வண்ணங்கை முறையாய் யியம்பிடவே. 126

இயம்பாத சேதியொன்று சொல்லக்கேளு இரவிலே நடுநேரம் பார்சோறுண்ணு தயங்காதே யித்தையெல்லம் விட்டுப்போட்டு தாறு மாருய்வேறே கற்பந்தின்னுமுயங்காது கூடிவரமாட்டாதப்பா முழு மோச மிவ்வளவுமறைத்தார் சித்தரியங்காதே இவ்வண்ணம் செய்த பின்பு திரும்பவுந் தானின்னமொரு சேதிகேளே. 127

கேள்ப்பா கடுக்காயுஞ் சிவதையுமாய்ச் சேர்த்து கெடியாகச்சம் பாகம்வெண்ணீர்கொள்ளு, நாளப்பா இருபது நாட்சென்றபின்பு நல மாகவசுத்தரந்தவனுபானதில் வாளப்பா சட்டைமுனிகற்பம் நூலில் வகையாகவேறு துறைமார்க்கஞ்சொன்னார் ஆளப்பா வப்படியேயண் டமட்டும்வர் சொன்னகைமுறையைக் கொண்டுதேறே. 128

தேறினலப்புரத்தே யோகங்கொள்ளு திரமான காந்தமுண்ணு வப்பிரகமுண்ணு, கூறினேனதின்பிறகு தங்கமுண்ணு கொள்கியபின் ஞுதமுண்ணு கெந்தியுண்ணு, மீறினேனதுவெல்லாந் தளசெந்தூரம் வேதாந்த அகஸ்திய முனிவயித்திய முந்நூறில், மாறிலாச்செந்தூர வைப்புச்சொன்னார் மடக்கறிந்து நெய்வரும்போதறிந்துபோடே. [illegible]

போடடா செந்தூரந்தின்றபின்பு புகழான உபசாரங்கள் செந்தூ ரந்தின்னுவிட்டா பிலத்துதடா வழலை முதற்கொண்டு விளங்கியதோ ரூபரசத்தின் செந்தூரமட்டுங், கூடடாமூதாண்ட கிஷாயந்தன்னை கொண்டுவரச்சலியாதே தோஷமில்லை, காடடாபோவானேனிதுமட் டுங்கொள்ள கற்பசித்தியானபின்பு குகையிற்செல்லே. 130

சொல்லவே சித்தாங்கே யெதிர்க்கமாட்டார் ஜெகச்சால சித்தரு க்குமெய்க்குருவாய் காணுகல்லடா வுன்தேகஞ்சாவு பொய்பொயக யிலாசதேகமாங் குளிகைபோகம் வெல்லுமேஞானத்தைக் கைக்கு ளாக்கும் வேதாந்த சிரோமணியே யென்றுசொல்வார் வில்லடாவ ளைக்கல்லோ அம்புதைத்தாப்போலும் விழிமனதேயுருவத்தே விளங்க வையே. 131

வையப்பாநந்திகுரு மூலர்போன் மகத்கான போகருக்குப் பிள்ளை யானேன் செய்யப்பா தீட்சையிலே முப்பத்திரண்டு செப்பினேன் நூலமடா கடைக்காண்ட சூட்சம், பொய்யப்பா சொல்லவில்லையாறு பத்தில் பூட்டினேன் சூட்சமதிற் சொல்லவில்லை மெய்யப்பா சூட்சம திற்சொல்ல விளங்குமடா சூட்சமொரு மூலம் ரண்டே. 132

ரெண்டானதே தென்றால் விந்துநாதம் நேர்ந்தசுழி முனையல் லோகந்திமூலங், கண்டேனென் மூலமங்கே பொருளாய்க் காணுங்கரு வழியாப் பிரமாணஞ் சொல்லக்கேளு, கொண்டாட சிவதீட்சைசூட்ச மாகுஞ் குருமூலஞ் சத்தியுட தீட்சையாகுந் தெண்டனிடுவார்களைப் போல்ஜெகத்தோ ரெல்லாந்தீட்சையிலே முப்பத்துரெண்டுங்காணே.

சிவதீட்சை.

காணடா சிவதீட்சை பதினாருச்சு கலையிலே சோடசந்தான் பதி னாருச்சு, ஊண்டா சிவதீட்சை யுரைக்கக்கேளு வுத்தமனே சூட்சமொ டுமூலம் ரெண்டுங், தோணடா செவிக்குறைப்பார் பாடலில்லை தொடு குறியாம் வாசில்யப்போலொழித்துப் போட்டார், பூண்டா மூலமுத லாறுதீட்சை புகழான ஓனிமாட்டில் தீட்சையஞ்சே. 134

அஞ்சோடுசிவ தீட்சை பதினாருச்சு அப்பனே சுழியென்றமூ லாதாரம், வஞ்சகமா யொளியின்மேல் மூலமென்பாக வகையாகமவு னதனே யிருந்துபாரு அஞ்சாதே யுலகமயக்கதனிற் பட்டாராசையினு லுலகமெல்லாமழிந்துபோனார், நஞ்சான சீஷருக்கு மூலசூட்சம் நாட் டாதே நூலத்தின்தீட்சைகாட்டே. 135

தீட்சையிலே முப்பத்துரெண்டு நூலஞ் சித்தருக்குப் பாடிவைத் தேன் சூத்திரத்தில், தீட்சையிலே மூலமொடு நூலசூட்சந்திடமாக மூன்றுவகைதீட்சமார்க்கம், தீட்சையிலே முதற்றீட்சை நூலமோது தெளிவான சிந்தையுற்றால் மூலமோது, தீட்சையிலே மறுபடிதான்சூட் சமோது சீஷாகந்தெளிந்திடவே செப்பினேனே. 136

மூலாதாரமிலே.

செப்புகிறேன் மூலாதாரத்தைக்கேளு சிறப்பான நாதமொடுவிந் துவாயு வொப்புகிறேன் மூன்று மொன்றால் சுழிமுனையுள்ளே யுத்தம னேநந்தியங்கே கொலுவிருந்தார் வெப்புகிறேனுதாரமே சிவமதாகுமா திபந்தமிவராகுஞ் சூரியவட்டம் கொப்புகிறேனோரெழுத்து நின்றமூலங் கோலமெல்லா மிகப்ப டக்கு மவுனந்தானே. 137

மவுனமென்றால் வாய் மூடலல்லவல்ல மகத்தான ரவியினிட பிர காசந்தான்-மவுனமென்றால் மூன்றெழுத்து என்பார் மாண்பர்வாரம போமெழுத் தென்றறியார்வட்ட-மவுன மென்றால் சிவயோகமார்க்கந் தோற்றுமற்ற தெல்லா மூலமல்ல விருகண்ணுட்ட-மவுனமென்றால் பிர ணவத் தொடாமு மென்ன வட்ட மெனறமூல மென்னுமார்க்கங் காணே. 138

காணப்பா சூட்சமென்ற மந்திரங்கேளு கருணையுடன்பிரணவமும் பிரணவத்தாதி ஊணப்பா மூன்றெழுத்துஞ் சூட்சமாச்சு வுத்தமனே

மூலமது சிவதீட்சையாச்சு, தோணப்பா சூட்சமது சத்தி தீட்சை சொல்லான மூதற்றீட்சை இதுவேமுத்தி, பூணப்பா மூலமதுசித்தியா கும்புகழான சிவயோகம் பூட்டிப்பாரே. 139

பூட்டிப்பார் சூட்சமந்திரஞ் சிவயோகந்தான் போதமுற்றரிஷி சித்தர்பதவியுண்டா, மூட்டிப்பார் சிவசத்தி இரண்டாந் தீட்சைமுக்கி யமாய்ச் சொல்லுகிறேன் பிள்ளாய்க்கேளு, மீட்டிப்பார விநாதனடுத்த மூலம் விளங்கவேப்பானத்தின விந்துமூலம்-நாட்டிப்பாரும் மென்றால சித்தியாச்சு நலமான சூட்சமந்திரம் ஓதுமென்ன. 140

என்னவே சிவசத்திமானதாம் பூசை யெளிதல்ல சிவயோகம்பெரி யோர்சொல்வார் உன்னவே யிருவிழியின் கீழொன்று யுய்த்துப்பார் சுவாதிஷ்டானத்தின்ரூபம், பன்னவே மூன்றான சிவசத்திதீட்சைபரி வாகச்சிவதீட்சை மூலஞ்சொல்வே, னன்னவே நமயவசிசிவயோகந் தான் அங்கென்றார் சூட்சமடா சிவயோகந்தானே. 141

தானென்ற மூலத்தாற் சித்தியாகுஞ் சத்தியுட தீட்சையினாற் சோதிகாணும், பானென்ற பரஞ்சோதி சூரியபிரகாசம் பாங்கானமா னதாம்பூசையுந்தி, கானென்ற தீட்சையிலே காலாந்தீட்சைகைமுறை யாச் சொல்லுகிறேன் தாலம்விட்டு, வேனென்ற மூலத்தைச்சொல்லக் கேளு விளங்கவே மனத்தின் பிரமாணம்தானே. 142

தானான மூலமது பிரணவத்திேனாடு சாற்றுகிறேன் காரமுதலஞ்ச சேரு, பானானலேகியங்கொள் சித்தியாச்சு பண்பானசூட்சத்தைச் சொல்லக்கேளு, ஓநமாவென்றோது வுருகுபொன்போலொளி காணு முன்போலே இதுவேசித்தி, வானானமனமாண்டார் பொருளதாகும்வ ழங்குதற்கு வறிவல்லோ மூலம்பாரே. 143

## பஞ்சதீட்சை.

பாரப்பா வஞ்சாகுந் தீட்சைகேளு பரிவான சிவதீட்சை பிரணவ ந்தான், சாரப்பா சிகாரமுதலஞ்சங் கூட்டிகண்ணொளி யிலிருப்பிடந் தான் சூட்சங்கேளு, வாரப்பா மவுனத்தே யங்கெங்கென்று மனமிருக ச்சிங்கென்று மாட்டியூது, சேரப்பாரவிமதி போலொளிதான் காணுஞ் சித்தரெல்லாங்கைவசமாந் தீட்சைகேளே. 144

கேளப்பா இதுவரைக்கு மார்தான் சொல்வார் கெடியான சித்தர் சொல்வார்ரிஷிகள் சொல்வார், வாளப்பா வெந்தனிடநூலே சொல் லும் வாய்ப்பான ஆறுகுந் தீட்சைகேளு, வேளப்பா கண்ணொளியே யங்கென்றாது வேதாந்த சித்தாந்தஞ் சூட்சங்கேளு, மூளப்பாவங்கங் கென்றுபாரு மூவுலகும் பச்சை வர்ணமாகும்பாரே. 145

பச்சைவர்ணம்போல் காணுந் தேகிரூபம் பக்தியுடன் சிவயோக மானதாம்பூசை, மெச்சவே மெய்புராதுந் தீட்சைகேளு வெளியல்லோ வொளியென்றும்பிரமாணந்தான், அச்சை யெல்லாம் படைத்தழிக்குஞ் சிவலோகக்தானருள் மூலமந்திரமாஞ் சிவாய மென்னே, உச்சிதமாஞ் சித்தியதாஞ் சூட்சங்கேளு உண்மையுடன் அங்சங் கென்றேது வோதே. 146

ஓதியே சிவயோகஞ் சுழிமுனைமீதி லுத்தமனே ரவிபோலே ஒளிகள்காணும், நீதியாம் தாபங்கே வார்த்தைச்சொல்வாள் நிலேத்துநின்ற வெட்டாகுந் தீட்சைகேளு, ஞாதியென் காசிறுணி கந்திநந்தி நடுவான குண்டலியே சத்திசத்தி, வேதியென்ற மூலமந்திர மோங்வங் கென்று விளங்குமேசத்தி எட்டாந் தீட்சைக்குள்ளே. 147

உள்ளபடி சொல்லுகிறேன்சூட்சந்தன்னை யுத்தமனே மவுனத்தாலங்கென்றேது, வள்ளலே பஞ்சவர்ணமாகச் சத்திமானதமாம் பூசை சிவயோகத்திற்காணுங், கள்ளங்களிலலைப்பா கண்ணிற் றேனுறுங் கருத்தினுள்ளே யுள்ளமென்ற கருத்தைதப்பார்க்கில், விள்ளவே ஒன்பதாந் தீட்சைமூலம் விளங்கவேவயநமசி யென்றுமேவே. 148

மேவடா சத்தியுட சூட்சந்தன்னை விளம்புகிறேன் ஓங்வங்சங்கென்றுதானே, தாவடாமானதமாம் பூசைபண்ணத் தன்னுருவங்கண்ணுடிபோலேகாணுங் கூவடா சிவசத்தி பத்தாந்தீட்சை கொள்ளுகிறேன் வெளியொளியினந்தாத்தே, நாவடா மூலமங்கே நமசியென்றேது நாக்கைமேல் கோக்கியகத வமுர்தங்கொள்ளே. 149

கொள்ளடா பூரணசந்திரனைபபோலே கூர்விழியிற்காணுமங்கே சத்திதீட்சை, கொள்ளடா சூட்சமதாயங் சங்கென்றே கோணமற் பிராணவாயுவையடக்கி, கொள்ளடா மானதமாம்பூசை பண்ணுங்கோடி சூரியபிரகாசந்தான் வீசும், கொள்ளடா மானமங்கேசிரி கொண்டே யேறு கூவியேதசதீட்சை கூறினேனே. 150

கூறினேன் சிவசத்தி தீட்சைமூலம் குருவான ரிஷிசித்தர்கூறூர் கூறூர், தேறினேன் ஓம் நிவாவாயா வென்றுசொன்னேன் சித்தியுண்டாஞ்சத்தியுட சூட்சங்கேளு மாறினேன் ஓம சிவாயவென்றுமாறுமதத்தான புருவத்தினடுவேகேளு, ஊறினேன் தாண்டவங்கள் நடனங்காணும் வுத்தமனே சிவயோக முற்பனமா மெணனே. 151

சடாதாரதீட்சை.

உற்பனமா சடாதாரதீட்சைகேளு ஓம்கோகோவிந்து நிலேப்பிரமாணந்தான், நற்பதமாச் சுழிமுனை நாடியுடே காய்குக்தாங்குருவிருந்தார்ஜீவகளையங்கே, பொற்பதமே சிவசத்தி துவாசதமாந் தீட்சைபூட்

டுகிறேன் மூலத்தினைசிங்க நமாவென்று கற்பாந்தகால மெல்லாம நெடியாய்க்காணுங் கதிரொளிபோல் தேகமதாஞ் சூட்சங்காணே. 152

காணவே சொல்லுகிறேனங்கென்றோது காயமது வெண்மையாய்ப் பிரகாசிக்கும், தோணவே பவளம்போற் சத்திதோன்றுந் துடியான மானதமாஞ் சதாசிவத்தின் பூசை பூணவே நாதத்தின் பிரமாணங் கேள புகழான பதின் மூன்றாந்தீட்சையூண, நாணவே சிவசத்திமூலங் கேளு நன்றாகும் வயவென்று நாடிப்பாரே. 153

சத்திசூட்சம்.

பாருநீசத்தியுட சூட்சங்கேளு பத்தியுடனடுமாறுவயமா வென்று, சேருநீ இருதுடையில் இருபததனை யேற்றி தெளிவாக இருகாத்தின் விரல்களாலே, கேளுநீ இருகாலின் பெருவிரலைப்பிடித்து கூசாமல் வாய்வதனையுள்ளடக்கிப்பூரி, சாருநீ மவுனத்தை விதிதப்பாமல் சதாசிவத்தின் தெரிசினை யுண்டாகுந்தானே. 154

உண்டாகும் நாதாந்தம் பதினாலாந் தீட்சை யுத்தமனே சடாதார சிவசத்திதீட்சை, பண்டாகுஞ் சிவயோக மூலங்கேளு பரமானந்தப் பொருளே சிவாயமென்ன, கொண்டாகுஞ் சத்தியுட சூட்சங்கேளு கொடுத்தாண்டயவசியென்றே கூவுகூவு, சண்டமாருத மெல்லா முள்ளடங்கி சடைநாத முற்றருத்திரனாகுங்காணே. 155

கண்ணொளிபாய் விண்ணொளியைக்காண வேணுங் காயமெனுமுருவமேபிரமாணங்கேள், தண்ணொளியே பதினஞ்சாந் தீட்சைமார்க்கஞ் சாற்றுகிறேன் சிவசத்திதீட்சைமூலம், பண்ணொளியே பராபரமாஞ் சமாதிரெண்டும் பாகமா மூலத்தை சொல்லுவேன்கேளு, கண்ணொளியேயபங்கென்று நாட்டியூது நலமான சூட்சங்கள் சென்றோதே. 156

ஓதவே லிங்கமங்கே முழங்கும்பாரு வுற்றதே வக்கனிபோற் சொரூபங்காணும், காதாரக்காளகண்ட மான்மழுவேந்தி கருணைதிரி நேத்திரமுமாவும் பூண்டு, வாதாடு நடனமிடுமாயியோடே வாமாகவளர்ந்தவரைலிங்கம் வாழும், தாதாவென் பாரிஷிகள் சித்தரெல்லாந் தருவான பதினாறாந் தீட்சைகேளே. 157

கேளப்பா வருபமே பிரமாணங்கேள் கெடியான சிவசத்தி தீட்சைமூலம், வாளப்பா அகாரத்தி வகாரத்தோடு மருவவே சிவபோகந்தாருஞ்சித்தி நாளப்பா சூட்சத்தின் வகையைச்சேரு நாதாந்த பூரணமாஞ் சிவசிவங், நீளப்பா சத்தியுட முத்தியுண்டா நின்ற நிலையிதைப்பிரபுமிதிலென்றேனே. 158

என்றதொரு சிவசத்தி மூலஞ் சூட்சமியம்பாதே போனார்கள் சித்தரெல்லாம், நன்றாகச் சட்டைமுனி சொன்னார் பாடல் நலமாகத்திரு மூலர்கிழித்துப்போட்டார், வென்றியுள்ள மூவரை நான் தெண்டமிட்டு வெளியொளிபோல் ஞானத்தை மேவிப்பாட என்றெனக்குவருள்செய்தார் வேதாந்தஞ் சொன்னேனலையாமல் சீஷர்களே யாகங்கட்டே.

யாகசாலைகட்டுமுறை.

யாகசாலைகள் கட்டவகையைக்கேளு யானுரைப்பேனுங்களுக்காய் நன்றாய் மைந்தா வாகான சற்றசலம் நீளம் வீதிவாய் பாகச்சதுரமாய் தட்சக்கோற்கு, வேகமாயிருப்பது ஆறுமுழங் கொண்டு விளங்கவே தனங்கொண்டி கால்கள் நாட்டி மோகமுடன் பசும் கொம்பில் பச்சோலைமேய்து மூன்று முழவகலத்தில் முகப்புக்கட்டே. 160

கட்டுவது வட்டமுகமாய் முகப்புப்போடு கட்டாக வஞ்சுமுழநீளங் கொண்டு, தொட்டு நீயாகத்தை முகடுபெறக்கட்டி சோம்பாக ஓலை எல்லாந் தெரியாமற்றான், திட்டமாய் பட்டுவஸ்திரம் விரித்துக்கட்டிசிறப்பாக மலர்புஷ்பமாலை தூக்கி, யொட்டுவது முகப்பு முதல்வாசல்தோறு முத்தமனே குலைவாழை யூன்றிநாட்டே. 161

நாட்டியபின் மாதுளிரு மாங்காயக் கொத்தும் நலமானகமுகம்பூ தென்னம்பூவுஞ், சூட்டியதோர் தாழம்பூ செண்பகப்பூ துக்கிச்சோம்பாக வெலுமிச்சம் பழாசமுந்தாக்கி, பூட்டியே கன்னலெங்கும் நிற்கக்கட்டி புகழாக இளநீர்கள் பொலிவாய்ப்பூட்டி, தாஷ்டிகமாய்ப் பலகனிகள் தமரத்தோடு சந்தோஷமோகமதாயாகஞ்செய்யே. 162

செய்யப்பா யாகம் வளர்சாலைக்குள்ளே திசையெட்டிற் பலிப்பீடம்செய்ததின்மேல், வையப்பாவஷ்டகர்மமஞ் செழுந்தால் தளமாக அஷ்டகும்ப மெண்படிநீர் கொள்ள மெய்யப்பா வெண்குடத்தேன்கழஞ்சிதங்கமீது சலம் நிரைவிட்டு விதமாய்ப்பட்டு, வெய்யப்பாவெட்டுகும்பத்தேன்கழஞ்சி தங்கமிட்டு மாந்தளிர் தேங்காய்வையே. 163

வைத்ததின்மேல் திரிதெற்பை முடிந்துப்போடு வளமாக விரண்டு சாணைக் கொண்டு கைக்குள்ளே யஷ்டபாலகரைத்தானே கனிவாசதியானித்தாவாகனித்து, வைத்திடுவாய் வாசல்தொறுந் துவாரபாலாள் வாசலுக்கப்புறமெண்கும்பம் வைத்து சத்திபெற வஷ்டகர்மம் கும்பம் போல தங்கநீர் வஸ்திரமுஞ் சாரப்போடே. 164

போட்டந்த மணிதேங்காய் மாந்துளிரும் வைத்துபுகழாகவாசல் தொறுமாவாகனித்து நாட்டந்த நடுமுகப்பின் நேராய்க் குண்டம்பாக மதுவளர்பதற் குதிறி கோணந்தோண்டி தேட்டத்தை முழமாய்தனி

யவைப்பா கெல்லி சிறப்பாயப் பூசியுலரப்போடு, கூட்டந்த குண்டத்தின்மேல்பக்கத்தே கும்பகுடம் வைப்பதற்குத்திரணைப்போடே. 165

திரணையது சதுரமாய் முழவுயரஞ் செய்து சித்திபெறவஷ்டகர்மத்தாலே கட்டிதிரணையின்மேல் நாற்பத்து முக்கோணத்தை தியானித்து அதினடுவே விந்துவட்டங், திரணையதுவட்டத்துட்பச்சரிசியிட்டுசிலதுவதில் முக்குறுணி கொண்ட கும்பம்வைத்து வருணனைப்போல்ருபமங்கேயா வாகனித்து வட்ட கும்பமுதலாக முப்புரிநூல்சுற்றே.

சுற்றியேயொபலந்தான் தங்கம்போடு துடிமீறும் பராசத்தி வருவாளங்கே, முத்திபெறமாந்தளிர் தேங்காய் வைப்பாய் மோகனமாஞ்சிவந்தபட்டு வுத்தரீகஞ் சித்தியதாங் கும்பத்தின் நூறுக்குள்ளே, சிதறுமல் கழஞ்சி தங்கத்தகட்டில் வைப்பாய், பத்தியாம் தம்பனத்தால்கும்வைத்து பாங்கான கும்பமெல்லாம்புழகுபூசே. 167

பூசுவாம் சந்தனங் கோரோசனை சவ்வாது பூரமொடுகுங்குமப்பூபச்சைகூட்டி, வீசவே குளவிந்த மெல்லாமப்பால் விளங்கியதோர்கும்பத்துக்காபரணம் பூண்டு, வாசமாய் சத்தியங்கே குடிகொண்டேதான் வாழுகைக்கு மலர்சுகந்தமாலை சாத்து, நேசமுடன் குருசூட்சமாவாகனித்து நிலைநிற்கச்சாம்பிறுணி தூபங்காட்டே. 168

காட்டுமுன்னே யஷ்டகும்பந் தன்னைக்கேளுகருணை பெறக்காக்கவென்றே பூசைதன்னை, நாட்டுவாய் வாசலிலேது வாரபாலாள் நலத்தாலேயஷ்ட கும்பந்தன்னை யெல்லாம், பூட்டுவாய் பூசையங்கேசெய்துகொண்டு புகழாகப்பின் பல்லோ சூட்சகும்ப, மூடடுவாய் முழுப்பூசையாகஞ் செய்து மோகமாய் திருகுண்ட மூர்க்கங்கேளே. 169

கேளப்பா குண்டத்திற் சதுரமாக கெடியாகத்திரணைசெய்துகர்மமெட்டால், வாளப்பா வெண்டிசையும் பந்தஞ் செய்துவளமார்க்குண்டலித்தார்மூலவாலை, ஆளப்பாகுண்டத்துளா வாகனித்து அப்பனேதிரிபஞ்சாட் சரத்தில்தோத்திரம், மூளப்பா வசியத்தால் வசியசெய்துமோசமுற்ற வச்சமறந்தியைவாங்கே. 170

வாங்குவாயழைப்பினுல் வரவழைத்து மகத்தான தம்பனத்தால்குண்டத்துள்ளே, சாங்கமாய்த் தப்பித்து யோகனங்கொண்டுசற்கரைதேங்காய்பழமும் பரயானம்பாலும், பாங்கானதாம்பூல முதலாய்வைத்துபர்வர்கதீபமொடு தூபங்காட்டித், தேக்காமல சத்தியங் கேதியானஞ்செய்து திரயாகக் குருநாதன் செயலைக்கேளே. 171

செயலென்ன வென்றேகேளோ மகுண்டத் தடுக்கத்திருமூலர்க்குருவாகவட முகமாய்ச்சென்று, தயவாக நெய்க்குடமு முன்பதாகத்தங்கமொருகாசிடைதான் நெய்க்குடம்போட்டு, வயணமாயாசருஷணமாக

வோதிவளமாக ஓமகுண்டந் தன்னைச்சார, நியமாக குண்டத்துள் தங் கமொரு குழஞ்சிநெய்போட்டு நெய்துவலாடம் நோக்கே. 172

நோக்கியேநந்தியுடன குண்டலியானி நோானபின் பிருந்து ஓந மாவென்றோதி, தாக்கியே ஆலரசுமாவித்தியத்ததரு தெற்பையாத்தி யொடுவேறுங்கேளு, பாக்கியமா மெரிதுரும்புமிதுவேயாகும பாாபரம் போற்குருநாதன் பாங்காய் நெய்யை, வாக்கினால் மந்திரித்து ஓமத்தே தூவுவளமாக ஓமகுண்டம் வளருந்தானே. 173

தானென்ற குருநாதன் சரித்திரங்கேளு தன்னுடலைக் குருசூட்ச மாகச்செய்து, கோனென்ற நந்தி குருசூட்சஞ் செய்தாலகொடுஞ்சுழு க்காங் குருநாதன் தீட்சைபோத, வானென்ற வஷ்டகர்மமணிகள் பூண் டுவாசமுடன்காஷாயங்க வினங்காட்டி, தேனென்றநாவுள்ளை கழஞ் சிதங்கம்பேர்டுசித்திக்குமந்திரங்கள் தியானத்தாலே. 174

தியானென்ற குருநாதன் சிரசினமீதிற் தெற்பையொசு சிவந்தப் பட்டுருதிராட்சம்பூண்டு, தியானமுடனிருகுழைபிலாறு கட்டிசெம் பொனனுய் கவசமிட்ட குண்டலமும்பூண்டு, தியானமுற்றகண்டத் திலட்டகர்மம் சேர்மணிகள் கொத்துவடம் நூல்வடம்பூண்டு, தியான முறவுகள்கட்டு மணிக்கைக்கட்டுஞ் செங்கைவிரல் பவுத்திரமுந் திரு வாழிபூட்டே. 175

பூட்டியே சிவந்தபட்டரைக்குக் கட்டி புலித்தோலைவதின்மேலே விரித்துக்கட்டி, நாட்டியே பாதத்தில் குறடுபோட்டு நலமானசெம் பொன்னால் கோலுபோட்டு, மீட்டியே விருதுகட்டி முன்கைமீதின்வி ளங்கவே தங்காவ்கடகம்போடு, சூட்டியே ஓம குண்டம்பின்புசொல் லுஞ்சாற்கவரைபதவியுண்டாஞ் சித்தியமாமே 176

சித்தியாஞ் சீஷர்முதல் முத்திசேர்வார் தீட்சையவர் செவிக்குரை த்தால் சித்தியாவார் பதறியாய் குருவுக்கிவ்வளவுஞ் செய்தால் பாங்கா கத்தீட்சையெல்லா முபதேசிப்பார், சத்திபெற ஓமகுண்டந்தன்னைப் பார்த்து பயவாகநந்தியவகே முன்னேவைப்பார் சூத்திரமாய்செய் யாதேதீட்சைசுபமா கூாந்து நி களாதே கொடுமையாமே. 177

கொடுமையென்ன மெஞ் க்கால் மகத்தாம்பாவஞ் கோடிசென்ம மானாலுங் குலக்ஷயமாய்ப்போவார், கொடுமையப்பா மொருவனைப் போலொருவருவர்க்காக, சொல்லுமவன் வார்த்தை மெய்யல்லவென் கேட்டு க்கேட்டு, அடிமையாய்ச் சென்று நிற்பாரன்புகாணூர் ஆசைவகை யெத்தனையோ காமேரிநமோ, சொல்லுமப்போ மானுக்கர் குருவைக் காக்கபத்தி வைத்தாலெத்தனைநாள் செல்லுந்தானே. 178

காணப்பா பன்னிரண்டு வருஷங்காரு காக்கையிலேமனத்தையல்லோ சோதிப்பார்பின், பூணப்பா தனைகோடிசன்னும்பல்ல பொக்கிஷங்களுண்டாகி லெடுத்துப்போடு வீணப்பா வல்லவித்து குருவின்பின் செல்லேதாந்தக் குருநாதன் மனதுவேண்டி, பூணப்பா யிதுவல்லோ சீஷர்வர்க்கம் ஓகோகோ காரணமாங் குருவுஞ்சொல்லே. 179

குருவாகவந்தவரே மெய்க் குருவைக்காணில் கோடிதன மீந்தாலுஞ் சொற்கபதங்கிட்டுங், குருவாக சீஷருக்கு நந்திகாட்டி குண்டலியைக் காட்டியபின் தன்னைக்காட்டி குருவாகத் தலைவனையுங்காட்டிப்பின்பு கூறுவார் நரகமொடு சொற்கம் ரெண்டுங் குருவாகப்புண்ணியமொடுபாவம்ரெண்டுங், கொடும்பஞ்சபாதகமுங் கூறுவாரே. 180

கூறுவார் சாபமெல்லாம் நிவர்த்தியாக கோலமுறு தாபாசங்கமத்துக்கெல்லாங், கூறுவார் பிறப்பிறப்பு மூலஞ் சொல்வார் கூண்டேடேயேறுதற்கு வழியும் சொல்வார், கூறுவாராணோடு பெண்ணிரண்டுங் கொடியான வூழிவரை யிருக்கக்கற்பங், கூறுவார சிவயோகம் தீட்சை மார்க்கங்குளிகையொடு மனவுணமூதற்கொள்ளையாமே. 181

ஆமப்பாயோகத்திலநுஷ்டான மில்லை அம்பரத்தினொளிகாணத்தீட்சையில்லை ஒப்பா உலகமெல்லாம் பொய்க்குருவாய்ச் சேர்ந்தார் ஓகோகோவதினாலே கெடப்போனார், நாமப்பா ஒளிக்கறியோந்தீட்சை சொன்னோம் நலமான அநுஷ்டான விதியைக்கேளு, நேமப்பா நித்திய கன்மவநுஷ்டானந்தான் நிலைமேலே வாராமல் சொல்லக்கேளே. 182

## அநுஷ்டானநிலை.

கேளப்பா சூரியனுக்கு முன்னே கெட்டியாயப்பாயில் விட்டுத் தடாகஞ்சென்று, வாளப்பாபூரித்துக் கும்பிரேசிமல மெல்லாம் வரையறவேயுட்சாடிக்கும், வேளப்பா வல்லாமல்வேறோர்சேதி மேற்முகப்பிறவிவட்ட மிட்டிருநது, கோளப்பாகும்பித்து ரேசித்தேதான் கோடுமுச்சாடனங்கொண்டு மலத்தைப்போக்கே. 183

போக்கடா வெள்ளத்தாலாகருஷ்ணஞ்செய்த புத்தாசு சுற்றடியின்பிரத்திவாங்கி, தேக்கடா செலத்தாலேயுட்சாடித்து திடமாகதட்சணையாலிரேசகஞ்செய், வாக்கடா மலசுத்தியானபின்பு வாய்கழுவி கால்கழுவிச்சுத்தமாகி, காக்கடாதந்த முதநூற்றைவாங்கி நலமாகக்கறியானையன்பால்வேண்டே. 184

வேண்டியேதந்தமெல்லாம் விளக்கஞ் செய்துமீறமா கருஷ்ணத்தால் நாவழித்து, தாண்டியேபித்த நீரெல்லாய்போக்கி சுத்திபெறவஸ்திரங்களீரந்தோய்த்து, தாண்டியேசவந்தன்னில் ரவியின் வட்டங்

தானிட்டு வொரு சகலசாபம் நசியென்று, தீண்டியே சலந்தன்னைச்சிர
சில் தூவிசிவசிவா வென்றேதான் தெளியத்தூவே. 185

தூவியேபுரோட்சித்து ஆகருஷணத்தால் சுகமாக நந்தியுடனுட்
சஞ்செய்து, மேவியே தீர்த்தமங்கே ஆடிப்பின்டு விளங்கவே மறுகாலு
ஞ்சொல்லக்கேளு, தாவியே ஓம் சகலலோகவசியென்று சார்வாகபு
ரோட்சித்து தீர்த்தமாடி, கூவியேமறுகாலு மிப்படியே தீர்த்தங் கொ
ண்டுசெலம்வாரி நீகரையிலேறே. 186

கரையிலேயேறினபின் மவுனஞ் சென்றால் கலங்காதேபுரோட்சி
த்துச்சாடநீர்தோய்த்து, திரமான விபூதிதன்னைத் தீர்க்கம்போடு சிவா
நந்தியிருந்திடத்தில் ஓமென்றேதான், கரையிலே நீரருகிலிருந்து
கொண்டுகதிரவன்போல் வட்டமிட்டு ஓமென்றன்னித் தாமாகநீரிலே
தான்தாவியேநீதானத்தின் மேலிருந்துவிபூதிசாற்றே 187

சாற்றவேவகைகேளுரவியின்வட்டந் தண்ணீரில் வளைத்ததின்மே
விதழ்பதினாறிட்டுபெற்ற, வேதிரிகோணம் நடுவேயிட்டு புகழான ஓங்
காரமுள்ளேயிட்டு, மாற்றியே பிரணவததுள் றீங்காரமிட்டுவளமா
கநந்திதெரிசனையேசெய்து தோற்றியே ஓமாங்கணபதியே நமவென்
றுதிரமாகவிருகாரமும் லாடங்கூவே. 188

## அங்கனியாசம்.

கூவியே கைகுவித்ததினைப் பால்வாங்கிக் கொண்டு சிரசின்மீது
புரோட்சித்தேதான் மேவியே மூலசடாக்ஷரத்தினாலே விளங்கவேபதி
னாறுகலத்திலுந்தான், பாவியேயனுமிசைக்கு மேலிறைதான் பதறாதே
யங்குஷ்டவிரலையூன்றி, கூவியேயங்கத்தினியாசஞ் செய்து கொண்ட
பின்புகான்னியாசங்கூறக்கேளே. 189

## கரநியாசம்.

கேளுநீ எட்டெழுத்தால் கரன்னியாசங் கெடியாகச்செய்தபின்பு
சிரசின்மீதே, வாளுநீயிரவி வட்டந்தாளத்திறைபம் வாங்கியேவலக்
கரத்தால் விபூதிதனை, யாளுநீயாகருஷணங்கொண்டு வாங்கி அப்ப
னேயிடக்காத்தாற்றம் பனமாய்வைத்து நீளுநீவசியத்தால் குழைத்து
க்கொண்டு நிலையான பிரணவத்தால் நந்திபாரே. 190

நந்திதன்னையோமென்று சுழிமுனைமீதில் காட்டியே சிவாவென்
றுதிரிகோணமிட்டு, முந்தியேவனுமிசையிற்றிலதமிட்டுமூலமென்ற வித்
தாரபிடரிக்குள்ளே, சந்தியாய்த்திலதமிட்டு கண்டத்தின்மேல் சாற்றி
யுள்ளேவோமென்று திலதம்போடு சுந்தலஞ் சேர்சிரசிநடுபராபரத்தான
ஞ்கேதியானமதிற்பத்தியாய்ச்செப்புறேனே. 191

செப்புகிறேன் பராபரத்தின் தீட்சையிற்றானே செங்கைரெண்டி
னுகிர்ப்பதிப்பாய் பின்புகேளு, ஒப்புகிறேன் பிறைலாடந்தன்னிற்கேளு
ஓகோசதாசிவ தீட்சையினாலய்யா, வைப்புகிறேன் விபூதியதிற் சாற்
றிப்பின்புவதி மயேஸ்வர தீட்சையாலேகேளு, கப்புகிறேன் கண்டத்
தில்விபூதி சாற்றுகன் ருத்திர தீட்சைவித மார்பில்தானே. 192

மாருக்குப் புயமட்டும் வலுத்தி சாற்றிமாலுடைய தீட்சையினு
லுந்திமீதில், சிருக்கு விபூதியதிற் சாற்றிப்பின்பு சிருஷ்டிக்கும் பிரம
னிட தீட்சையாலே, பாருக் தள் சுவாதிஷ்டானத்தைத்தானே பண்பாக
தியானித்து முட்டிச்சாற்று, யாருக்குங் குண்டலியாள் கணேசன்தீட்
சையதினாலே பாதவிரல் திலதம்போடே. 193

திலதமிட்டுச் செங்கைரெண்டு மாறிமாறி சடாதாரதீட்சையினால்
விபூதிசாற்றி, சலியாதே பிடரியின் கீழங்குல நாலிட்டு சாற்றடா விபூ
திதன்னை அய்யுமென்றே, மலவாசல் மேலே யங்குலம் பன்னிரண்டு
வாய்ப்பாக விட்டத்தின் கிலியுமென்றே, விலகாதேவி பூதியிட்டு விரலா
ற்றட்டுமீறவே சவ்வுமென்று விபூதிசாற்றே. 134

பூசியே இருகாமும் நீரில்தோய்த்து புனல்வாரி சிரசின்மேல்வட்
டஞ்சுற்றி, வாசியோங்கவசாயநமா வென்றுதான் மறுபடியுமங்கத்
தினியாசஞ்செய்து, தேசியேகான்னியாசஞ் சிறக்கச்செய்து தேனு
முத்திரையா ரெழுத்தில் செவித்து நீரை, யாசியே யாசமனமென்றே
கொள்ள அப்பனே மூன்றுதிர மறிந்திடாயே. 195

அறிந்தபடி யெல்லாமானபின்பு அப்பனே யாவமெல்லா முச்சா
டிக்க, பிரிந்தமதிக்கலையாலே மோகனத்தால் பேசாதே வாங்கிப்பின்
கலையினாலே, முறிந்துச் சடானத்தாலே முழுதும் போக்கு மோகனத்
தால்வசியமெல்லாம் பின்கலையிற்பூரி, செறிந்தபின்பு வறுமையொ சத்
துருவை யெல்லாந் திடமாகநீர்வாரி மாரணஞ்செய்யே. 196

மாரணமாம் நந்தியிலே மாடமொட்டு வாகான வழைப்பினால்பாக்
கியங்களெல்லாஞ், சாரணமென்றே காத்திருக்கும் மோகனஞ் செய்த
ண்ணீரைவாரி விருதாம் புரோட்சித்து, கிரணமெல்லாம் நிறைந்துநி
ன்றதூனிய பூசைகெடியாகப் பின்கலையில் மயேஸ்வரனார் தீட்சைபிரண
வங்கொண்டாகார வென்று வோதிபிறகு சிவாநந்திதன்னைப் பேணப்
பாரே. 197

பாரப்பா மறுபடிதான் சிவபூசை செய்வாய் பண்பாகத் தேவிதன்
னைப்பூசை செய்வாய், சேரப்பா கணபதியுஞ் சுப்பிரமண்ணியன் தெளி
வான் சண்டேசன் வடுவன்பூசை, யேரப்பா நித்தியகன்மங் காலசந்தி
யாச்சு இப்படியே யனுஷ்டான மாலையினுஞ் செய்வாய் ஆரப்பாவெ

ன்னைப்போல் அனுஷ்டானமார்க்க மண்டப்பிலா துரைத்தல் செய்யா ரெக்றாலேப்பாரே. 198

என்றால் தீரன் கடைக்காண்ட மைக்றூற்றுக்குள் இந்தவகையனு ஷ்டான பூசைமார்க்கம் சொன்னபடி சீஷருக்கு உபதேசஞ் சொல்சுருக் கடா சீஷரைத்தான் வாவழைத்து பொனனோடு வெள்ளியோடு புஷப் பத்தோடு புகழாக ஓமகுண்டத் தடுக்கவைத்து கின்னயமாய் தெண்ட கிட்டுகிற்கச்சொல்லி கிமல கும்பக்குட நீரைப்புரோட்சிப்பாயே. 199

புரோட்சித்துச் சாம்பிராணித் கயிலத்தன்னை புதல்வனே யென் றேசொல் புருவமய்யத்தே புரோட்சித்து மனமடா மூலந்தன்னில்பூட்ட டாகந்தி குருகூட்சந்தன்னை புரோட்சித்து நீர்த்தாரை யூற்றதானபொ ருளேயோகி யுடன்மூன்றுங்கேளு புரோட்சித்த தெத்தமவன் தந்தபின் புபுகழாகச் சிவ சூட்சங்காதிலோதே. 200

ஆதிலுரை யுபதேசஞ்சத்தி சூட்சங்காலான பூரணத்தின் சூட்சஞ் செப்பி நீதியிதின் பிறகுவனுஷ்டான நிலைபெற்றால் நீதமாமலையுறுந் தீட்சைவைத்து சாதகமாயதின்பிறகு ரவியின் தீட்சை தப்பாமல் மூன் றுவகை தீட்சையோதி சோதி ஒத்தசடாதார தீட்சையோது சுகமா கப்பராபரத்தின்தீட்சைசெப்பே. 201

செப்புகிறேன் மவுனமென்ற வாலைதீட்சை செய்தபின்புவனுஷ் டாங்கவாலை தீட்சை செப்பினர் மச்சமுனி ஞானநூற்றில்தீட்சையிது வறிந்துக்கொண்டே சீஷாகோது செப்பினேன் சத்தியுட தீட்சையோ து சிவத்தினிட தசதீட்சை பிறகு ஓது செப்பினேனதின்பிறகுசமாதி தீட்சைசேரவே மண்டலத்தில் சோதிதே. 202

ஓதவே புழுக்குளவியாம் போல்வாழு முத்தமனே குருவினிடதி ன்றுபற்று சாதனையாய் தசதீட்சையாலேகேளு சத்தியுடன் காற்பத் துமுக்கோணபூசை யாதவாய் மண்டலத்தில் நாலுபூசையண்டாண்டம் ஓமகுண்டந்தன்னைக்கேளு வேதமுதனெறி யஷ்டகர்மப் பூசை விளங்க வேமண்டலந்தான் தன்முன்செய்யே. 203

செய்யப்பா சிவபூசை மானதமாம்பூசை திருவளருங் கும்பகுடம் நித்தியபூசை செய்யப்பா மறுநாளுஞ் சுத்தஞ்செய்து திடமாக நிரமா லியமெல்லாம்வாங்கி செய்யப்பாசரண மெல்லா மிப்படியேசன்றும் சீஷ ருக்குத்தீட்சை எல்லாஞ் செப்புமடடும் செய்யடா சீஷர்முதற்குரு வோடாறுந் திரமாகமண்டலந்தான் விரதங்காரே. 204

காரப்பா இப்படியே மண்டலத்திலுள்ளே காணமாம் ஞானகுரு தீட்சையோத ஏர்ப்பா முப்பத்தொன்றுதீட்சை யென்காணமென மாலையெல்லாங்கேளு சாரப்பா நவபாசங்காதிம் செப்பி சாத்தடா பின்

பல்லோர்தீட்சை எல்லாஞ், சேரப்பா நித்தியமொரு தீட்சையாகச்சேவிக்கிலுபதேசஞ் செப்பிடாயே. 205

செப்புகிறேன் சீஷரைத்தான் சேர்க்குஞ் சேதிதெளிந்துபார்சாதியெல்லாம் நாலைசாதி செப்புகிறேன் பிரமனென்றும் க்ஷத்திரியனென்றுஞ் செய்யதோர் செட்டியென்றுஞ் சூத்திரன் தானென்று, செப்புகிறேன் வேதனென்றால் சாஸ்த்திரத்திலமாய் வான்திடமாக நிரந்தரமே குருவாமென்பார், செப்புகிறேன் ராசனென்றால் குருவைக்காரான் திருவேடந்தன்னைப் பழிப்பான் குருவாரென்றே. 206

என்றதொரு வணிகனென்றால் காசுகள்ள னென்குருவாரென்றொருநாள் சோறுபோடான் அன்றியொருபணங் கேட்கில்லோபஞ்சொல்வான் ஞானமிக்த மூவருக்கு வாய்க்காதப்பா, வென்றியுலகத்திலேபதினெண்சாதி வெவ்வேறே குலபேதங் கோடிசாதி, கண்டானசாதியெல்லாம் நாள்வர்னத்துள் கண்டறியவேணுமப்பா சீஷர்காணே. ()

காணப்பா புத்திகெட்டமடையுருண்டு கனமனைவிதாய்தந்தை சுற்றத்தோரை பூணப்பா வைத்ததற்கு மொன்றாய்ப்பின்பு புகழானதிருவேடந் தரித்தபேர்க்கு வேணப்பாவேணபடி தூஷிப்பான்கேள் மேல்வரம்புகீழ்வரம்பு எண்ணிச்சேரான் ஆணப்பா ஆணவத்தால் கெட்டார்கோடி அறைந்தேனுனிந்தவகையறியத்தானே. 208

தானென்ற தீட்சைவைப்பதாரை யென்றால் தாய்தந்தைதனைத்தொழுதான் விரதங் கொண்டோன் கானென்ற சிவனடியார் தனக்கன்பாகி கால்பூசியன்னமிட்டோ னிரக்கமுள்ளோன் தேனென்றமொழியுடையோன் மனதிறப்போன் சிவபூசை மறவாத சிந்தையுள்ளோனுனன்றாயிப்படியே தீட்சை சொன்னேன் நம்போலச் சீஷர்வர்க்கம் நல்கிடுரே. 209

நல்லதொருசீஷனுக்கு ஒன்றே புத்தி நலமுள்ளோன் சொல்லெல்லாமவன்றனக்கு வேறல்லவே இதையறிந்து தீட்சையோத வப்பனேயிருவர்க்குஞ் சொற்கங்கிட்டும் வல்லமையாங்காரணமாங் குருவைக்கண்டால் மக்களே இருபதமுங்கட்டிக்கொண்டு மெல்லவே தெண்டனிட்டு தீட்சைகேளு வேதாந்த ஞானமெல்லாங் கைக்குள்ளாமே. 210

கைக்குள்ளாஞ் சீஷருக்குத்தீட்சை தோதிக காதலாயில்லத்துக்கனுப்பும்போது மெய்க்குள்ளாங்குரு சூட்சங் காதிற்செப்பி விளங்கவேதானனுப்பியோமகுண்டஞ் செய்க்குள்ளாஞ் சகலமெல்லா முச்சாடித்து தேவியுட சூட்சத்தால் குருவுஞ் சென்றார் பொய்க்குள்ளாங் காரிய குருபூலோகத்தில் புகட்டியே பணம் பறிப்பார் பொய்யாப்போச்சே. 211

போச்சப்பா குறிகாட்டார் வாசியோகம் புகட்டுவதார் சிவயோகி சித்தர்சொல்வார், ஆச்சடா எந்நூலே சொல்லவேனு பாரப்பா அப்படிதான் சொல்லக்காணேன், வாச்சப்பா உங்களுக்கு வாசிப்பார்க்க மகத்தான நந்தியொளி காணவேண்டு, யேச்சாப்பாபின்கலையி லொங் சிங்கென்று விரவியுரையுத்தி நிலைவிரைத்துப்பாரே. 212

## சூரியயோகம்.

பாரப்பா விருவிழியால் பார்த்துபார்த்து பால்போலாம் பத்துநாள்பார்க்கும்போது, சாரப்பா மண்டலந்தான் தினமிரண்டுக டிகை தப்பாது தயமுதற் சார்வாய்பாரு, வேரப்பா கண்கூசா யோகம்பார்க்கில் விதமாகும் கடுப்பில்லைச் சிவயோகம்பார்க்கில், ஆரப்பா இந்த முறையாருஞ் சொல்லார் ஆச்சரியமார் புறமேவசூரியனுமே. 213

சூரியன்போல் வட்டமதாய் மார்பில்தோன்றி துடியாக முதுப் புறத்தேரவி தான்வீசும், வீரியந்தானிது யோகஞ் சிவயோகத்தால் விளங்கவேபங்குனி சித்திரையிற்பாரு, கேரியலாயிந்தமுறை செய்த பின்பு நிலைசின்றயோகமென்று சொல்லக்கேளு, சீறியலாயிடகலையிலொ லவங்கென்று பூரணசந்திரனைப்பாரே 214

## சந்திரயோகம்.

சந்திரனைப் பார்ப்பதற்கு வகையைக்கேளு சடலமது பற்பத்தே சரிந்துகொண்டு, சிந்தையுறமல்லாந்து மதியைப்பாரு சேர்ந்தநடு சாமத்தில் செய்திசொன்னேன், உந்திபெருயோகமென்பார் கண்குளிர்ச்சியாகும் ஓகோகோ விழியோடே யூடேருது, விந்திரவிபதினாறு மாதம் பார்த்தால் யெண்சாணும் சாய்கையில்லை நிலை காணுதே. 215

காணுதே போனுக்கால் பலனேதென்னில் கண்ணொளியில்விண்ணொளிதான் காணுங்காணும் வாணுளு மழியாது ஊரைஇரை களில்லை வாசியுட யோகமெல்லாம் க்ஷணத்திலாச்சு பூணுதேயிதைவிட்டுயோகம் பார்த்தால் பொய்யாச்சு வாசிமுதல் வாதமெல்லாந் தோணுது சுழினையென்றமூலந்தன்னை சொக்கலாம் பெரியோர்கள் சொல்லார்பாரே. 216

சொல்லான வான்பொருள் தாள்சுழினை நந்திதாண்டுகோல் குருவாகுமென்நூல்பாரு, வெல்லாதே போவதில்லை வேதாந்தத்தை மேட்டியாவிட்டாக்கா லொன்றுமில்லை, கல்லாகு முன்தேகம், பொன்னும் பின்பு கயிலாச தேகமதாங் கற்பத்தாலே, யெல்லாரும் வழலை முதற்கற்பஞ் சொல்வாரெனைப்போலே வெளியாகவியம்பிலாரே. 217

## அப்பியாசம்.

வெளியாகச் சொல்லுகிலேன் அப்பியாசமார்க்க மீறுகின்றவபார மத்தின் மூலஞ்சு சித்தியொளியாகப் பிரண்டையதின் கொழுந்தையாக்

கியுத்தமனே ஐப்பசியுங் கார்த்திகையுங்கொள்ளு தெளிவாருந்தொழு கத்தின் மூலஞ்சித்தி திடம்பெறவே யதோமுகத்தால் மேல்மூலஞ் சித்தி வளியோடு மேல்மூல முகத்தைச் சொல்வேன் வாயுவாக்குங் கும்பமும்பூத் துண்டந்தானே. 218

அண்டத்தி னூடேறப்புரியவஷ்ட மெட்டுஞ்சுகமான கேசரியாம் புருவத்தின்கீழ் கண்டத்தி னூடேறம் பூரணந்தானுளுங் கயிலாசந்த னில் முட்டிவெளியில் பாயும் பிண்டத்தி னூடேறும் தெணமூலமட்டும் பேசாதே பன்னிரண்டின் கலையிற்பாய்ந்தே யவடத்தி னூடேறும்சவை யெட்டு மதட்டியே நாலையுந்தானளிக்குந்தானே. 219

சோமுகாசனம்.

அளிக்குமடாசரிகையொடு கிரிகைரெண்டு மரிதரிது யோகத்திற் செல்லமாட்டார், தெளிக்குமடா கோமுகாசனத்தைக்கேளு சிறக்கவே ரெண்டுமுட்டு மொன்றாய்ச் சேருகளிக்குமடா குதிகெண்டாலபானங் கார்க்கக்கட்டாக நெருங்கியே மூலம்பாரு வொளிக்குமடாபுருவமய்ய ச்சுழினைபாரு ஓகோகோ வங்கென்று வூணிப்பாரே. 220

ஊணியே வாசிதன்னை யூதும்போது வுத்தமனே ரவியொளிபோ லொளித்தான்காணும், பேணியே சிவயோகமார்தான் சொல்வார்பெரி யோர்கள் சொல்லார்க ளரிதே யென்பார் தோணியே பார்ப்பதற்கு எந் நூல் பாரு சுகமான சட்டைமுனி ஞானம்பாரு ஆணியாய் மூன்றெழு த்துமோரெழுத்தாய் நின்றதறியார்கள் சவைமுதலறியார்காணே. 221

கண்ணறியார் மூக்கறியார் காதுங்கேளார் கருத்தைவைத்துச் சுழினையிலே மனத்தையூணார், விண்ணறியார் சூட்சத்தைப் பெற்றாரில் லைவேதாந்தமவாய்ப் பேச்சால்கைக்குள்ளாமோ ஒண்ணறியார் மனத் தையங்கே யொண்ணக்கற்றாறுறவறியா மூதண்டலேகியந்தான் கண் ணறியார் தப்பத்தின் குளிகை செய்யார் நாதவிந்துகளையறியார் சத் திதானே. 222

சத்தியமாம் சத்தியுட பூசைசெய்தால் தாயங்கே வார்த்தைசொல் வாள் நந்திகாணு, முத்திபிதை விட்டலைந்த மானபர் கோடிமோக முற் றபெண் தேடியலைவார்கோடி, பத்திவைப்பார் பொன் வெள்ளிபொரு ளென்றெண்ணி பாழ் மூன்றந் தாண்டறியார் பரிபாஷாண்டி சித்திபெ ற்றதேதினால் மனத்தினாலே தெளிவான கண்ணாலே மூக்கு நுனியாமே

மூக்குநுனிமீதிலே மனதைநாட்டி முழுமோசம் வாராமல்வாசியூ ணு, தாக்குமதிலறிவங்கே யேறிச் செல்லுந் தம்பனத்தின் குளிகையினு ல்வாசியுள்ளாம் நாக்கு நுனிமேல் நோக்கி சாதகஞ்செய்ய நலமானவா

தபித்தஞ் சிரசேறுது, சீக்கரத்தேயொளிகாண வகையைக்கேளு செப்புறேன் தெளிவாகச் செப்புறேனே. 224

செப்புகிறேன் திருவிளக்கொன்றெறியும் போது திரியொன்று தான்கொளுத்தி விளக்கமைத்து ஒப்புகிறேன் புகையேலா யொளியைக்காட்ட யொளிதானே பகையூடே விளக்கிற் செல்லுமப்புகிறேனிப்படியே சச்சிதானந்தி யருள்தானே சுழினை நந்திபிரகாசிக்குங் கொப்புகிறேன்விழியா தேயொளியைக்கண்டு கூறினேன் சிவயோகக் குறிப்பைத்தானே. 225

குறிகாட்டு மென்பார்கள் சீஷர்கோடி குறிப்பாக நந்தியொளி சொல்லிவிட்டால், நெறியில்லா குருவென்றே நிஷேதஞ் சொல்வாநிசமென்றகுரு வென்ன நீர்தானென்ன, அறிவில்லார்ச் சடங்களென்றசென்மமென்பாரழகான குறிகாட்டி வாசி சொல்லும் பிரியமாஞ் சித்தரெல்லாம் பிள்ளையாவார் பிள்ளைமனஞ் சோதித்துப் பேசுவாயே. 226

குளிகைமுறை.

பேசியே குளிகைக்கு வயணங்கேளு பித்தத்தினால் பாஷாணம்பெண்ணைத்தள்ளு, வாசிமுதல் குளிகையொமெவுனஞ் சொன்னால் மகத்தான குருவென்று தெண்டம் பண்ணு, ராசியொடு ரத்தினங்கள்கைக்கீந்து நற்குருவே தசதீட்சையோ தென்றேசொல், தேசிகராயிருந்து கொண்டு வுபதேசித்தால் திங்கணுலிற் குணங்கள் சேரக்காணே. 272

யோகத்திற்குமாதம்.

சேரவே சொல்லுகிறேன் சிங்கர்கன்னில் சீலைகோல் மீன்காளை நண்டுசேருவோடேழுந் சாரவே மாதத்தால் தோஷமில்லை தனமேட மீனம்பெண் அவிட்ட நட்சத்திரம், வாரமாங் குருமதியும் புகர்புந்தியோடு வளமானலக்கினங்கள் மீனமாகு மாரவே வில்லோடு துலையுங்கன்னி யஞ்சுமே லக்கினமாமறிந்துகேளே. 228

பட்சம்பார்க்க.

கேளப்பா விதையெல்லாஞ் சித்தர்பாடார் கெடியாகச் சொல்லிவிட்டேன் பக்கங்கேளு, வாளப்பா பஞ்சமியுஞ் சஷ்டியோடு வகையானசத்தமியுந்த சமிதானுமாளப் பாதிரிதிகையுஞ் சதுர்த்தியாகுமாறு வகைபட்ச முதல்முதயோகங் கேளப்பா வாராது தீட்சைமுதற்பூசை குருபூசை சிவபூசை கூறநன்றே. 229

நன்றானநாளோடுவாரமாதம், நல்மான பக்கமொடு லக்கினமுஞ் சொன்னேன் சென்றாடு மிவ்வண்ணஞ் செங்மிக்குங் காலந்தெளிவாகப்

பிறந்தாளிதுக்குள்ளாகி, யொன்றாகி மனமாகுமவன் யோகியாவானுழி கற்பஞ்சன மாகும் ஞானியாவான், வென்றியுள்ள கிரகத்தின் சாரங் கேளுவியாழும் வெள்ளிபுதனென்றே தீட்சையாமே. 230

இராசியறிய.

ஆமப்பா வாக்கிலே யிருந்தாலும்போது மஞ்சமே சுத்தமாயிருக்க வேணு நாமப்பாதீட்சைக்கு இது வெல்லாம்பார்த்து நாட்டுவாய் சீஷருக்கிராசிகேட்டு, தாமப்பா சொன்னதெல்லாந் தப்பாமல் கண்டால் சாதகமாய் பிள்ளையென்று தயவாய்ச்சேரு ஓமப்பா கிரகங்களராசி நட்புவுச்சமா கேந்திரத்திலிருக்கைபாரே. 231

பாரப்பா வறிந்தவகை ராசியோர்கள் பணமில்லைப் பொய்க்களவு பாசாங்குண்டா, நேரப்பா குருவுக்குமுதல்களிந்து நிட்டேரப்பிரோடே சொல்லிநிற்பான் காரப்பா வென்றாலும் பற்றமாட்டான் காதில் மெத்த வுலுத்தரை நீசோக்கவேண்டாஞ், கேரப்பா வாமனத்தில் பூசைசெய்வாா தேவர்போல் மைதனத்தில் செல்லுவானே. 232

சொல்லுகிற சீஷறைக் கையணைக்கவேணுந் திரமான குருவென்பானுலகமாடு சொல்லுகிறே னுபதேச மென்பார் கோடிதூண்டியே காட்டுதற்குக் குறியைக்காணார் வெல்லுகிறேன் சிவபூசை மேருச்செய்தார்விளங்கவே சேகண்டி மணியினோரை யல்லுகிறேன் பணம்பறிக்கப்பெண்டுபிள்ளைவாழ ஆத்தியே சீஷருக்கஞ் செழுத்தென்பாரே. 233

அஞ்செழுத்து மாரெழுத்து மெட்டெழுத்து மென்பா னரகாரசெத்தெழுத்தை உபதேசிப்பான் வஞ்சங்களில்லையவன் குருநானென்றே மாய்கையினாலழிந்து நிற்பான் மனமொன்றுதான் தஞ்சமெனு மவவயிற்றுப் பிழைப்புக்காகத் தயவுசொல்லும் சீஷருக்குப்பணங்கள் போச்சு பஞ்சமாபாதங்கள் மிகுந்துப்போச்சு பாவியிலே கொடும்பாவிகெடுத்தான்பாழே. 234

பாழான தன்னோடே போச்சுதில்லை பாரிலுள்ள பேர்களையுங்கெடுத்தான் பாவிகோளானவிதுவோ கேள் நரகமெய்க குருவென்று உபதேசம் பெற்ற பேருவாளான வாழ்வரெல்லா மிப்படியே கெட்டாரள வற்ற ஆசையினாற் பிறப்புள்ளானர் தேளானபிறப்பேது இறப்பே தென்றால் செப்புகிறேன் பொய்குருவே தெளிந்துவாவே. 235

தெளிந்து வந்தேன் காரிய குருவென்றே எண்ணி திருப்பினேன் காரணமே என்குருவே அய்யா ஒளிந்து வந்தனொளிகாட்டிக்குறியைச் சொல்லுமொருமொழியாம வுனமென்ற பொருளைச் சொல்லுமளிந்து வந்தேன் எம்மிடத்தேயாளய்க் கொள்ள அரகராபரவெளியினொளி

யெனக்கு களிக்துவிடுங்காயத்தைச்சூட்சமாகக் கருணைதருமென்குருவேகடாட்சிப்பீரே. 236

கடாட்சிக்க வேணுமென்றால் சொல்லக்கேளுக யிலாசசட்டமுனிஞானம் பாரு, கடாட்சிக்கு மூன்றெழுத்து மவுனஞ்சொன்னால்லை முறையாய்ச் சொல்லவில்லை சொல்லக்கேளு கடாட்சித்தாரொந்தனுக்குப்போகநாதர் கருவென்னவென்றக்கால் வாலைவாலை கடாட்சித்த மவுனமடா மூன்றெழுத்துங்கேளு கண்ணடுக்கக்கண்டேனான் மகாரந்தானே. 237

மகாரமென்றால் மூன்றெழுத்து மவுனவாலை வாய்மூடல் மவுனமென்றேநீயிராதே மகாரமொடகாரமொடு காரங்கூட்டிமவுனமென்ற வாலையத்தாம் நந்திமூலம் மகாரமென்னிலொடுக்க மென்னவோங்காரந்தான வளமானரவி வட்டமானவாறு, மகாரமதுவிந்துவிலேநாதங்கூடி மவுனமாயிருந்த நந்திமூலங்காணே. 238

மூலமென்றாலபானத்தின் மூலமல்ல மூர்க்கமயேஸ்பாரக் கண்டமூலமல்ல, மூலமென்றால் பராபரத்தின் மூலமல்லமுகவாடச்சக்கரத்தினமூலமல்ல மூலமென்றால் வசிகொண்டநந்திமூலமூக்கு நுனிபுருவமாயத்திடை கீழ்ப்பாரு மூலமென்றால் மவுனமங்கே விந்துவங்கே மூன்றெழுத்து யொன்றான ஓங்காரத்தே. 239

ஓங்காரநாதமங்கே யகாரமெங்கேயுகாரமங்கேமகாரமங்கேயொளியுமங்கே, ஓங்காரசம்பு வங்கேகேசரியுமங்கேயுன் மனையாளிருந்தங்கே யொளியுமங்கே ஓங்காரவட்டமங்கே ரீங்கார மங்கே ஓடுகிறவசவையங்கேஐம்பூதமங்கே ஓங்காரத்துள்ளமர்ந்த பூரணந்தானங்கே யுத்தமனேபிடரி என்ற கண்டந்தானே. 240

கண்டமென்பார் சிவமென்பார் சதமரியென்பார்கலையாமவிடக்கலையிற்பூரியென்பார் குண்டலிபாய் நின்றபொருட கணேசனென்பார குருவிருந்த விடமென்பார் பின்கலைதானென்பார் பிண்டத்துக்குற்பத்தியதுதானென்பார் பிரணவங்கள் நிறைந்திருந்த கூடசமென்பார், அண்டமென்பாவட்சியமா ரேசியென்பாராதியந்த கும்மதமாஞ் சுழினைதானே. 241

தானென்ற சுழினை தானார்தான் சொல்வார் சாதகமா யெந்தனிடநூல்தான் சொல்லுங்காரனென்ற அஞ்செழுத்து மிதுக்குள்ளாச்சுதை முறைகள்பாட வென்று லொப்பனையோ வில்லை, வானென்ற வேதாந்த குருசொல்லக்கேட்டு வாலைகலாகலையுள்ள சித்தர்சொன்னார், ஏனென்றால்கயிலாசங்கொள்ளைபோகுமென்றெவாக்குட் சொல்வார்கள் சித்தர் தானே. 242

சித்தர்மொழிபேச வென்றால் வெகு நாட்செல்லுஞ் சித்தரிடங்
காத்திருந்து வெகுநாட் சென்று, சித்தரங்கேதீட்சையுபதேசமெல்லா
ஞ்செப்பக்கேட்டுத் தமர்தான் தெளிந்துகொண்டு, சித்தர்க்கிரிகை
விதம்விட்டுப்போட்டு தேசங்கள் தனியிருப்பார் கோடிக்கொன்றால்,
சித்தர்போலே யிருப்பார் தெரியார்தார்போல செகத்திலே விசாரித்து
தீட்சைகேளே. 243

தீட்சையிலே மவுனமென்ற தீட்சைசொன்னால் சீஷனுக்கு பாவ
ம்போம்புண்ணியமாச்சு, தீட்சைவைத்த குருவுக்குஞ் சொற்கமாச்சு,
சென்ம சாபல்லிய சிந்தை தெளியவாச்சு, தீட்சைவைக்கக்குருவின்ரு
ள்வாய்க்கவேணுஞ் செப்புமென்றாற் குருநாதன் செப்பமாட்டார் தீட்
சைவைக்க மனதுவர வுபசாரஞ்செய் தீவுவர்க்கங் கேட்டதெல்லாஞ்
சிரக்கவியே. 244

ஈயப்பாகோடி தனங்கேட்டாலுந்தா னெடுத்தே நீகொடுத்துவிடு
மனம் வைப்பார்பார், நீயப்பா தேடும்பொருள் தனங்கள்த்தி நிலையான
சொற்கபதங் காட்டுமோ சொல், தாயப்பா பிள்ளையப்பா பிழைக்கச்
சொன்னேன் தனத்தேடிப் புதைக்காமல் பரமுண்டாமோ, காயப்பாய
மூத்தாக்கால் ரசனையாகுங் கனியாமல் வெம்பினால் நாசந்தானே. 245

தானென்ற புவனைத்தாய் தனக்கும் பூசை தனங்காவிடக்காவிற்றி
ரிபுரையின் பூசை, வானென்றவலக்காலிற் புவனை பூசைவளமானசத்தி
யுட பாதபூசை, நானன்றாய்ச் சொல்லுகிறேன் கைவண்ணந்தான் நாற்
பத்து முக்கோணஞ் சண்முகமாம்பூசை, தேனென்றமொழியுடையதே
விபூசை சேரவே யறுகோணத்தீர்க்கங்கேளே. 246

தீர்க்கமாய் நாற்பத்து மூன்றுகோணங் திடமாக சொல்லுகிறே
னன்றாய்க்கேளு கார்க்கவேயறுகோணங் கைவண்ணந்தான் கைமுறை
யாயதின்மேலே முக்கோணந் தொட்டு, சேர்க்கவே யறுகோணந்தீரவிட்
டுசொல்லவே நடுக்கோணத்துள்ளே கேளு பார்க்கவே விந்திட்டு உள்
முக்கோணங் பாங்கான நாற்பத்து முக்கோணமாச்சே. 247

ஆச்சப்பா விதினுள்ளே றீங்காரமிட்டு அப்பனே அடுத்தவறு
கோணத்துள்ளே, வாச்சப்பா சடாதார தீட்சைதன்னை வரைந்தெழு
தியிதின்மேலே முப்பத்தாறுகோணம், பேச்சப்பா மேலான சண்முகத்
தைத் தொட்டுபிலக்கவே முக்கோணந்தோறுங் கேளு, நீச்சப்பா சிவ
சத்தி தீட்சை தன்னை நேயமாய்க் கைமுறையாய் நிறையத்தாக்கே. ()

தக்கானபதினாறு கோணத்துள்ளே தயவான அஷ்டகர்மவாலை
தீட்சை, நோக்கானயஷ்டசித்தி மூலங்கூட்டு லோகமென்ற புவனையுட

சக்கரந்தானுச்சு, வாக்காதி திரிபுரைக்குமிதுவே சக்கரம் வாசமாய்த்தங்கமொரு பலத்தகட்டி நாற்பத்துமூக்கோணத்தை யறைந்தேனுன் சித்தியடா வருமைதானே. 249

அருவுருவாம் நின்றதிக்தச் சக்கரத்தின்மேலே ஆதியாமிதினெட்டுவிதின் பேர்கேளு, திருவுருவாம் பதினாறு இதழும் போட்டுமதனிந்திதின்மேலிருபத்தஞ்சி தழும்போடு, அருவுருவாபன்பத்தோரட்சரத்தைமாட்டுவாகாக விதின்மேலே ரெண்டு பிரகாரந் தருவுருவாய்ச்சதிரமாய் மூன்றுவரைவிட்டு தப்பாமல் நால்வாசல்தானும்போடே. 250

போடப்பா உள்வீதிக்குள்ளேகேளு புகழான அஷ்டபாலகர்தானபீசம், சூடப்பா அஷ்டபெந்த பீசம் போடுசுகமான மறுவீதிக்குள்ளே கேளு, நாடப்பா தேவியுடபூசைமார்க்கம் நன்றாகச் சொல்லிலேனையந்துபாரு, ஈடாகவென்போல வெவருஞ்சொல்லா ரெந்நூல்போலெந்நூலுமிது சொல்லாதே. 251

சோல்லுவாய் நால்வாசல்தோறுங்கேளு சேரவே துவாரபாலகர்தான்பீசம், வெல்லுவாய்க் கொடிக்கம்பம் நந்திபீசமீறுமலொவ்வொன்றுமுக்கோணங்கள், வ்ல்லமையா மொன்றுபோலெல்லாங் கீடுவரைந்தெழுது நாற்பத்து மூக்கோணந்தானே, சொல்லுவேன்பூசைவிதிகேளு சுருக்கடா பாதத்தின் பூசைதானே. 252

பூசைதனக்கன்பான பொற்சிலைபோற் பெண்ணை புகழான நாற்காலி பலகைமீது, லாசனம் மெத்தையொருகளேத்து வைத்துஆயிகாயென்றதாய்பதத்தைக் குறட்டின்மேல்வைத்து, நேசமாய்பாதத்துள் மெத்தைபோட்டு நிறையவே யபிஷேகஞ் செய்தபின்பு, வாசமாய்விபூதியொடு சந்தனமுஞ் சாற்றுவளமாகச் செம்பரத்தம் பூவுஞ்சாற்றே

சாற்றடா தாய்தனக்கு ஆபரண மெல்லாந் தரிக்கழுத்தில் கண்டசரம்போட்டுக்காறை, சாற்றடா சூரியனபோல் ரத்தின கொம்பு சதிரானகுழைக்காதில் பொற்றோடப்பா, சாற்றடா கிரீட முடியரைநாண்பூண்டுதருவான தாய்பதத்திற் கொலுசுபூட்டி, சாற்றடா நூபுரங்களெல்லாமிட்டு சாரவே சிறுகைக்குக் கடையம்போடே. 254

பூட்டுவாய் பொற்கடகம் பொற்சரிகை முன்கைக்கு புகழானதங்கத்தினவிரலாழிதன்னை, பூட்டுவாய் பாதவிரற் கெல்லாம் பொன்னைப்பூட்டுவாய் ஆபரண மெல்லாஞ்செய்து, பூட்டுவாய் சுழிலையிலேநந்திகுட்ச்ம் பூபோதித்து தாய்மனத்தை நிலைக்கப்பண்ணிபூட்டுவாயகுருசூட்சங் குருநாதன்தான் பொற்றகட்டின் சக்கரதனதைப் புகழ்ந்துவையே.

வையப்பாபாதத்தின் படமேலேயா வளமாகச் சக்கரத்தினபிஷேகஞ்செய்து, வையப்பா சந்தனம் விபூதி சாற்றிவாசமாய் ஞானமொடுகை

ண்படுத்திவையப்பா சிவந்த புஷ்பமெல்லாஞ் சாற்றி வளமாகசெண்பகப்பூமாலைசாற்றி வையப்பா சக்கரத்தின் பாதபூசை மகத்தானமான தமாம் பூசைபண்ணே. 256

பண்ணப்பா தூபமொடு தீபங்காட்டி பரமானம் பால்பழங்கள்ரசவர்க்கங்கள் நண்ணப்பா பலகாரம் பெரும்படைப்பாயன்னம் நலமாகப் பொங்கியே பொரித்து வைத்து, பெண்ணப்பா நெய்வேத்தியமெல்லாஞ்செய்து வியல்யான மணியோசை சங்கநாதங், கண்ணப்பாஜேகண்டி நாதவோசை கியானமுட னீயிருந்து களிகொள்வாயே. 257

களிகொண்ட ஆசையடா சுத்திவாங்கி கருணைபெறவென்றேதான் தாய்கைக்கீந்து தெளிகொண்ட கும்பம்கோதரத்தில் வைத்து நேசமாய் பூசித்து கையில்வாங்கி, விளிகொண்ட புருவமய்ய மொளிக்குள்காட்டிவேதாந்தக் குருநாதன் தாய்கைக் கீந்து களிகொண்ட மவுனமுடன் தாய்தான்கொண்ட தன்சேஷங் குருநாதன் கரத்தில்வாங்கே. 258

வாங்கியே குருநாதன் கொண்டசேட மகத்தான சீஷருக்குக்காத்திலீவாய், பாங்கானபிள்ளைகள்தான்கொண்ட பின்புபதியாகத்துளசி பத்திரங்கையிலீந்து, தேங்காயல் தின்றிரக்க மூத்தியாகுந் தேவிதனக் கன்பான பாதபூசை, ஓங்கியே பின்பெல்லா முச்சாடித்து உத்தமனே நிர்மாலிய மொழியப்பாரே. 259

ஒழிந்தபின்பு தன்னை முதற்பிள்ளையெல்லாம் ஓகோகோதாய்முதலாய்பசிகளாறி, தெளிந்தபின்பு சிவரோக குருநாதன் தான்செயிக்கலாஞ்சாம்பிராணித் திலதஞ்சாத்திய, யளிந்தபின்பு களபசுகந்தாதியிந்து யவரவற்குத் தாம்பூலந்தன்னை யீந்து, சுளிந்த கும்பமவுனமென்றசூட்சந்தன்னிற் சொற்குருவின் பீடமென்பற்றச் சொல்லே. 260

சொல்லானமவுன முற்றால் சீஷரெல்லாஞ் சொற்கபத மோட்சகதி பெறுவாரய்யா செல்லான யோனிநாலெழு வகையின் தோற்றஞ்செப்புகிறே னன்றாகத் தெளிந்துகேளு, கல்லானமலை பாவை தாபரங்கள் காணங்களாவன சாதிமிருகசாதி, வல்லானை மூத்திரத்தில் வாழுஞ்சாதிவகையெல்லாம் பிறந்திறந்த வரிசைகேளே. 261

வரிசையாய் நவலோகம் நவரத்தினங்கள் வாகான சாக்குசுவ்பாஷாணங்கள் வரிசையாய் மணத்தாலே பொறியினாலே ஓமென்றபிரணவந்தான் கோடிபிறப்பாச்சு, பிரியமாய் அக்கத்துக்கேவித்துத் தோன்றி பிலத்துதடாவுன் பிறப்புபிறப்புங்கோடி, பரிசிக்கவாரலாஞ்சித்தாலம் பஞ்சபாதகம் விளைந்தகளையைப்பாரே. 262

களையான சீவகளை தீபம்போலே கண்டுதாட வெண்ணை திரிமாண்டபோது, களையான சீவகளை யெகதேபோச்சு கனலொளியின்பூரணக்

தானெங்கேபோச்சு, களையானகதலி குலைசாயும்போது காரணமாய் முன்போலேபின்புடாமே, களையானசீவகளைபக்கத்தேதான் கணவெடித்தகதையாச்சுசீவன்காணே, 263

காணப்பா இப்படியே பிறப்பிறப்பு மார்க்கங்கண்டறியார் சாஸ்திரங்கள்சொல்லாதையா தோணப்பா வேதாந்தஞ் சொல்லிவிட்டேன் சொன்னதொருபாடலெல்லாஞ் சத்தியவாக்கு பூணப்பாசெவிகேட்டுங்கண்தான்கண்டும் புகழானவாக்கிலே மொழிந்தபேச்சை, வீணப்பாமனத்தாலுமறிவினாலும் விளங்காதபஞ்சபாதகத்துள்ளாச்சே.

ஆச்சப்பா பஞ்சமாபாதகந்தா னப்பனே கோடி சென்மமாகிப் போகும் பேச்சப்பாவாசை யெல்லா மளவற்றகர்மம் பெருகியேயது வதுவேசமுத்திரமாச்சு, நீச்சப்பா சமுத்திரத்தை நீஞ்சப்போமோ நிலையில்லைகரையில்லைமாயையாட்டு, மூச்சப்பா வற்றிடத்தேகூணத் திற்சித்திமுழுப்பாவம்பஞ்சபாதங்கள்போமே. 265

## பாவவழி.

பாதகங்கள் போமென்னிற்பாவமென்ன பரமான வென்குருவே யருள்செய்வீர் சூதகமாம் நாதத்துள்விந்து புத்திசுகம்போலேயிருந்துதடாவதுவே பாவப்பேதையரைப் பெண்டுவைத்துமைதனமேசெய்து பிறந்தாயேயவள் வயிற்றுட்சென்மித்தேதான். மாதாவேயென் தாயேகொடும்பாவி நீ தான்மகவாகப்பிறப்பட்டால் ஞானமாமே

ஞானமா மென்றீரேமலடுமெத்த நாட்டிடரிது வெல்லாஞானந்தானே, தானமாம் நெல்லுக்குள் பதர்போனுக்கால் சாயுச்சிய பதமங் கேகிட்டிப்போச்சோ, வேனமாய்க்கோடானுகோடி சென்மமெடுத்தல்லோ இதுமலடுவென்றாலேது, கூனராய் குருடராம் செவிகேளாராய் கூறுகெட்டவலுத்தராய்க் கசடராச்சே. 267

உலுத்தராயீயராய் குணமில்லாராய் ஊமைகளாய் மூடவராய் கொண்டியாகி, பிலுத்தராய் கைமுறிந்த சப்பாணியாகி பேதித்யனதாகிப்பெண்ணேறைசைக்குள்ளாய் சூலத்திரமே படைத்தனெஞ்சவஞ்சராகி கூறுகெட்டபிறப்பாச்சுகொடுமாபாவம், விலுத்தங்கே குழிநாதத்துள்ளேபுக்கில்விட்ட குறையிப்படியேதூக்குங்காணே, 268

விட்டகுறையொழிவதெப்போபாதங்கள் மேலானபாவமதுஒழிவதெப்போ, திட்டமுடனென்குருவே சொல்லவேணுஞ் சிறுபிள்ளாய் சொல்லுகிறேன் கேளுகேளு வஷடகர்மசிவயோகக் குருவைக் காருவாண்டு பன்னிரண்டாகி லருளிச்செய்வார் செட்டிகள் போல் திரியாதேகுருவைக்காருதிரமாகச் சோதிப்பாய் சேர்க்காயே. 269

கிஷுணமெனத்தேர்ந்தால் மவுனஞ் சொல்வார் சிற்றெறும்பு ஆறை யிலே கற்குழிந்தாப்போலே, பாசமங்கே வைக்கவைக்கப் பாவமெல் லாம் பர்வதம்போல் பஞ்சுவைத்து வனுவளவுதீயை, நேசமுடன்வை, த்தகதைபோலேயாச்சு நிலைத்து நின்றகுருவுக்கு மனங்கோணலாகா வேசைமனம் போலாகியலையாதேநீ வேதாந்த குருபதத்தை மேவு மேவே. 270

மேவவே தசதீட்சை யுபதேசங்கேளு தேதாந்த சத்தியுட்பூசை கேளு மேவவே யஷ்டகர்ம மறுவகையுங்கேளு விசுத்தியென்ற சுழிமு னையினுட்டங்கேளு, மேவவே சிவபூசை மார்க்கங்கேளு மேலாகத்திரி யாதேதன்னைக்கேளு, மேவவே தலைவனைக்கேள் புவனைக்கேள் வெளி யானபூரணத்தினிலையுங்கேளே. 271

நிலவரமா யிருந்தவகை யெல்லாந்தானே நேசமாய்ச் சொன்னாக் கால் சித்தனவாய் தலைவனு நீயுமப்பாதென்னைக் காண்பாய் சமுசார மாயை யெல்லாந் தவறுண்டேபோ, மூலமெழுகாயுள்ள மெல்லா முரு க்கிக்காரு வுத்ததொருசிஷனென்றே குருநாதன்தா, னலையாமலாத் தினம்போலறிவைச்சொல்லி யந்தரமாமறிவதனையறிவிப்பாரே.

## அஷ்டகர்மம்.

அந்தரமாஞ்சுழினையிலே நந்திவாழ்க்கை யாதாரவானந்த ரூபங் காணுஞ், சுந்தரமாமஷ்ட கர்மஞ்சித்தியாகுந் தொழிலானமாந்திரிகஞ் சித்தியாகுஞ், சிந்தையுமோ பராபரத்திற்சித்தியாகுந் தேவியுடதச தீட்சைசித்தியாகும், வந்ததொரு வணிமாவுங் கிரிமாவோடு வளமான லகுமாவுமகிமாவோடே. (272)

## வசீகரசித்தி.

மகிமாவு பிருத்தியொடு பிருகாமியந்தானும் வசியதோமசிரத் தோடெட்டுஞ்சித்தி, சுகிமாவுமிவர்களுடவேவலாகுஞ் சொல்லுவே னஷ்டகர்மங்கை முறைதான்கேளு, முகியானவசீகரத்தின் சித்திகே ளுமூர்த்தியாம் வில்லைமாய்யல்ஙைகமீதின் மகிழுவே வசியமய்வென்றே சொல்லவாச்சுதடா விருப்பத்தைஞ் சறையுளாமே (273)

ஆமப்பாரேகைதான்னறுகிறி யப்பனே ஆறுவரைகுறுக்கே கீறி நாமப்பா இருபத்தஞ்சறைக்குளெல்லா நாட்டடா இருபத்தைந்தட்ச ரத்தை, ஓடிப்பாவரைதோறு மெழுத்துக்கெல்லா ஓமென்றே பிரண வத்தைச் சுற்றிக்காட்டி, தாமப்பாமேல் ரேகை சூலங்கீறி தப்பாம லிருபத்துநாலு சூலத்துக்கும், வேமப்பா ஸ்ரீ யெனறு மேலேகட்டி விளங்கவே ஹ்ங்காரமீறப்பூசே. (274)

மீறவேமுல்லைப் பூதன்னைச்சாற்றி வித்தையெல்லாஞ் சீரணித்து அவ்வையாலே, கூறவேவெளியொளியாய்ப்பிரணமுன்னாக கூவுதற்கு வசிமயவென்றுவோதி தேறவே கிழக்குமுகமா யிருந்து சேவிப் பாயாயிரத்தொண்ணூறு வோதத்தான், மாறவேருத்திராட்சமணிபதி னாறுக்கும் வாகாகமுகமணிதான் குளிகைகட்டே. 275

கட்டப்பாரச குளிகைவசிகரமாங்குளிகை கண்டவுடனஷ்டகர்ம ஞ்சித்தியாகும், விட்டப்பாசொல்லமேதவசிகரமே சித்திமேவான வசி யத்துளெட்டுமாடுங், கொட்டப்பாதே ளென்றால் கோஞ் செல்லுங் கொடுஞ்சுறுகசுளிகையுடமார்க்கந்தானும் அட்ட சித்திகைக்குள்ளாங் காமவெட்டும் அகஸ்தியருக்குச் சித்தியடா அறிந்துபாரே, 276

மாரணம்,

அறிந்துபார் மாரணத்தின் கர்மஞ்சொன்னேன் அத்திமரப்பல கையிலே சக்கரத்தைக்கீறி, செறிந்து பார்பநய வசியென்றுன்னிட்டு திடமாகமுன்போலே கைமுறைபாய்ச்செய்து, வெறிந்து பார் ஐங்கா யம்மேலே பூசிவெகுசுறுக்காவெறுக்கம் பூமாலைசாற்றி, முறிந்துவிடு தென்கிழக்கு மூலைபார்த்திருந்து மூன்று பத்து நாபிமரம்மணிதான்செ ய்யே. 277

பேதனம்.

செய்யப்பாபதினாறு மணிதான் மூர்ககந் திடமாகரசகுளிகைமு மணியாய்க்கட்டி மெய்யப்பாவாலையுடன் மநபவசியென்று வெற்றியே யாயிரத்தெட்டு ருவிற்சித்தி, வையப்பா பேதனத்தின் கர்மங்கேளுவா கானத்தில்லை மரப்பலகைமீதி, உய்யப்பா சக்கரத்தை நன்றாய்கீறி உத்தமனே ஐங்காயமுணப்பூசே. 278

ஊணவேவசிநமய வென்றுள்ளிட்டு வுலவாட்டு இருவாத்திப்பூ வைச்சாற்றி, தோணவேதென் மூகமாயிருந்துக்கொண்டு சுகமாகவா லையுடன்மசியம வென்று, நாணவேயெட்டிமர மணிதான் செய்து நலமாகப்பதினாறு மணிக்குங்கேளு, பூணவேபேதனமாம் ரசகுளிகை கட்டு புகழாகவாயிரத்தொண்ணூறுவிற்சித்தே 279

ஸ்தமபனம்.

சித்தான ஸ்தம்பத்தின்கர்மங்கேளு சீராகவலிமாப் பலகைமீதி ன், மூத்தாகும் யவசிமநவென்றறையிலிட்டு மூலமுதலலைக முறையா ய்தெளிந்து கீறபத்தான ஐங்காயமேலேபூசி பரிவாக வெள்ளலறிப் பூவைச்சாற்றி, கொத்தாகவாலையுடன் யவசிமநவென்று கூறுவாய்தெ ன்மேல் முகநோக்கே, 280

### வித்து வேஷணம்

நோக்கியே தாமரைக்காய்மணி பதினாறுக்கு மருவுரசத்தம் பனந் தின்குளிகை முகமணியாம் தாக்கியேபாயிரத்தெட்டுவிற்சித்திதப்பா துவித்து வேஷணத்தைக்கேளு பாக்கியமாய்பாதரிகைப்பலகை மீதிற்பண்பாகயமவநசியென்றறையுள்ளிட்டு, ஆக்கியே ஐங்காயமேலேபுசி அப்பனே செவ்வலரிப்பூவைசாற்றே. 281

சாற்றியே மேல்முகமாயிருந்து கொண்டு தயவாகவாலையுடன்யம வநசியென்று போற்றியேயிலக்கை மணிபதினாறுக்கு பூட்டுவாரசகுளிகைமுகமணியாய், தோற்றியே சகலமெல்லாம் வித்துவேஷிக்குஞ் செப்புவாயிரத்தொன்னூறு விற்சித்தி, யேற்றியேசகலவுச்சாடனத்தைக்கேளு இதமான பலாப்பலகை இணங்கிச் செய்யே. 282

### உச்சாடனம்.

இணங்கியேபலகை செய்வாயகலநீளம் ஏகசமனங்குலமோ நாலாகத்தான், பனைக்கவே இருபத்தஞ்சறையுங்கீறி பத்தியாயசிமநவ வென்றுள்ளிட்டு, பனைக்கவே ஐங்காயமேலே பூசியப்பனேகாட்டுமல் லிமலரைச்சாற்றி, பிணைக்கவேவாலையுடன்யசிவநவுவென்ன பெருவாழ்வுநிதிக்கோண மூலைப்பாரே. 253

பாரப்பா வய்வான மூலைநோக்கி பதறுதே துசிமணிபதினறுக்கும் நேரப்பாரசகுளிகை முகமணியாய்க்கட்டி நிலவரமாயாயிரதெண்ணூறு விற்சித்து, காரப்பாதூபமொடு தீபந்தானுங்கற்பூராலாத்தியொடு காட்டாய்ச்செய்து, சேரப்பாவஷ்டகர்மஞ்சித்தியாகச் செப்புகிறேன் குருநாதன் திரத்தைக்கேளே. 284

திறமானதங்கரவிக்கடகம் போடு சேர்ந்தபவித்திரம் போடுவிரலாழி போடுவெறமானபாதரட்சை குறடுபோடுவப்பனே வஷ்டாங்கவழிகள் மூணு, நிறமானவாறுகட்டிக்கவசம் போடுநேறமாயுட்கழுத்தில் ரசமணியைக்கட்டு, மறவாதேக்ணுக்காலிற்கொலுசு போடுவாசமாயிருகரமுமணிகள் கட்டே 285

கட்டியேகாஷாயங்கவிசனரே பூண்டுகரமீதில் ருத்திராட்சமணிகள் பூண்டு, கிட்டிஞசனமறையிற்றரித்துக்கொண்டு கிருபைபெறபுலித்தோலின்மேலிருந்து, வட்டிவாய்பரம வாசத்திருந்து அகாரமுதலுகாரபிரளயத்திலிருந்து, எட்டுவகைகாமமெல்லாம் நன்றாய்சசேபெளிதல்லசித்தருக்கென்றெடுத்தவாறே 286

### மோகனம்.

வாறானமோனத்தின்கர்மங்கேளுவாகான வாலிமாப் பலகைமீதில், கூறானஇறுபத்தஞ்சறையுங்கீறி கொண்டதிலே நயவசிமவென்று

ள்ளிட்டு, பேறுதலைவங்காயமேலே பூசிபித்ததாஞ் செம்பரத்தம்பூவை ச்சாற்றி, விருனவாலையுடனஞ்சங் கூட்டிமிளகுமணிபதினறில்விரு ம்பவோதே. 287

ஓதடாரசகுளிகை மணியாய்க்கட்டி யுத்தமனே யாயித்தெண் ணூறுவிற்சித்தி, யேதடா வென்றுக்கரலொன்று மில்லை இலங்குருநா தன்மொழிபற்றவேணும், ஆதாரவாயணைப்பதற்குங் கர்மங்கேளு அப் பனே வெள்ளிநாவல் பலகைமீதிற், போதமெல்லாம் நிறைந்தசிவம நவென்று பூட்டியே ஐங்காரமேலேபூசே. 28[illegible]

பூசியேதாழம்பூமலரைச்சாற்றி மிகழால்லும் ஆம் ளளவும் சிவம நவென்று, ஈசானமுராநோக்கி யிருந்துகொண்டு விச்சைபெறப்படிக ணிபதினறுக்கும் வாசமாய், ரசகுளிகைமுகமணியாய்க் கட்டிவழங் வேயாயிரத்தெண்ணூறு விற்சித்தி, பூசையிதுவல்லோ வொளியை காட்டும் பூட்டெல்லாமிது பூட்டுத்திறத்திட்டேனே. 28[illegible]

திறந்திட்டேன்சீஷருக்கு இப்படியேசெப்பு செத்தபிணமா லுந்திரும்பிபேசும், மறந்திட்டேனென்றுதே மக்கள் வேண்டில் வ ங்கவேயஷ்டகர்மங்கை முறையாய் சொல்லு. பிறந்திட்டார் பிள்ளை ளேயுங்களுக்குப் புத்திபேசுகிறேன் முப்பத்துரெண்டுறப்புங், க திட்டபடியாக சென்மித்தாக்காற் காலனுக்குமுயிர்கொடுக்கக் கா டொணுதே. 29[illegible]

ஒண்ணுனமனமல்லோ பிலக்கவேணு முற்றகுருதெரிசனை பெரவேவேணுங், கண்ணுலே யொளிரல்லோகாணவேணுங்கற் ண்டால் சாகாமலிருக்கவேணும், பண்ணுனவெந்நூலைப்படிக்கவேணு ம்பார்மகனேஞானமெல்லாம் நன்றுய்த்தோணு, முண்ணுதவமிர் ல்லோ வுண்ணவேணுமூல்றகுருநாதனுடவுண்மைகேளே, 29[illegible]

உண்மையென்ற பொருளுரைக்கச் சொல்லக்கேளு வுதிரமெ ஞ்சீவகளை தன்னைச்சொல்வார் வெண்மையென்றவித் தென்னுமகா பீடம்வேதாந்தசிவனிருந்தார் சுழினைக்குள்ளே, கண்மையென்றகல் னுடமகாரபீடங்கருத்துரவே உகாரமது கண்ணிற்றேன்றுங், த மைதென்றகுருபதந்தான்ரவியொளியைக்காணுஞ் சாதகமாய்ப்பிள்ளை ளே சாதிப்பீரே. 292

யோகவகை.

சாதிக்கும்யோகத்தின் வகையைக்கேளு தப்பாமற்சொல்லுகி றேனப்பியாசிக்கவோதிக்கும் பாலன்னமொருபோதுண்டு வுத்தமனே மலசறங்கள் வாறபோது பேதிக்கும் போமலத்தையபானவாய்வால்பி லக்கமேயிடுக்கா தேயமுரிதானுஞ், சோதிக்கும்பாய்படுக்கை யிடக் கைதலைகீழாய் துயிலுவாயிழிக்கானுடீக்காதென்னே 293

என்னவே விந்துதனையிகழவேண்டாம் எடுத்துக்கெசழல்லாமா ஸைபண்ணவேண்டாம், பின்னமாயபிணிகள்ளு கொள்ளவேண்டாம் பேரான கபற்கள் கொள்ளும்போது, கன்னவேதிருமந்திரங்கொள் ளவேண்டாம் கடும்புகையாய்க் கஞ்சாவைக்குடிக்கவேண்டாம்,மென்ன வேகற்பமுதல் யோகம்ரெண்டுமேறுது புத்திபினுற்றேறுவாயே.

சரியை,

புத்திதானிப்படியே கடந்துகொண்டாற்போதகமாய் யோகசித் திகைகுள்ளாச்சு, பத்திபிந்தச்சரிதையொடு சேர்கையோகம் பாமாஞ ஞானமொடுநாலுங்கேளு, வத்தியிந்தச்சரிதையுடன் குணத்தைக்கே ளுவப்பனே தேகமாம்நாதத்தாலே, சுத்தியிந்தவாய் வாகும்விசையின லே தொல்லுலகமுண்டாச்சு சரிதைவாழ்வே. (296)

கிரியையோகம் ஞானம்.

சரிதையிலே கிறிகையுடன்குணத்தைக்கேளு தருவானவிந்துவி ஞற்றேறவுமீறி, சரியையிலே சலராசிலிங்கபீடஞ்சரியையிலே யோகத் தின்குறியைக்கேளு, சரிதையாம் விந்துவடனுதங் கூடிதத்துவமெல் லாம்பிறந்த நாடியாலே, சரிதையிலே ஞானத்தின் கருவைக்கேளு தரு தவுள்ளத்யேமர்ந்தகணேசன்தானே. 297

கணபதியே பஞ்சபூதத்தின்கீழாய் கெடியாகப்பிறப்பிறப்பாய் வ ளர்ந்தஞானி, கணபதியே பெண்பிள்ளையாண்பிள்ளை யென்று கீழ்வா சல்புக்கியே யண்டபிண்டமானூர் கணபதியேயானிரண்டும் வினைதான் ரெண்டிட கிருபையுற்ற பூரணமாங்கண்டோரில்லை, கணபதியேதாபர முஞ்சங்கத்தோடு கெடியாமிந்நூல் விரதமேழுந்தானே. 298

தானென்றசரிதையிலே நால்விதமுஞ் சொன்னேன் தப்பாமல் கி ரிகையுடவிபரங்கேளு, வானென்றவல்லரையஞ் சத்திநாதமகத்தான விந்துடனே கூடும்போது, தேனென்றருசிபோலே சடலந்தாங்கிசிவ படமாருதமாந்தீயிலேறுவ், கானென்றசாமீபங் கருணையென்று கண்டு சொன்னேன் கிரிகையுடயோகங்கேளே. 299

கேளப்பா தசநாதவாய்வுக்கெல்லாங் கிருபையென்றவாதியென் றேகிண்டிப்பார்க்கும் வாளபபாதசகாரியமென்றே வாழும் வாசனை யாங்கிறிகையில்ஞானங்கேளு, வாளப்பா வட்சரங்கள் தன்னைப்பற்றி யாசையாயிரண்டிலுந்தானறியப்போகும் வேளப்பா குறிகையிலேமுக் குணமுஞ்சொன்னே கிரிகையுடயோகங்கேளே. 300

விளம்புகிறேன்றவிமதியுஞ் சழினைக்குள்ளாய் விண்ணுட்டங்க ண்ணுட்டம் விசையினுட்டம், விளம்புகிறேனறிவாலே நாடிமூன்றும்

விழும்பியே செட்டுப்போல் வாசியோகம் விளம்புகிறேன் யோகத்தில் ஞானங்கேளுவேதாந்தந்தியல்லோ மூலத்தீயின், விளம்புகிறேன் தச நாடி கடந்தயோகதவறுன மூக்குநுனிமேவிப்பாரே. 301

மேவினேன் யோகத்திலிருகுணமூஞ் சொன்னேன் வெளியொளி யாய்முப்புரமும் பத்தினூடே, மேவினேன் மண்டலங்கள் மூன்றிறு லேவேதத்தினக்தடங்கே நடன்மங்கே, மேவினேன் புருவமையத்தம ரவாசலங்கே மெய்ஞ்ஞான மென்பதங்கேயதிலேபுக்கி, மேவினேன் மெய்ஞ்ஞான நாடிவாய் வால்விந்துவினுல் பூரணமேஞானமானே

ஆமப்பா தசகாரியந்துலநாடி யாசையாம் பசுபதிபாசத்தோடு, தாமப்பா மூன்றுவகை மும்மூன்ருச்சு சாதகமாய் கூடினபின்னென் ருய்ப்பேச்சு, வோமப்பா தசகாரிய முற்றும் பாருவொளியாவதிதுக் கல்லோதசதீட்சை சொன்னேன், நாமப்பா விதுவெல்லாஞ்சுத்தியா கநாட்டினேன் சாபங்கள் நிவர்த்திசெய்யே 303

சாபநிவர்த்தி

செய்யப்பாவகஸ்தியர் சாபந்தன்னை தீர்ப்பதற்கு வகைசொல் வேன்கேளுகேளு, மெய்யப்பா ஓம் ஔவும் உள்வுட்கூடி விளங்கவே வகஸ்தியசாபம் நசிநசியென் றய்யப்பா பன்னீராயிரமுருகவேறித்தா ஓம்நமசிவாயமென்றே யோதினலுந், தொய்யப்பாசொற்பதமுண்டான் மப்பா துடியானநவசித்தான் சாபங்கேளே. 304

கேளப்பா பிரணவமாம் பரைவாலை தானுங்கெலிக்கவே சிவாயக மா நவவர்த்தர்சாபம்; வாளப்பாநசிநசியென் றுரைப்பாய் முன்போல் வாச்சுதடா மந்திரமெல்லாம் சித்தியாகு, நாளப்பா வேழுவகைசாபந் தீர்க்கநாட்டினேன் செச்சாப நிவர்த்திகேளு, தேஙப்பாகொட்டுதல் போல்சாபமெல்லாந் தீபபொரியைப்பஞ்சில் வைத்ததைதை போலாச் சே. 305

ஆமப்பா ஓம்சீயும் செச்சாபம்நசிநசி யப்பனே முன்போலேயரு விலேறறு, வோமப்பாபோகர் சாபம் நிவர்த்திகேளு ஓசிவயயசுக்ரசுக்ர சாபம் நசிநசியென்றூது; நாமப்பா முன்போலே சேவிப்பாய் பின்நா ன்முகப்பிரமசாபம் நிவர்த்திகேளு, தாமப்பா ஓங்சங்வங் பிரமதேவா சாபம்நசிநசியென்று தாக்கிடாயே. 306

தாக்கவே அரிசாபம் நிவிர்த்திகேளு தயவாக ஓம் அங்சங்வங்கெ ன்றேதா, ஞக்கவேவிஷ்ணுசாபம் நசிநசியென்றே தட்டியே சேவிக்கச் சித்தியாகும், பொக்கியேருத்திரன் சாபத்தை நீக்கிப்புகலுவேனுலெ ழுத்தஞ்சாத்தியம் கொண்டோது, ஏற்கவே நசிநசியென்றோதும் பேது எடுத்ததொரு மூலியெல்லாஞ் சித்தியாமே, 307

சித்தியாம் வாதமொருவாசி மூலந்தெய்வமா மந்திரவஷ்டகர்மந் தானுஞ், சித்தியாங்கற்பங்கள் குளிகையோகஞ் செடத்தினுள்ளேபஞ்சகர்த்தாளாதியந்தஞ், சித்தியாம் நந்தியொடு மனமூந்தேறுந் தீட்சைமுதலனுஷ்டானஞ் சிவபூசைதானுஞ் சித்தியாஞ் சக்கரங்களை மானதமாம் பூசைதெகதீட்சை கவனமுதற்சிக்கும்பாரே. 308

சிக்கவேமயேஸ்வரத்தின் சாபம்நீக்க செப்பினேனுலெழுத்துஞ் சாத்தியங்கொண்டோது, சிக்கவே நசிநசியென்றன்பாயோது தேறவேசதாசிவத்தின் சாபம்நீக்கி, சிக்கவேசாத்தியத்தால் முன்போலோது திடமாகநவசாபமுருவையேற்றி, சிக்கவேலட்சத்தெண்ணாயிரத்தில் தெளிவாகுமொளி பெறலாஞ் செயங்கண்டீரே. 309

கண்டேனிப்படியே சாபம் நீக்கிகைகண்டபடி சொன்னேன் கனவில்லாமல், விண்டேனுங்களுக்கா யெந்தன்மக்காள் விண்ணொளியைக் கண்ணொளியால் மேவிப்பார்த்துக், கொண்டேனலட்சயத்தின்நந்திபேசகுண்டலித்தாய் கண்டத்தில் கூர்ந்துபார்த்து, வண்டமுற்பதமளவுமளித்தாள் கன்னியாசை வைத்தாள் மோசம்வைத்தேனுண்டோனே. 310

ஆண்டிருந்தமவுனத்தைச் சுழினையுள்ளே யாடுகிறவழி மார்க்கம் வாசிபார்த்தேன், பூண்டிருந்தேன் மனதையங்கே ஓட்டிப் பார்த்தேன் புருவமய்யத்தகர் திறந்துபோனேன் மேலே, தாண்டிடும்போதறுசமையஞ்சுற்றிக்கண்டேன் சஞ்சரிக்கமாட்டாமற்ற வறவந்தேன், தூண்டினேன் விளக்கொளியை சூட்சங்கண்டேன் சொற்கபதங்கைகொண்டேன்றயற்வென்றேனே, 311

வென்றேனான்சரிகை முதற்கிரிகைரெண்டும் வெட்டினேன் திரோதாயிமாயையெல்லாஞ், சென்றேனான் மேருவிலே கேசரியைக்கண்டுதெளிந்தே நான் மனந்தன்னையறிவிலூட்டி, ஒன்றோனென்ற பொருட்சம்புநாத மொகோகோ மூன்றுமென்று பூணிப்பாரு மென்றேனானுங்களுக்கு வித்தைகாட்டி யென்னசொல்வேனிதனிடவியல்புதானே, 312

தானென்றஞானமடா சூத்திரத்தின்தான் சாதிதனக்கலோமகுணத்தின் வினையாம்பத்துங், கானென்றயோகமெல்லாம் கைக்குள்ளாகக்குங் கண்ணூட்டஞ் சுழினையிலே காந்திகாண்பான், வானென்றவுலகமெல்லா மயக்கமென்ற மவுனமென்றவாலே தன்னை வணங்கிச் செய்யே, தேனென்றபூசையுமோகித்தியாகுந் தேறுவான் சூத்திரன் தொட்டேறுவானே. 313

ஏறுவான் கணிகனென்றால் யோகத்தே தானெனிதல்ல வென்றேதான் மவுனத்தைபூணி, கூறுவான் ராசரிஷிக்கிறிகைமேலே கொண்

டேறித்சரிதையிலே பிரமகுலமானான், மீறுவான்பிரமப்பட்டங்கேயாகி விருதாகவடியறிந்து முடிகண்டோர்க்கு, ஆறுவான் கடிகையொன்றும் பிரமரிஷியாகுமாதியென்ற யோகமடாபிரமந்தானே. 314

பிரமரிஷியென்பதற்கு ஆராலாகும் பிதச்றுதே சூத்திரனுஞ்சாதிக்காகும், பிரமரிஷியென்று மனப்பேணியேறும் பிள்ளைகளைச்சேகரிக்கமனது பூணும், பிரமரிஷியானேனேனெங்கள் குலமெல்லாம் பேரப்பாநந்திமுதச்சித்தரெல்லாம் பிரமரிஷியானவர்கள் நாலாஞ்சாதிபெருருநாலாம் பதங்கொண்டு பிறந்தோங்காணே, 315

காணப்பா கோடானகோடி சாதிகண்டதிலே யாயிரத்தொன்று சூத்திரன், பூணப்பாவறிவாலே சாதிகண்டு பேரதிமப்பா தசதீட்சைசொன்னூற்பத்து, மூணப்பா தசமெங்கு மூலகமாடுவுரையறியாவுனுத்தருக்குந தீட்சையோ வாணப்பா பேணப்பா ரெண்டுங்கண்டுவறிந்தோது மவுனத்தையறியத்தானே. 316

அறிவானவா னென்றுலானோ சொல்லா யப்பனேபெண்ணென்றால் பெண்ணேசொல்லாய், குறியான பெண்தானிரண்டுங் கண்டுகொங்கணரே யென்குருவே சொல்லவேணு, நெரியானநால்தனிலேயோரந்து சொல்லுநிறையான ஜோதிரிஷி நூலைப்பாரு, சிறுவோத்களான வொளிகண்டு தீட்சைசெப்பவல்லோ மனதுரைக்குந் தீர்க்கமாமே,

தீர்க்கமிந்தக்குறியறிந்து குறியைக்காட்டு சேய்தனக்கு பழுதுவராதப்பாகேளு, பார்க்கவிந்தப்பெண்யோனி செனித்தபேர்க்குபார்மகனே பேதையென்ற புத்தியாகும், கார்க்கவிந்து குறியறிந்து தீட்சை வைப்பாய் கைமறந்து மாண்டவர்கள் கோடாகோடி, ஏற்கவிந்தப்படியறிந்துசுழிளைக்காட்டியேறவான வாசியின்மேலேறுவானே

ஏறுதச்குத்தூலமென்றுஞ் சூட்சமென்று மியல்பான மூலமென்றமூன்றுயோனிதேறுதற்கு மூன்றுவகையோனிதன்னை, செப்பிமய்யாவென்குருவே சொல்லவேணுங், கூறுதற்குவனுபோக விந்துநாதங்கூடியேசென்மித்த மூலமாகும் ஏறுதற்கு, யோனிதன்னையறியார்லோகர்மேலானது தூலமென்றயோனிதானே. 319

தானென்றதூலமென்றும் யோனிதன்னைச் சாற்றுகிறேன் சொல்லக்கேள் பூமிதன்னில், காலென்றபூமி சென்மப்பிறக்குமன்று காரியகுருசோதிரிஷி சாஸ்திரத்தில், தேனென்ற நாயோனிலக்கினங்கள் ருசிசெப்பியே சாதகந்தான் கூட்டச்செய்வார், கோனென்றவிதுதானேதூலயோனி கூறுகெட்டால் யோனியிதுதான்பாரே 320

சூட்சயோனி.

பாரப்பா சூட்சமென்றயோனிதன்னை பண்பாகச்சிரசதயமானபோது, சாரப்பாராசியொடு லக்கனங்கள் தருவான நாற்கரணயோகி

னிசூட்சம் வாரப்பா இந்தவகை யோனியாகவளமான சூட்சாதிசூட்
சமூலஞ் சேரப்பாவிந்தங்கே செனிக்கும்போது செப்புகிறேன் மகத்
தான யோனிகாணே. 321

காணவேபோகாது சூட்சாதிசூட்சங்கருணைவைத்து என்குரு
வேசொல்லவேணுந் தோணவேகுருவாகச் சொல்வேன்கேள் தோ
ன்றவே பிறந்தநாள் யோணிதொட்டு பூணவேமூன்றூறுநாளிற்றுனே
புகழாக வெண்ணிப்பாரன்றைக்கேதா னுணப்பாவன்னைக் கிராசினா
னிலக்கணங்கள் யோனிமுதல் நாட்டிப்பாரே, 322

பாரப்பா பாசிபதினத்திற் பஞ்சாங்கத்தை பண்பாக சோதிரிஷி
நூலைப்பாரு கோரப்பாசிரசு தயந்தன்னை தொட்டு நிலவரமாய்ச்சொல்
லக்கேள் நாதவிந்து, சாரப்பா சென்மாந்திரந்தன்னைக்காண சாற்றி
னேன்பதினெண்ணுயிரங்கடிகையாகுஞ் சேரப்பா சென்மாந்திரயோ
னிபார்க்க திவைார நட்சத்திரயோனியாரே. 323

யோனியிந்தசூட்சாதிமூலஞ் சென்மம்யோகம் போல் சொல்லி
விட்டேன் சூத்திரமேனியிந்த நல்லவகையறிந்து சீடர்க்கோது மேதி
னியின்குருக்களைப் போல்விள்ளாதேநீ ஞானியிந்த முறைமைகண்
டேநாலாம்பாதம் நாட்டுவாய் சாயுச்சிய சாதிசூத்திரன் மோனமென்
றமவுனமவள் தனக்குச்சித்தி முப்பாழேகைவண்ணமுத்தியாமே.

முத்தியென்ற மூன்றுவகை தீயைச்சொல்லு முப்பாழின்வகை
சொல்லுமுடிவைச்சொல்லு புத்திகெட்ட பாணுக்காள் சொல்லக்
கேளுபுகலாதே, யாருக்கு மவுனமூலப் பத்தியென்றதுண்டவியாஞ்சு
ழினைநந்தி தற்பரமாம் பின்கலையேசித்தனந்தி, பத்தியென்றயிடகலை
யே சச்சுதானந்தி பாரிதுவே முப்பாழா முத்தியாகுஞ், சத்தியென்ற
லகிரியோடு குளிகையோட்டு சூட்சாதி மூலத்தே துறந்திட்டேனே

துறந்திட்டசூட்சமென்ற மூலமென்ன துலமென்ன குளிகையி
லே மூன்று சொல்லு, துறந்திட்ட தென்குருவே சாரணத்தான் து
ணைப்பேச்சால் சொன்னக்கால் வகைதோணுது, துறந்திட்டேனுங்க
ளுக்குத்தாய்சொல்லக்கேளு சூட்சமென்ற குளிகையதாஞ்சுழினைநந்
தி,துறந்திட்டேன் பின்கலைாவியினந்தி தோன்றிய தோர்சுழிலினியா
ங்குளிகைதானே. 326

தானென்ற யதிநந்தியிடைக்கு தலையற்ற சொரூபமென்றகுளி
கையாகு, மானென்றமூன்றுலே வாசியோகம் வைப்பறிந்து குறிகாட்
டி தீட்சையாலே, கானென்றகுருவின்மொழி தப்பாவண்ணங்கமு
றையாய் அமாவாசைமட்டும்பாரு, பானென்றசையப்பில் வந்துவிட்
டசையேற்பான் பஞ்சிடமோ நாம் வைத்தபாங்குமாச்சே. 327

பாங்கானலயம் பென்ன பிட்சையென்ன பரமதிருமூலருடபே ராற்சொல்லும், சாங்கமாய்ச்சொல்லக்கேள் மாணுக்காளே சட்கோ ணவதனமடாவுள் மூக்கோணம், ஓங்காரங்குடியிருந்த மவுனநந்தியுத தமனே குண்டலியாஞ் சத்திபீட, மாங்காரலாடக்கண்வேதாந்தந்தா னறிவான குருவங்கேயரிது தானே. 328

அரிதப்பாசொல்வதற்குச் சித்தர்சொல்லார் ஆச்சரியஞ்சிவன் சொல்லார் மூவர்சொல்லார், அரிதப்பா ரிஷிசொல்லார் பெரியோர் சொல்லார் அரகரா செவியிலிடமறிந்துப்பாரு அரிதப்பா மூக்குநுனி வாயுவாச்சு அந்தவிழி நந்திகண்டதேயுவாச்சு, அறிதப்பாவாயுள் ளேயப்புமாச்சு அப்பனே பிரிதிவிதானறியக்கேளே. 329

கேளப்பாபிறிதிவி பிரமபீடம் கேசமென்றே புகல்வார்சொல்லா ரய்யா, வாளப்பாசிவப்பிரமமென்பார் வாகானபுருவமய்யத்தடியைக் காட்டார், நாளப்பாகோடிசான்று நவில்வார்கேளு, காட்டாத குருவா லேசிஷர்மாண்டார், ஆளப்பாசொல்லக்கேள் லாடநேத்திரமடிவான பிறிதிவியின் பிரமங்காணே, 330

காணப்பா சட்கோண கூட்சஞ்சொன்னேன் கண்டுசொன்னேன் சுயம்பிது தான் சொல்லக்கேளு, பூணப்பா நந்தியிலே பெலிகொண்டே தான்புகழான திரிகோணச்சுழினைமீதிற், பேணப்பா பிட்சைதனை எடு த்தபின்பு பிலத்துநான் மேலாறுங் காணவேண்டி, தோணவேமலவா சல்மூலாதாரஞ் சோதித்தேன் குண்டலியைச் சோதித்தேனே.

சோதியென்றகளையாலே மூலாதாரந்துடிகண்ணகஞ் சனமாலா ளமயேச, னீதியுடனிவ்வோர்கள் சுவாதிஷ்டானம் நிலையான மணிபூ ரகமனுகைதம்விசுத்தி, வாதியென்ற கண்டமென்பாரவர்கள் தாமும்வழி யோடேயறுசமையும் வாஞ்டோர்த்தே, ஞுகியென்ற சுழினையாலாறுங் கண்டேனப்பனே மேலாறுமளந்திட்டேனே 332

அளந்திட்டேனுக்கினையின்சதா நந்திபார்வை யண்டமென்ற சுழினைபின்மேற் புருவமய்யத், துளந்திட்டேன் கால்தலைபாயுய்த்து ப்பார்த்தேன் ஒளிபெற்ற சித்தர்கள் தான்மறப்பையெல்லாங், களந் திட்டேன்பொறியஞ்சும் புலன்கொள்ளாமற் காலொடு தலையறிந்து மேலேபார்த்தேன், விளந்திட்டேன் ஞானமெல்லா மொளியாய்க்கண் டேன் வேதாந்த பூரணத்தை மேவினேனே. 333

மேவியதோர் பூரணத்தின்கரைகொண்டோரார் மெய்க்குளிந்த புரியஷ்டம்வினைதனிந்தை, கூவியதோர் சபையேறுங் குடியாய்நின் முகுடிலமாய் பூரணத்தை மதியிலாட்டி சாவித்துக்கொத்தவண்ணம் காலும்பாழாய்ச்சடலமல்லோ தீயில்வந்து சாம்பலாச்சு, யாவிகாளித் தனையுமாருஞ் சொல்வார் பஞ்சமலங்கொண்டிருந்த பருவங்காணே.

பரிசமென்ன சடலமென்பாருடல மென்பார் பாழ்நாற்றக்கட்டையென்பார் கேளுமென்பார், பிரிசாமன்சத்தியென் பார்சூட்சங்காணூர்பேய்மக்காள சிவகலைநாதமீடம், வருதைமென்ன ஒன்றுலேதாயார்யோனிமாதவிடைரத்தமெல்லா மாதந்தோறும், தெரிசனையாசிவசுத்திபட்சமொனறு செங்கமலமலர்ந்திருக்குஞ் சேர்வார்விந்தே

விந்துபுகும்மருகா மேவிக்கூடி விசையான பூரகத்தால் வாயுவேகந், தெந்தனமாய்ப்போகாது மாதம்பத்தில் திரட்டியிடுமுறப்போடு பத்துவங்கள், வந்து புகுஞ்சபையேழு மாதாவுக்குள் மாயையுடனே சென்றார்க்கர்த்தா பீடமுந்தனக்கித்தனை யறியவுரையச் செய்தேனேகோகோவிந்து சிவன்தலைவனுமே.

தலைவனுமென்மதற்கு நாதவிந்து தமர்வாசலடுத்திருக்குஞ் சுழினையோரம் நிலையிதாமென்று சொல்லாரிஷிகள் சித்தர்நேச முறக்கால் விள்ளார் வாசிபார்க்கவலைவதேனிச் 'சடலமாகாதென்பா ரத்துவிதமாய்ப்போனலே துண்டாகு, மூலைவதாயேதாலுமொன்றை நாடியொன்றைவிட்டு தர்க்கங்கள் பேசுவாரே. 337

பேசியென்னபேசாமல்வந்ததென்ன பெற்றபேர் விட்டகுறை இல்லாவிட்டால், வாசியென்னயோகமென்னமவுனமென்ன மானென்ன பெண்ணென்ன மக்களென்ன, நாசியென்ன மூக்குநுனிநடுத்தானென்னநாதமென்ன ஒன்றுமில்லைபென்பார் மார்டுதோசியவளசெனிக்கும் போதனமத்தநாதம் விந்துவுட்புகுந்தவேளைதானே. 338

வேளையிலே விட்டகுறையுண்டானுக்கால் வேதாந்தநந்திதனைக்குறியில்சாடடி, சாளையமாய்ப்போகாமலதன்னைக் காட்டிசச்சிதானந்தவெளிரவியைக்காட்டி, கோளைஎல்லாங்கக்கவைத்துத் தமரைக்காட்டு கூபார்க்கத் தொடுகுறியாஞ் சுழினைகாட்டித் தாளை நினைவாய்திறந்துவமுத மூட்டிசாதிக்க யோகத்தின் வகையைச் சொல்லே.

சொல்லப்பா ஓங்காரசூட்சந்தன்னைசூரியன்போல் வட்டமதாயிருக்குமென்று சொல்லப்பாவென்னைப்போலாருஞ்சொல்லார் சுகமாகவுககளுக்கேசொன்னேனப்பா, சொல்லப்பாவதனவட்சமுட்சூட்சுந்தான்தொடுகுறிபோற் சண்முகமாமறகோணத்தை, சொல்லப்பவிதினுள்ளேமுக்கோணத்தை துண்டமெனுங்கண்டநுனி சொர்க்கந்தானே. 340

சொர்க்கபதமாகியிந்த வெளியொளியைக்கண்டார் தாண்டிட்டகுருந்தனையே சூட்சஞ்செய்து, சொக்கர்பதந்தனைப்பாருவாசியோகஞ்சூட்டப்பா குளிகைபோலகிரிகொண்டு, சொக்கர்மதந்தெரிசனையாமாடுங்கூத்து தொடுக்குறியாய் நடனமிட்டேன் கூத்துங்காணுஞ்,

சொர்க்கபதங்குருவுனக்கு வருளிச்செய்தால் துரியப்போய்காயமெல் லாஞ்சொர்னமாமே. 341

சொர்னமேதேடுதற்கு வாதமுக்தி தொடுகுறியுப்பாம்வழலைசூட் சங்கண்டார், சொர்ணமே கொ க்குமடா சதாசிவத்தின் வைப்புதொ ட்டேரக்கற்பரஞ்செய நீராகிற், சொர்ணமடா நீறுமதிற் சூதம்நிறுந் துரிசிவெள்ளை பாறையுப்பு சுன்னத்தாட்டு, சொர்னமாஞ் சுன்னத்திற் றனுப்பாற்கூடன் சுரோணிதமாம் பூநீறலூசிநீரே. 342

ஊசிநீருப்போடே முப்பூவாச்சு வுபிராதுங்கற்பூரமுண்டால்வா தி, வாசியேயாசத்தினிலேயமுர்தங்கொள் போல்வழலை மூன்றேவாங்க வன்னந்தன்னையாசியா மன்னபேதியுப்பாம் வண்ணமமிர்தமாமிதை யுண்ணவழலையமுர்தந், தேசிபாங்குருவண்டு புழுகும்பட்டார் சித்தி பெற்றவழலையுப்புக் சுண்ணமாமே. 343

ஆமப்பாவீரமிடு வழலைவீரம் அண்டாண்டங் கடந்தாடும்வாத ஞானி, காமப்பால்பச்சையொடு பவளஞ்சேர்ந்தால் கண்விழித்துமூ டுமுன்னேநவலோகம் பொன்னாந், தாமப்பார சதங்கபற்பமாகுஞ்சா தித்துக்கடுகளவாய்க் கொண்டுதேறமேவாமப்பா தேகமெல்லாந்தங்க மாகுமுத்தமனே சுன்னத்தினுப்புவேகம் நாமப்பா சுழிமுனையில்நந்தி யொட்டாம் நங்குருவாம் காலாப்பென்றுகுங்காணே. 344

காணவேசண்முகமாந் தேவரெல்லாங் கைமுறையாய் ரோமரிசி சட்டவடநாதர். பூணவேதவறுமல் சூட்சஞ்சொன்னார் புகழாகமனமு ரைக்கவட்சயத்தைச் சொன்னார் தோணவே சகலசித்திகைக்குள்ளாகு ந்தொட்டேறத் திருமூல நாயன்தானே, பேணவே ஐந்நூற்றில்ஞான ஞ்சொன்னார் பிழைப்பதற்புக்கை முறைக்கென்னூல்பாரே. 345

பஞ்சமலம்.

பாரப்பா மஞ்சமலஞ் சொல்லக்கேளுபரிவானபிரிதிவியுமப்புந்தே யும், நேரப்பாவாயுவுடனாகாசமஞ்சு நிறுததுகின்ற பொறிகேளு நாசி வாய்கண், சாரப்பாமெய்யோடு காற்றையறியலாச்சு தன்றலையபுன்கே ளுசத்தமொடுபரிசுஞ், சேரப்பா ரூபரசசூட்சந்தேகந் தெளிவானகெந் தமொடுமஞ்சுப்பாரே. 346

பூதம்பெயர்,

ஆசப்பா பூதத்தின்பேரைக்கேளு அப்பனே பிரமனொடுமாலு ருத்திரன், வாச்சப்பா பரமேஸ்பரனுஞ் சதாசிவலுங் கூடி மகத்தா னசிவபஞ்சபூதமாச்சு, நீச்சப்பா விவர்களுடையலக்கேளு நிறையான முதல்சபையினிதழ் தாறுறு மூச்சப்பாரண்டாசைபையிற்கேளுமுக் கியமுள்ள பத்திதழா மூன்றியகேளே, 347

மூன்றானசபைதனிலே யிதழ் பன்னிரண்டு மூர்க்ககாலாஞ் சபை
யிலீரெட்டாகு, நீண்டானசபை அஞ்சிலிதழ்தானிரண்டு நிஷ்டையாஞ்
சடத்தினிதந்தானே சொன்னேன், நூன்றியசக்கரத்தினியல்பு கேளுவுத்
தமனே முதற்றானங்கோணம் நாலுந், தாங்கியே ரெண்டாந்தானத்தை
க்கேளு நாகரிகமான பிறைகோணந்தானே. 348

தானான மூன்றாந்தானங்கேளு தடையில்லா முக்கோணந்தன்னை
ப்பாரு, தேனான நாலாந்தானத்தைக்கேளு சிறப்பானவறுகோணஞ்
சென்றுகாணும், கோனானவஞ் சாந்தானத்தைக்கேளு குளிர்ந்தமதிபி
றைகோண மிதினோடஞ்சு, வானானவந்தந்தசக்கரத்தைச் சொன்னே
ன்வானுமட்ச ரம்நமசிவாயமென்னே. 349

என்னவேபுரியஷ்டபஞ்சபூத மிதினோடே நாதவிந்து சத்தி ஒன்
று, நன்னவே புரியஷ்டமெட்டுவாச்சு நலமான பூரணத்தின் மார்க்கங்
கேளு, பன்னவே ஒளிப்பாழும் வெளிபின்பாழும் பாங்கான வெளிப்
பான நிற்குணத்தின்பாழு முன்னவே சீவகளையதினுலாட்ட முற்பனங்
கேளவத்தையஞ்சு மூணிப்பாரே. 350

ஊணவே லாடமதிற் சாக்கிரந்தானென்று உத்தமனே கண்டத்தி
ல்சொற்பனந்தானென்று பூணவே மார்பின்கீழ் கழுத்தில் ஒன்றுபுதல்
வனேயுந்தியிலேதுரியம் ஒன்று, வீணாகத்தண்டினிலே துரியாதீதம்
விளங்கவே சுவாதிஷ்டாந்ததிற் பாருகாணுதமணிபூரகத்தின்மோனங்
காத்தசங்காரம நாகதத்தின்மேலே. 351

மேலானவிசுத்தி வளிமார்க்கம் விண்ணுமாக்கினையும் புருவமய்ய
மாகுமப்பா, காலான தவ்விடத்தே சுழினையாகும் கண்ணுடியொளிக
ண்டால் மோட்சமாச்சு, சேலான குருபதத்தைத் தொண்டுபண்ணுதி
ட்சைவைக்கும் வேளைவந்தால் மவுனஞ்சொல்வார், மாலானமாயைய
றுமாசைவிட்டு மாண்டாலுங் குருவிடத்திற் சொர்க்கங்காணே. 352

சொர்க்கபதங் காண்பதற்கு வழியேசொல்லுஞ் சுழினையென்ற
மூக்குநுனி பிரகாசிக்குந் தர்க்கமிதிற் செய்யாதே கண்டுஞ்சாதே சலி
யாதே மெலியாதே சாபியாதே, கர்க்கவென்றகக்கிஷங்க ளஷ்டகர்மங்
கடினமென்றுபோகாதே சாகாதேகேள், வாக்கமென்ற குலவர்க்கம்நா
னெண்ணாதே மனம்புத்தி ஆங்காரமாளவோதே. 353

ஓதப்பா மவுனத்தால் வாசிகொண்டு வுண்மையுள்ள வுன்பாசமொ
ழிந்துபோச்சு, ஓதப்பா கவலைஎல்லா மெங்கேபோச்சு விகடம்விட்டு
பரந்தனிலே சொல்லலாச்சு, சூதப்பா மிகப்படைத்த சிந்தையோர்க்கு
சொல்லாதே சூட்சத்தைச் சொன்னாலேதோஷம், போதப்பா க்ஷணத்
திலேரவியினுட்டம் பூட்டியே தெரிசிக்கப்போதிப்பாயே. 354

போதிப்பாய் முக்குணமும் பூண்டுபார்த்து புத்தியுள்ளமனம்பார்த்து பொருளைக்காட்டி, சாதிக்கவகை சொல்லும் வாசியோகஞ்சாதித்தால் தசதீட்சைசாரச்சொல்லும் வாதிக்க மென்பதெல்லாம் லலாடமீதேயங்கென்று வழிவங்கேசுந்தியாகு மேதுக்கு இத்தனையும் கற்கப்போமே என்றிருந்தா லொன்றுமில்லை யிளப்பந்தானே. 355

இளப்பமென்பதொக்கென்பார் தூய்மை என்பாரிது வல்லோசடவமென்பார் வந்தானென்பார் வளப்பமென்ற தூலத்தை மாயச்செய்து வழியோடே ஒளிகண்ட சூட்சமாகா, ரளப்பமென்ற மேருஷத்தைத்தள்ளமாட்டார், ஆதியந்தந்தனையுரைத்து நிலைக்கமட்டார் குளப்பமென்ற திமேருதாயிமாயைபூண்டு கூறுகெட்டார் ஞானத்தின்குறி யற்றாரே. ()

குறியற்ற பசுவினிட கோலங்கேளு கோடானகோடி சென்மமெடுத்தேயாடுங்குறியற்ற குண்டலியிற் கிணைசனுத்மாக் கொடும் பஞ்சமாபூததேவதைக் கீழாய், குறியற்றுவபானவாயடுக்க நின்றால் சூதசிரமாய்க்குடி யிருந்தான் மாயைமூடி குறியற்ற குணத்தாலே யாசாபாசங்கொண்டாட்ட மனந்தவறை கோடியாமே. 357

கோடியென்றாலத்தமதி லிலக்கமில்லை கொடிய பஞ்ச பாதகந்தான்விளைந்தபாத மாடியதோர் கூத்தெல்லாஞ் சொல்லக்கேளுவப்பனே தேவரோ மேற்காதாமும், நாடியதோர் மானிடமாய் மிருகமாதிகயில் வளருர் வனமாய்ப்பறவையாகி வாடியதோருர் வனமாய்மரங்களாகிகி மலைகல்லாய் மணியுண்டாய் வகுத்தவாறே. 358

வகுத்திட்ட நவலோக ரத்தினங்கள் வாடையுற்ற பரிமளங்கள்மலர்சுகந்தந் தொடுத்திட்ட விதுகளிலே மனத்தின் பாசந்துடர்ந்தேறிச்சொல்லுமதிலாகைபூண்டு பகுத்திட்டயோனியொடு தீனியாலும் பசியிறந்து போவதெல்லாம் பிறப்பேதய்யா மகத்துவந்தானிவ்வாசை பதியிண்மூன்றால் மவுனமென்ற ஓங்காரவட்டங்காட்டே. 359

வட்டத்திற் சூட்சாதிசூட்சங்காட்டு மகாரமென்பார் அகார உகாரத்தையுள்ளே எட்டிரண்டேழ்பார் தமிழிலக்கம் பத்தியிதுவல்லோ பரவெளிக்குளேறுமார்க்க மஷ்டகர்மங் குளிகைகொண்டு சித்தியாக்கி பதினாலேபதியறிந்து அதுவுமாளுந் திடமுடன் பரத்தினிலேமனது மீளுந் தெளிவானாலறிவேறுஞ் செப்பினேனே. 360

செப்பினார் கும்பமுனி தீட்சைபாரு தெளிவாகும் மச்சமுனிஞானம்பாரு ஒப்பான சட்டைமுனி தீட்சைபாரு ;ஓகோகோநந்தியுடதீட்சை பாரு நப்பிரேறனால் வருடஞானம் பார்த்தால் நகராது வறிவங்கே பரத்தில் மீளுந் தப்பத்திலே யேதுமில்லை சடாதாரத்தின் சக்கரத்தின் மவுனசத்தி பூசைகேளே. 361

கேளப்பா வருகோன முனமுக்கோண கெடியான தூலமிதிற் சூட்சங்கேளு நாளப்பா மேற்கோணத்துள்ளே கேளுநல்லதொரு பிறைகோணம யகாரபீடம் வேளப்பா விட்டகலைமேற் கோணந்தன்னில் விந்திட்டுவதினுள்ளே முக்கோணந்தான் வாளப்பா ஓங்காரங்கணேசன் பீசம் வாய்ப்பான திடகலைக்கோணம்பாரே. 362

பாரப்பா விதனுள்ளே நாற்கோணந்தான் பண்பாச சிஷ்டிக்கும் பிரமபீடஞ் சேரப்பா நாகரத்தினமேலாய் நின்றால் திடமாக கீழ்கோணஞ் செப்பக்கேளு நேரப்பா விதனுள்ளே மதிகோணத்து நிசமாகலட்சுமிக்குமாலின்பீடங் காரப்பாமகாரமதின்மேலே நின்றால்கருத்துறவேபின்கலைக்கீழ்கோணிந்தானே. 363

தானென்ற கோணத்து விந்துக்குள்ளால் சாத்தடா திரிகோணத்துள்ளேகேளு வானென்ற சங்காரருத்திர பீடம் வளமாதிஞ்சிகாரமிதின்மேலே நின்றால் கோனென்றபின்கலைமேற் கோணத்துள்ளே குறிப்பாகவிந்திட்டு றுதுக்குள்கேளு தேனென்றவறுகோணம் சரவணபவாவென்று தேறிதுக்குள் விந்திட்டு ருத்திரஞ்சாத்தே. 364

சாத்தடா சாயுச்சியஞ் ருத்திரனுக்காகுந் தருவானவேதாந்த ஞானமாகுந் தேத்தடா ருத்திரனே தேகந்தன்னை சித்தமயேஸ்பரபூசைசிறக்கும் வேத மாற்றடா நருவி யெல்லாம் வகாரமன்றி மற்றொன்றுமில்லைபடா மனத்திற்காணு வாத்தடா வறுகோணத்துள்ளேகேளு வப்பனே குண்டலியாம் விந்துள்ளாச்சே. 365

ஆச்சப்பா விதுக்குள்ளே முக்ககோணந் தானுச்சரியம் ரீங்காரமகாரபீடம் மூச்சப்பா மவுனமென்ற சத்திவாலை மோகனகௌசத்தியிருந்தாள்பாரு நீச்சப்பாயிவளதனையே பூசைபண்ணு நிலையானசடாதாரதிட்சையாலே வாச்சப்பா போச்சதுனக்கின்பசித்தி மாயையெல்லாந்தவருண்டு மவுனமாமே. 366

ஆமப்பாசூரியன்போல் வட்டமிட்டு வதின்மேலே யிதமெழுட்டிலஷ்டசத்தி பீசந்தாமப்பா யிதின்மேலே சதுரரேகை தப்பாமல் மூன்றுவரை ரெண்டாம்வீதி வாமப்ப மவுனவீதிக்குள்ளேகேளு மகத்தானயஷ்டபெலி அஷ்டநாகம் ஓமப்பா வயிரவர்கள் சிரியப்பால் உத்தமனேயிவர்களுடபீசமபோடே. 367

போடப்பா மறுவீதிக்குள்ளேகேளு புகழான தேவரொடுரிஷிகள் பீசம், தேடப்பா நால்வாசல்தோறுங்கேளு திறமான துவாரபாலாள் பீசந்தா, னூடப்பாசக்திகியிற் கொடிக்கம்பம்பீசம் நாட்படா நந்தியுடபீசந்தானுஞ், சூடப்பாகௌசத்தி திட்சையாலே சுகமான பானத்தோன்றிடாயே. 368

தோன்றிடுவாய் மவுனத்தில் மானதாம் பூசைசுகமாகவபிஷேக மெல்லாஞ்செய்து வூன்றவஸ்திராபரணஞ் சாத்தி வுத்தமனேகசுகந்த பரிமளங்களசாற்றி, என்றதொரு தூபமொடு தீபங்காட்டியின்பமுற நெய்வேத்தியஞ் செய்தபின்பு கான்றமனமொருமித்த பேர்க்குஞானக் காட்சியருளும்பரையே அம்மாவென்னே. 369

அம்மனேமாதாவே தாயேதேவி அண்டமேபிண்டமேயாதியான, அம்மனேயந்தரியே அருள்மெய்ஞ்ஞான வற்புதமே நிற்குணமேயளவில்லாத, அம்மனேயுமையவளே பார்வதியேகெவுரி ஆரணங்கேபூரணியேஞானமீறும், அம்மனேதிரோதாயி நீலிசூலி, அகளங்கமாயி யிந்திர சாலித்தாயே. 370

தாயேபராபரயே சர்வசத்தி சங்கரியே சுந்தரியேதாண்டவஞ் செய்மாயே கிர்பாகரியேமானேதேனே மாணனேயேபேதையே பேதும் பைப்பெண்ணே, ஆயியே மங்கையே மடந்தை என்னு மரிவையே தெரிவையே பேரிளம் பெண்ணை, காரியே நற்கனியாங்கண்ணே மின்னேகாரிகையேமாலினியே கமலவாழ்வே. 371

கமலியே வாணியேகபாலியான கற்பகமே நற்கனியே கருத்துள்ளான, விமலியே காரணியே வேதத்தாயே விளக்கொளியேரவியொளியேகாந்திமீறும், அமலையே மதியொளியே முப்பாழானே வப்புறத்தே நின்றதொருசுடரேசோதி, நிமலையே நிட்கலமேவடிவொப்பிலா நேமியே காமியே நேரியேயென்னே. 372

நெறியானவைம்பொறியே புலநெஞ்சான நெஞ்சியே வரூசியே நிஷ்டைபூரூவ், குறியான சுழிமுனையே பின்கலையே யின்பக் கொழுந்தானவிடகலையே குண்டலியேதேரும், வெறியானலாகிரி யெவமுர்தம் நின்றவிண்ணொளியே சண்ணொளியே விசையபூவே, அறிவானதூலயே சூட்சமூலமண்டபகிரண்டமேயாத்தாளென்னே. 373

ஆத்தாளே அம்பிகையே யானந்தாயி அஷ்டசத்திவஷ்டதுர்க்கியஷ்டபாலி, பூத்தாளே பேதகமே நின்றவேத பொக்கிஷமேகக் கிழமேயப்பொருளேயாவி காத்தாளே மெய்ப்புடலைக்கருவே நந்தி நாயேவாமியேயோமரூபி, யேய்த்தாளே சற்பணியே தேவதேவி யிந்திராணிநற்சத்தி யிருளே பெண்ணே. 374

இருளானமாயையுற்ற மனித வாழ்வேமேகமே சச்சிதானந்தித் தாயே, யுருளானசகடமே யூர்வனவேதேறே யுத்தமியே நந்திவாழூர்வனவேதானில் மருளானமிருகமே தாபரமே யெண்ணுவானவே பறப்பனவே மேருவே சொர்சத்தி, திருவானபஞ்சசத்தி பஞ்சபூத தெய்வமேசிவசிவனே சிவயேளன்னே. 375

சிவமானவச்சிலையடங்குங்கூடே கேகமே நவத்துவாரச்சடமே காயம் பாவமானபாதகமே புண்ணியஞான பக்குவமேலலாடமே பிரம வாழ்வே, தவவானபேரின்பமுத்தியான சத்தியே முத்தியே கருவே சீவன், தவமான தொக்குடம்பேசுக்குலமே ஞான சத்துருவேயித்து ருவே தர்மியென்ன. 376

தாமியேரகூஷிமனமே நவசித்தபதி தன்மனமே யொண்ணுதித்த ழைத்தாயம்மா வொர்மியேசரா சரமேமேலே கீழெவிளங்குநூலானவ ளே சாத்திரங்கள்பொங்கி, கர்மியேகாமகலைகூடேவீடே காந்தியே தீப்புகையேகனலேபாணி, வர்மியே பூமியேவளுயேசத்தமானிடமே சங்கமெல்லா மனமாயில்லே. 377

இல்லென்றுமாடமொன்று மிரவியென்று மிறப்பதற்கும் பிறப்ப தற்கு மூயிராய்ரெண்டும் கல்லென்றும் வானென்றங் கடலென்றந்தா ன்கனிந்த சுவையாறுவகைரசமுமாகி சொல்லென்றும் நாவனென்றந் தோத்திரமேயென்றுந் துரியாதீதத்தின் வரைசாக்கிரமென்றும் வெல் லென்றுங்கொல்லென்னும் வதியாமென்றும் வெட்டவெளியாயிருந்த வேறுயென்னை. 378

வேறாகிமண்டலந்தான் மூன்றுமாகி வேருசித்தூராகிவித்துமாகி மாறுகிக் கொம்பாகியதருளுமாகி மலராகிப்பிஞ்சா காய்ப்பழமுமாகி நீறுகிநீறுமூன்பேசுக்காணுகி நிஷ்டையுமாய் நித்தியமாயோகமாகிப்பேறு கிப்பேறன்றிபித்துமாகி பித்தாகிபிறப்புமாய் புணியுமாமே.

பிணியுமாய் வறுமையுமாய்க்கலியுமாகி பேதலிப்பாய் மனமுமா கிப்புந்தியாகி மணியுமாயோசையுமா யுண்ணூர்காகி வழலையாய் வாத மாய்வாயுவாகி தணிபுமாயுயர்ச்சியுமாய்த் தத்துவங்களாகி தானென் றுந்தலையென்று மறிவதாகி யணுவுமாய் மேருவுமாயணுவுளணுவா கியந்தரமாய்ச் சொற்கமாய் நரகமாயே. 380

நரகமாய்க்கிருமியாயிரதமாகி நவலோகம்பொன்னோடு வெள்ளி யாகி தவமானநவரத்தினமணிகளாகி சாலோகசாமீபசாரூபமாகிதிர மாணசாயுச்சிய பதமுமாகி செடியாகிப்பூடாகிச் சேறுமாகி பாமாகிச் சுவணுமாய் நாரியாகிப் பற்றமாய்ச் சிற்றமாய்ப்பகலுமாயே 381

பகலாகிராவுமாகிமதியுமாகி பல்லாயிரங்கோடி யண்டமாகிச்சுக மாகித்துக்கமுமாயாவுமாகித் துடக்காகி துடக்கற்றசோதியாகி யிக மாகிப்பரமோட்ச சத்தியுமாகி யின்பமதாய்த் துன்பமுமாயெல்லா மாகிச்சகமாகிக் கொடுப்பதற்குவன்புமாகி தாயாகிமகவாகித்தந்தை யாயே. 382

தந்தையாயாணுகிப் பெண்ணுமாகி தாரகந்தி னலியாகிப்பெலி யுமாகி விந்தையாய்பெருமையாய்ச் சிறுமையாகி மேதினியெல்லாம்

நீயாய்நானுமாகி சிந்தையாயுன்மனதா யென்மனமுமாகித் தெளிவாகி த்தெளிவில்லாச் சென்கமாகி யெந்தையாய்ச் சத்தாகி சித்துமாகியே கமாநந்தியென்றிபோற்றே. 383

போற்றுவதுந்தானாகிப் பொருளுந்தானாய் புரியஷ்டபூரணமா யெட்டுகாலா யோத்துவதுமத்துள்ளாய் கனவாம் மூக்காயிருசெவி யாய்த்தாலமொடு சூட்சமாகி மற்றுவது சூட்சாதி மூலசூட்சம் மவுன மாய்க்கெவுனமாய் வளர்பிறைமாய்க்கேய்ந்தே மாற்றுவித்திற்பாசம் வைத்தும் ஞானம்வைத்து மாளுவதுந்தாளுவதுந் தாய்நீ யென்னே.

நீயானவண்ட முதற்பதமெண்பதுந் தானிலைத்துநின்றுயுயிர்க்கு யிராயெங்குந்தானே நீயானவக்கிரகம்வாரமேழும் நேசமாயிராசி யொடு :பன்னிரண்டும் நீயானட்சத்திர மிருபத்தேழும் நேசமாய்ப் பட்சமொடு கரணயோக நீயானாய் நால்வேதமாறு சாத்திரம் நிலையான பதினெண்புராணமென்னே. 385

என்றுலகம்பிறக்கவெண்ணெண்கலைக் கியானந்தாமிப்படியேசற் பன்னபாஷைகளோர்கோடி என்று சொல்லக்கோடியென்று லக்கோ வில்லையெடுத்தெடுத்த் சாஸ்திரமோலக்கோவில்லை யென்று நான் பார்ப் பதற்குக் காலமில்லை யிமையோட்டி விழிக்குமுன்னே படைத்தழித் தாயம்மாவென்றுனையே தோத்தரிக்க மந்திரந்தான் லக்கமில்லைக்கரை கண்டோரில்லைதானே, 386

தானென்ற மந்திரங்களெல்லாம் நீதான் சரிதை நீகிரிகைநீயோக ம்நீயே தானென்ற ஞானம்நீ ஞானானந்தமென்னும் சனிப்பிக்குமோங் காரங்கடந்தாய்நீயே வானென்ற மதியமூர்த முண்ணாநீயே மவுனம் நீயொளியும் நீமாய்கைநீயே கோனென்றபிரமயோகநீயே குறிப்பார்க் குஞ் செட்டிநீ சூத்திரநீயே, 387

சூத்திரநீயதிலிருந்தகுருவும் நீயே தோத்தரிக்காவுநீருசியும் நீ யேகோத்திரநீகுலங்கள் நீகுன்றுமநீயே கோடானகோடி செகதும்பரி சம்நீயே பார்த்திருந்தயுட்புகுந்தே சிந்தும்நீயே பாவம்நீ புண்ணிய ம்நீபாசம்நீயே சாத்திரம்நீ சமுத்திரம்நீ பூமிநீயே சாலோகசாமீப சாரு பம்நீயே. 388

சாரூபசாயுச்சியபதமும்நீயே தற்பரைநீசிற்பரைநீயென்தாயும் நீயே மேருவெனுமண்டம்நீ பிண்டம்நீயே விளக்கொளிநீதீபமும் நீ வெளியும்நீயே வேருநீ நடுவும்நீ முதலும்நீயே விண்ணொளிநீ கண் ணொளிநீ விண்ணும்நீயே போரும் நீ சேனைநீ கலாபம்நீயே புத்தியும் சித்தமும்நீ மனமும்நீயே. 389

மனதுள்ளே தத்துவங்களொடுக்கும் நீயேவாணாள்நீ நாடிநீயங்க நீயே தினத்துள்ளே ஒடுங்குகின்றவாவிநீயே தெசமென்றபதமெல்லாம் வாழ்க்கைநீயே தனத்துள்ளே யொடுங்கும் நீயாமளையுந்நீயே காமனை நீதன்பதத்தின்புவனைநீயே யினத்துள்ளே திரிபுரைநீ யதன் வாழ்கையிமயபஞ்சத்தி நீயேகம்நீயே. 390

ஏகமென்ற மவுனசத்திசுழினைநீயே யிடையோடு பிங்கலைநீவாசி நீயேமோகமென்றயிந்திராணிரம்பைநீயே மூவுலகைமயக்க முறுவசியும் நீயே ஆகமென்றவசியந்நீ யழைப்புந்நீயே யாதிவித்துவேஷணமுச் சாடனமும் நீயே தேகமென்றமாரணம்நீதம் பனமுநீயே சித்தாண வேதனந்நீ பேதனமும் நீயே. 391

பேதனமோடெட்டுவகை சத்திநீயே பிள்ளைநீ யன்னைநீ பேதைநீயே பாதமும்நீ முடியுந்நீ நடுவும்நீயே பத்தியும்நீ யாட்கொள்ளும்பரையுந்நீயே சாதகமாய் வாசியுட்கருவும்நீயே சாதித்தமேலேற்றும் றிவுயநீயே போதமும்நீநாதமும் போருந்நீயே பூரணானந்தசிவயோகந்நீயே, 392

சிவயோகரிஷிகளுடமனமும் நீயே தெளிவுநீயளிவுநீ தளிருந்நீயே அவயோகசமூசாரவாழ்க்கைநீயே யண்டக்கலம் நீநடபனறிபுகையும்நீயே தவமீறங்காரணம் நீயே சச்சிதானந்த வெளித்தாயும் நீயே சவமாகப்போனபின்பு சடலந்தீயாய் சாம்பலாம் நீற்றிவிட்ட தருவும் நீயே. 393

தருவும் நீசவையும்நீ தாசம்நீயே சாலநீகாலநீ வருடநீயேகருவும்நீ யருவும்நீகடையும்நீயே கனமென்றும் பாக்கியம்நீ வறுமைநீயே குருவும்சிஷனும்நீ சமானம்நீயே கொண்டதொரு கோலம்நீ கூற்றும்நீயே அருவும்நீ யுருவும்நீ யைங்காயத்தை அதிரூபச்சுடாக்குமாத்தாணீயே 394

நீயென்றும் நானென்றும் வேறில்லாத நிட்களமேவடிவுநின்றநேமியோமி மாயென்று மவுனத்துள்ளாயியென்றும் வங்கென்றும்சிங்கென்றும் உங்கென்றுந்தான் சியென்றும் நாயென்றும் கடையேயென்றுந்தீயென்றுங் குண்டலியாங் தேவியென்றுந்தரயென்றுஞ் சேயென்றுந்தந்தையென்றுஞ் சாத்தரிது எத்தனையோவுன்பேர்தானே 395

உன்னுடையபேரேதுவேதுங்காணேன் லோகத்தோரிஷிகள் சித்தர் மவுனமென்பார் என்னுடைய பிறப்பிறப்பிலேதுங்காணேனே நையானெடுத்துரைப்பேன்மகாரமென்று தன்னுடைய நாமமென்பார் ரோங்கார மென்பார் சகாரமென்ற சத்தியென்பா ரிஷிதானென்பார் மின்னலுடைய காந்தியென்பாரதி சூட்சமென்பார் வேதாந்தப்பிரணவமேயென்றுபோற்றே. 396

போற்றியவள் கால்பிடிக்கத் தூங்குவான்பார் பொன்னுருக்கு
மொளிபோலேமேலே வீசும் போற்றியவள் கொலுவிருந்தமவுனபீ
டம்பூணுதற்குசுழிலையோ கண்ணேட்டம்பார் போற்றியே யவள்ம
னதுமுன்மனது வோய் பூரணமாங்கேது வென்றும் ருதுமென்றும்
போற்றியவள் கண்டத்திலாபரணம் பூண்டாள புருவமையத் தாயா
ரைப்பூசிப்பாரே. 397

பூசித்தேயிப்படியே தோத்திரஞ்செய்வாய் பூரணத்தேகேசரத்
தேவார்த்தைசொல்வாள் ஆசித்தேகன்னியுடமாதர் தன்னிலப்பனே
நவராத்திரி யன்றைக்கேகான் பாகித்தேதசமியெட்டுந் தேவிபூசை
பண்பாகச் செய்திடிலோர் மவுனங்கங்கும் வாசித்தர்மைந்தாகேள்
வாமபூசைமகத்தான பூசையிலே தெரிசிப்பாரே. 398

தெரிசனைபெற்றேபருளச்சிவனைக்காண்பாய் தெளிவாகுஞ் சுழி
முனையிலே ரவிபோற்காணிம் பரிசிக்கவிதுதானே பரமோட்சமாகும்
பாதகம்போம்பாவம்போம் தர்மியாவான வாசிக்குமதியமுர்தஞ்சிந்து
சிந்துமனத்திலே யிதுவல்லா மடக்கம்பாரு குருவுக்குங் குருவான
ஞானமாவான் கூறுவாய் சீஷருக்கு குருவைத்தானே, 398

குருகாட்டிக்குருவிருந்த சூட்சதேகங் கூறுகின்ற குருவைப்
பொற்குருத்தியானக் குருகாட்டித்தொனிகண்டால் சீஷன்தானே
கோடிதனமீந்தாலும் பரத்திற்சேர்ப்பான் குருகாட்டி சுழினைரவிவன்
னிமதிமூன்றுங் கூர்ந்துநின்ற வொளிபோலே வெளியைக்கண்டால்
குருகாட்டிக் குருவினிழறனையே பூட்டுக் கொண்டவளே சொற்கபதங்
கொண்டானெனனே. 400

சொற்கபதமாவாதென்ன குருவே சொல்லுஞ் சொல்லக்கேள்சு
ழினையடா நந்திபீடஞ் சொற்க்கபதங் துரியமது வெளியைக்கண்டால்
சொல்லுநிமு குருவதிலேயதி சூட்சந்தான் சொர்க்கமது சிவலோகங்
தன்னையப்பா சொல்லுகின்ற கடையேனை சூட்சமதேகஞ் சொற்கதிற்
சிறந்தல்லோ குருவுந்தானும் சுடரொளியைக் கண்டுடனே சூட்சமா
மே. 402

ஆமப்பா சூட்சமாயிருக்தசத்தி யருவுமில்லையுருவு மில்லையம்மா
வென்றே. கேமப்பா சடாதார தேவிப்பூசை நேசித்தேன் பூசித்தேன்வி
னைவாய்க்காணும் வாமப்பா தேவிபிரசன்னமாவாள் மவுனமென்ற
சுழினையிலே வணங்கிப்பாரு தாயப்பா கேட்டதெல்லா மீந்தாவென்
பான்தந்தபின்புசுழினை விட்டனுப்புவாயே. 402

வாயாரமனதார வொருமைகொண்டு வசீகர உச்சாடந்தான்மவு
னங்கூர்ந்து தாயாரைச் சேகரத்தே சாரசசெப்பித் தன்னுடைய சீஷ
ருக்குத்தன்னைக்காட்டி காயாதபழமாகச் சிவனைக்காட்டி கருத்துற
வேசிவசூட்சங்காதிற் செப்பி சேயாகக் குருவகாத் தேவிசூட்சஞ்செப்
பியேயனுஷ்டானஞ் செப்புவாயே. 403

செப்பிடவே தீட்சையெல்லாங் கைக்குள்ளாகுந் தீர்ந்தபின்பு தேவியுடனிர்மாலியங்க ளொப்பிடவே சண்டேசர் பூசைசெய்து வுத்த மனைதன்னை முதற் பெண்கள் பிள்ளை, வைப்பிடவே குருசேஷங்கொ ண்டபோதில் மகாகோடி பாவமெல்லாஞ் சொல்லக்கேளு, மெய்ப்பி டவே மேருவைப்போ லுயர்ந்த பஞ்சில் மிளகளவு நெருப்பிட்டகதை போலாச்சே. 404

ஆச்சப்பா விதுவல்லோ சிவயோகமார்க்க மறியார்க ளுலகத்தோர் ஞானப்பேயர், மூச்சப்பாவற்ற விடங்காணார் பாவிமூளுமா வெறிவில் லாக்காயக்கூடும், பேச்சப்பா தர்க்கமிட்டு சமையமெல்லாம் பேய்க்கூத் தாயலைவார்கள் மவுனந்தோணார், வாச்சப்பா குருவந்து வுபதேசித்து மவுனத்தைப் பார்த்தறியார் மாயைதானே. 405

தானென்ற கூற்றனுயிர் கொள்வானென்பார் சாருமுன்னே கர்ம ங்கள் செவோ மென்பார்கானென்ற வுயிர்போகிற் பாவபுண்ணியங்கள் கையோடே வருமென்பார் பாவமீறில், மானென்ற நாகத்தே மாட்டு மென்பார் மகத்தான புண்ணியமே முகுந்து நின்றால், கோனென்றசொ ற்பபத முண்டாமென்பார் கூறுண விருவினையின்பயன்காணரே. 406

பயனுவதேதென்றால் மூந்நூல் சொல்லும் பார்மகனே திருமூல ர்பாடல் சொல்லுஞ் செயலாவதேது மில்லை சுழினை நாட்டஞ்சிவனிருக் கும் பீடமது சொர்க்கமேரு, வயணமது ஆர்சொல்வார் சித்தர் சொல் வார் மாநிலத்தில் சித்தாந்தக் குருவேசொல்வார், நயமான வென்குரு வேகந்திபீடம் நாலானபதமதுவே பிரமந்தானே. 407

பிர்மமென்ற வாப்பிர்மம் புருவமையம் பிதற்றுதே யெவ்விடத்து மொளிகளில்லை, பிர்மமென்றதிதுதானே வொருமனதாய் நில்லும்பின் னுமில்லை முன்னுமில்லை வுற்றுப்பார்க்க பிர்மமென்ற கண்ணுட்டமெங் கேபாயும் பேச்சதினுற் காண்பதில்லை யுற்றுப்பாக்கில் பிர்மமென்றல லாடங் கண்ணொளியைக் கண்டால் பிலத்துதடா பிராணியென்றவாயுத் தானே 408

வாய்வேதான் பிராணனென்றீரய்யரே நீர் வகுத்துறையுமென்கு ருவே மூலர்பேர்பேர்; வாய்வான பூரணந்தான் சீவகலைமார்க்கம் வள மானநாலினு விபரத்துள்ளாம் வாயவான சூட்சமொன்று புருவமை யத்தில்வளர்ந்த கொலுபீடமங்கே யருபியாகும் வாய்வானதிதுதானே சீவகலை யென்றீர் வழிமார்க்கம் வேறென்றீர் பிராணன் தானே.

பிராணன் தானிருப்பதுவே மெய்தான் சொன்னீர் பேசாமற்றா ங்கையிலே சொற்பனத்தில் வைத்த, பிராணன் தானிங்கிருக்க வழியே ன்தானே பேறெழப் பாய்க்க யிலைக்குப்போனேனய்யா பிராணன்தா

ன்சுக துக்கங் கொண்டே யோடிப் பின்னொருவன் வந்தங்கேதேகந்தட்ட, பிராணன் தானேவதுவும் இரண்டேயாச்சோ பெருஞ்சித்தாவென் குருவே யருள்செய்வீரே. 410

அருளென்றமாணாக்காள் சொல்லக்கேளு ஆத்மாதான் சுழினை யென்றபுருவமையத்துட் பொருளென்ற காதாந்த விந்துக்குள்ளாய்ப் போதமென்ற பூரணந் தாவதிக்குவதிக்குவாறு விருளென்றவைம்பொறியுமதிலேபுக்கி விதத்திலே தசநாதங் காணத்தோடே மருளென்ற பித்தத்தில் லாடமீது வசனிக்குங் கண்டுஞ்சுஞ் செவிகேளாதே. 411

கேளாது நாவங்கோசனைதோணு கெடியான வாக்கிருணங்கோணங்தோணு, கோளானபரிசமதுமரம் போலேதான் கொண்டிருக்குமி தினாலே பிராணன்போமோ தேளானமனத்தாலே பொறியஞ்சாலே திரமானதுட்சூட்சம் புலன்களாலே தூளானவவத்தையினாற் சொற்பனங்கண்டோற்றுவிக்குஞ் சன்னியினாற் காணலாச்சே. 412

ஆச்சப்பா விதனாலே நினைவுள்ளாதி யந்தந்தப் பொறிநினைவால திலும்புக்கிபோச்சாப்பா காக்கிபத்தே காணநாடிப் பூண்டதினால் ;சீவனை பூரணந்தான் பேச்சப்பா விரண்டாகக் கனவிற்கண்டாய் பேய்மக்காளுங்கலேத்தானென்ன சொல்வேன் வாச்சப்பா வெங்கெங்குஞ் சீவனென்றுமயங்காதே யறிவுகுருவாகக்காணே. 413

அறிவுகுருவா மென்றீரார் தான்சொல்வா ரய்யரே கொங்கணரே யென்ன சொல்வேனறிவு குருவா மென்றூரப்பால் சிந்தை யாவதற்கு மூறவுண்டோ வரத்தினிற்கு மறிவுகுருவான செயல் சொல்லவேணு மடிக்கடியே பேசுகிறே னெண்ணவேண்டாம் மறிவுகுருவான செயலுரைக்கிறேன் கேளப்பனே யொன்றுனமனதுகாணே. 414

காணப்பா மனமொன்றுற் பொறிபாயாமல் கயிலாசநந்தியுறுஞ் சுழினைத்தன்னிற் பூணப்பா விழியிரண்டும் பூட்டிப்பார்க்கிற் போதமென்றவறிவாச்சு மனத்தினுண்மை வீணப்பா பொறியான புலன்வாய் வாலே வேதாந்தம் புக்காமற் பாவமாகுந் தோணப்பா ரெண்டறியச் சொன்னேன்கேளு சுகதுக்க மிதனாலே சொல்லலாமே. 415

சொல்லக்கேள் கண்கண்டு செவிதான் கேட்டுந் துண்டமுறக்கெந்தங்கள் வாசமோர்ந்து மல்லக்கேளு வாசையானவாறு மப்பனே மனத்தியானமானவாறும் வெல்லக்கேள் சிற்றின்பக் கிறிசை வாழ்வும் வேதாந்தமனத்தோர்க்கு வொழியும் தோறுஞ் செல்லக்கேளவத்தையினால் விசுத்தியுள்ளே சென்றிருக்கும் பாவசிந்தை தெளிந்துகாணே. 416

தெளிந்து கொள்ளவாராரைக் கொங்கணரே அய்யாதிருமூலர்பேரனுக்குச்சீஷர் மூர்த்தியளிந்து விடுங்காயத்தையும்மை;போலே யா

யிரத்தெண் மாற்று வர்னமாகச் செய்வார், களிந்துவிடும் வாசிதனைக்கட்டுமார்க்கம் கைமுறைதானார்க்கு வருங்குறியைக்காட்ட, களிந்துவிடும் பிள்ளைகளையுயர வேத்துஞ் சத்துருவே யுபதேசஞ் சாத்துவீரே. 417

சாத்துரேன் வாசியு பகருவைக்கேளு தற்பரமாஞ் சுழினையிலே மனத்தையூணி, நேத்திரமே பிரியாமலோந்து பார்க்க நிலையற்றபுரியஷ்டமுள்ளாய்நிற்கு, மாத்துரேன் பூரணந்தானுலுந்தானே வப்பனேவோடோடியுள்ளேபாயு, மாத்துறேன் பூரணத்தை மவுனந்தாக்கி வரிசையாய் நாலுமங்கே முப்பாய்பாரே. 418

பாருநீ யிப்படியே வாசியோகம் பார்க்கையிலே மவுனமது பிலக்குஞ்சித்தங், காருநீ சூடுகொண்டவுள்ளங்காக்குங் கலசப்பால் நெய்யுடனே கசந்துஞ்சு, சேருநீ கொடும்பையைபிளியாரை வெந்த சிறப்பாக மிகுசாறுகக்கொள்ளு, சாருநீ கடுநெல்லி வேம்புமஞ்சள் சாதிக்காய் மிளகோஷ்டந் தன்னைவாங்கே. 419

வாங்கியேயமுரியினு லரைத்துக் கொண்டு வையாவின்பாலிலே கரைத்துக்கொண்டு, தாக்கியே பட்சமதில் முழுகுவாய் நீதனியாவின் நெய்முழுகு வாரந்தோறுந், தோக்கியே பசும்பயறு வெந்நீராடுசிரசிலே நீரைவிடுசுழினைபாரு, பாங்காகக் கண்மூடிப்பாருபாரு பார்க்கையிலேயிருகண்ணும்பஞ்சுகேளே. 420

கேளப்பா கையிலே விழியூணியசைத்து கேசரியில் மனமோட்டியாட்டிப்பாரு, நாளப்பாவக்கினிபோல் முருக்கம் பூப்போல் நயனத்திற்காணுமடா சொற்கமோட்சம், வாளப்பா விதுவல்லோ கருணைவீடு வாச்சுதாவுந்தனுக்கு மைந்தாகேளு, கேளப்பா கோபமென்றதீயைநீற்றுங் கொடும்பாவந்தனை யறுக்குங் கெதிகொள்வாயே, 421

கெதியென்ற பரகெதி தானிதுதான் மைந்தா கனலொளிபோலவிப்படிதான்காணவேணும், பதியென்ற சேதியொன்று சொல்லக்கேளு பகலவன்தானுதிக்கு முன்னேசுத்தி செய்து, விதியென்ற பிரமலாட்த்தைநோக்கி விளங்கவே சூரியனைக் கண்ணுற்பார்த்து, துதியென்றபின் புசுழுமுனைக்கண்ணுடி தொடுகுறி போல்லாடத்தில் மனதையூணே. ()

ஊணியே காந்தனில் விபூதிவாங்கி ஓகோகோ பூசையிலே கனற்போல்காந்தி, தோணியே மாதளம்பூபோலேகாணுஞ் சொர்கபதமுண்டாச்சு பாவம்போச்சு, நாணியே பாதகங்களெல்லாம் போச்சு நானென்றவாணுவம்போய் சித்தனுவாய், வாணியே சொயமபாடு மணித்தாயங் கேவார்த்தை சொல்வாள் நந்தியிடம் வாழென்பாளே. 423

வானுகிறேனுஞ் சித்தரொடு ரிஷிகளெல்லா மகத்தான கற்பூரதீபம் போலே, வானுகிறேன் காயத்தை யொளிபோலாக்கி வப்பனே கருவி

டையுஞ் சொல்லக்கேளு, தானாகிறோ மென்றெண்ணிச் சலியாதே நீசந்திரனுஞ் சூரியனுஞ்சரீரமேவ, நீனாகிறோஞ் சுழினையிலே அங்கங் கென்றுநேர்முகமா யரசனங்கேயோடும்போதே. 424

ஓடுகிறவேளைக்கண்டு ராக்காலத்தே யுத்தமனே தீபம்போல்கற்பூர த்தி, னோடுகிறவொளிக்காட்டி யொளியைப்பாரு நானன்குதிங்களிலே தேகமெல்லாஞ் சூடுகிறசெம்பரத்தம் பூபோலாகுந் துடியான விளக் கொளியிற் சாய்கையில்லை சரடுகிறமண்டலமே பார்க்கும்போது தன் வயிற்றே புடைகிளம்பி வொளிகண்டோமே. 425

ஒளிகண்டோம் ராச்காலம் நாளொன்றுக்கு வற்பனமாய்க்கடி கைரெண்டு தீபம்பார்த்து வொளிகண்டோம் பண்பு சேர்சுழினைமேலே வேதாந்தலலாட வழியொளிகண்ணாட்டாம் விளிகண்டோம் பரத்தினு ட்விசாலங்கண்டோம் மெய்க்குள்ளே தத்துவங்களெல்லாங்கண்டோங் களிகண்டோம் பூரணத்திலூஞ்சலாடி கயிலாசத்தேகமா யிருந்திட் டோமே. 426

இருந்திட்டோ மிப்படியே கோடியூழி யெங்களுக்குக்கடிகையொ ன்றுமுக்காலாச்சு வருந்திட்டோஞ் சூட்சமென்ற குளிகைதன்னை வகு த்துவைத்தேன் தீபமதிரவியோடு மூன்று விருந்திட்டோம் பூரணத் துக்கலவிப்பாடு விளம்பரிது மூன்றுவகை குளிகை சூட்சம் மருந்திட் டோமதுதானே யேதுமில்லை வப்கனே குளிகையிந்தவாட்டம்பாரே. ()

ஆட்டமென்ற சூட்சத்தின் குளிகை சொன்னேனாதித்தன் கமலி னியாங் குளிகைசொன்னே, னோட்டமென்ற சந்திரகலை விளங்கவாழு மொளியவே சொரூபமணிகுளிகைசொன்னே, னாட்டமென்றகண்ணா முக்குளிகை கண்டேன் ரசமானவமுர்த மெல்லா முண்ணப்பெற்றேன் கூட்டமென்ற பிள்ளையைந்நூற்றைம்பத்தேழ்வர் கொள்கினாரிந்திரவி சுடரிம்மூன்றே. 428

சுடர்காட்டியதிலிருந்த வொளியைக்காட்டி சொற்கபதமேலோ னரவியைக்காட்டி பிடர்காட்டி பிடரியென்ற சுழினைக்கண்டம் பேரொ ளியைமனத்தூணிப் பிறையைக் காட்டி படர் காட்டி மதிக் கொழுந்தி ன்பாதங்காட்டி பரிசு பெற்றவாதியந்தம் நடுவுஞ் சொன்னே னிடர்கா ட்டிக்கால்தலையாஞ் சிவயோகத்தையிடகலையிலிருத்தி நன்றாயூதென் றேனே. 429

நன்றாக யிவ்வளவுஞ் சொன்னீரய்யா நாயேனை யெந்நாளுந்தான் றற்காக்க வென்றேதான் மனது வைத்தீர் மூலயோக வேதாந்தச்சிரோ மணியே குருவே ஐயா யொன்றான வைந்நூற்றைப்பத் தெண்பிள்ளை யோமுடிந்துபோகாமல் வலிதுகொண்டு சென்றேனான்வளர்த் தெடுத்த ஞானபோத சிவசிவா வென்றெனக்கு தீட்சைவையே. 430

வையென்றாய் தீட்சைகளைச் சொல்லவே தான்வாய்ப்பேச்சோ வெளிதாச்சோமவுன ஞானத்தை யென்று நிருத்த மிடச்சவனைக்காட் டத்தங்கமொருமலை போலே குவித்தாலுந்தான், மெய்யென்றரசவாத ஞ்சத்திம்பதி வேதிக்கவகை யெல்லாஞ் சொன்னாலுந்தான், ஐயமென் றபிரமசொா க்ஷேத்திரியர்வணிகர் ஆசைவைப்பாரல்லாது வன்பிலாரே.

அன்பானபிள்ளை யெந்தப் பிள்ளைசொல்லு மய்யரே வென்குரு வேயறியவேணும், பொன்போலப் புத்தியுள்ள சீஷாகேளு புகலுகிறே ன்சூத்திரத்தீட்சை சொல்லிவோ, மென்போலே சுறவ மெல்லாமறிய வானா வெண்ணினார் சொல்லக்கேளு தான்சூத்திரன், தன்போலக் குரு ச்சாய்கை நிழல்போல் சொல்வான் தனக்கோடி வீவதற்கு மனமொ ன்றுனே. 432

மனமொன்றானுயிரெல்லாம் நாமே யென்பான் மற்றுமுள்ளதா வரமுனாவேனயென்பான், தனமென்ற முதலெல்லா மாசையோரான சற் குருவை காத்திருக்கச் சலியனய்யா, நினைவென்றாலறிவிலே பத்தி நிச மென்பான் நிற்குணமாப்பர வெளியைத் தெளிந்து பார்ப்பான், சின மென்றகோபமொரு நாளுமில்லான் திருவேடச் சித்தர்களைப்பழித்திட் டான்காண். 433

காணப்பா தாய்தந்தை தாரம்பிள்ளை காதலுறமனம் வைபான்சி வாலயங்கள்பாரான், பேணப்பாவலஞ் சுற்றான்மால்கையில்லான் பிர தாமப்பேச்சுரையான் மவுனியாவான், தோணப்பா தினியுடவாசை கொள்ளான் தோகையர்கள் தோல்யோனி யாசைகொள்ளான், பூண ப்பா பொன்னாசைதன்னை யேலான் போக்கற்ற விரதங்களனுஷ்டிப் பானே. 434

அனுஷ்டியான் கொக்கோகமதன சாஸ்திர மளவற்ற நால் வேத ஞ்சிப்பிசாஸ்திர, மனுஷ்டியான் பரதமொடு வயித்திய சாஸ்திர மப்ப னேமாந்தரிகங் கெணித்த சாஸ்த்திர, மனுஷ்டியான் ஆறுவகைத்தொ ழிலுங்கல்லான் நலமானசில தீர்த்தமப்பேதென்பா, னனுஷ்டியானண் டபகிரண்ட மெல்லாமாசையுற்றமாய்கை என்பானனபதன்தானே. ()

தானென்றவானுவத்தை நந்திமூட்டி தானெரிப்பான் வாயினாற் சிவயோகத்தால், மானென்றமகமாயிவாம தேவிமாதாவைப் பூசிக்ககரு மந்தப்பான், தேனென்றவெண்ணைமலசரி யுண்ண தெளிவானசிந்தை பெற்றோ மென்னான்கும்பிட்டுங், கானென்ற செங்கையோன் கற்பங் கொள்ளான் கர்மமான தன்மையுள்ளான செயலைப்பாரே. 436

செயலானமகாரச பிரமரிஷியாவான் சித்தர்களெல்லாமகிழச்சி த்தனாவான், நயமானசாயுச்யபதமாம் ஞானநாலான பூரணத்தின்சூத் திரயோனி, மயமானசூத்திரனே மவுனஞானிமற்றுள்ள மூச்சாதிசரி

னைதவாழ்கை, யியல்பான சிவரூபந்தன்னைக்காணு ளிகத்திலே குருவெ
ன்றேயிருப்பார்காணே. 437

காணப்பா சொல்லக்கேள் லோகவாக்கியக்காரிய குருவாயிருப்பார்
தீட்சை சொல்வார், பூணவே சேகண்டி மணியினோசை பொற்றவ
மூசங்கமொடு தொனிகளார்ப்பதோணவே ஓமகுண்டம் கர்மப்பூசை
சொல்லி மெத்தச்செய்திடுவார் கருவில்லாமல், வேணபடி தீட்சையி
லுங்கருவில்லாமல் வெள்ளி செய்யுங் கைமுறையில் கருவில்லாதே. ()

கருவென்னவென் குருவே சொல்லவேணுங் கைமுறையில் கரு
வென்ன சொல்லவேணுந், திருவென்னுந் தீட்சைகரு சொல்லவேணு
ஞ்செப்பக்கேள் மாணுக்காள் குறியைச் :சொல்வேன், குருவென்னும்ப
ரம்பரா நந்திமோனங் குருகொண்ட சுழினையிலே கூர்ந்துபாரு தரு
வென்றுங்கைமுறையிற் கருவைக்கேளு சத்தியங்கமே வதற்குத்தங்கந்
தானே. 439

தங்கமன்றிக்கை முறையைப் பணங்கள்காசு தான்வைத்தேதீட்
சைசெய்வார் சத்தியில்லை, அங்களுக்காய் சொல்லிவிட்டேன் தீட்சை
மூலமொருகோடித்தனமீந்துஞ் சொல்லாரய்யா, சங்கையுடன் சற்கு
ருவையடுத்துக்காரு சாபங்கள்தனை யழித்து :சாபஞ்சொல்வார், மங்
கையரைச் சேராதே மயலாகாதே மாண்டிடவோ பித்திசொன்னேன்
வாழென்றேனே. 440

வாழுகிறகாரணமாஞ் சீஷர்தன்னை மகத்தான குருமார்க்கஞ்செய்
யவேண்டி, வாழுகிற குருவெங்கேச°மாதிதீட்சை யடக்கியே பிர்மவ
ழிலிங்கமாகி, நீளுகிற சீஷருக்குக் கையைக் கார்க்க நேமநிஷ்டையபி
ஷேகம் பட்டங்கட்டு, சூழுகிறகாரணமாயாகசாலை தோன்றவே கட்டு
நெடுங்குன்றஞ் செய்யே. 441

செய்யப்பா சீஷருக்குப் பட்டங்கட்ட தீட்சையிலே முப்பத்து
ரெண்டுஞ் செப்பி வையப்பா தங்கர விக்கடகம்போடு, :வாகான தங்கர
விப்பவுத்திரம்போடு, மெய்யப்பாதங் கரவிக்கொலுசுபோடு விளங்க
வேயஷ்டகர்ம மணிகள்பூணு, தையப்பாருத்திராட்சவாகு மாலைதன
மணியை பத்தாறு கோர்வைதானே. 442

கோர்வையிலே முகமணிக்குக் குளிகைகேளு கொத்தாகச்சரமெ
ட்டுங்கூறக்கேளு, சேர்க்கையிலே யிடைக்கிடையிற் பவளஞ்சேரு சிற
ப்பாகா குஞ்சரங் கொத்தொன்றுக்கு, பார்க்கையிலே நூற்றெட்டு மணி
தான் சோர்வை பண்பாகக் குளிகை யெட்டு முகத்திற்சேரு, வோர்க்
கையிலே மணிகட்டுப் பன்னிரண்டு விடைக்கிடையிற் றங்கரவிக் குளி
கைசேரே. 443

சேரப்பா தங்கரவிக் குளிகைதானே சித்தி செய்யும் விராகனிடை
மணியாய்சேரு, சேரப்பா விரலாழி வட்டத்துள்ளே சிறக்கவோசக்கு

ளிகைதன்னை நன்றாம், பாரப்பாதங்கத்தாலணைத்துக் கட்டுபண்பாக வுள்கட்டுருத்திராட்சங், கோரப்பாபருமணியாய் முப்பத்திரண்டு கோர்த்திடையில் துளசிமணிகோர்த்துப்போடே. 444

போடந்தவிருகலைக்கு குளிகைசேரு புகழாகருத்திராட்மாறு கட்டி, நாடந்த பொன்றலே கவசந்தானும் தங்காவிக்கம்பியிலேகோர்த்துப்போட்டு, தேடந்த திருமேனிக்கடுக்கனப்பா சிறப்பானருத்திராட்சஞ்செட்டிலொன்று, கூடந்தரசகுளிகை கடுக்கனென்று கோப்பானதங்காவிகடுக்கனென்றே. 445

கடுக்கனிலேமுச்சாடு காதில்போட்டுக் கம்மீதில் ருத்திராட்சங் கோவையஞ்சு, வடுப்படாமணியாக நூற்றெட்டுஞ் சேர்வகையாக அஞ்சுவகைக்கோர்வைக்குந்தா, னெடுப்பாகமுகமணிக்கு குளிகைசேரு விடைக்கிடையில் பணவிடையில் மணிதான் தங்கத்தொடுப்பாக துளசிமணி கோர்வைரெண்டு துலங்கவே நூற்றெட்டுஞ் சொல்லக்கேளே.

கேளடா முகபணிக்கு குளிகைசேரு கெட்டியாயிடைக்கிடைக்கு முத்துக்கோரு, வாளடா தங்கமொரு பலத்தகட்டில் வளமாகநாற்பத்துமுக்கோணத்தை, நாளடா வரைநத்கல்லாடமீதில் நந்திதிருமூலரென்றேபட்டங்கட்டு கேளடா வாராமல் ஓமகுண்டம் குறிப்பானயிறவி என்று வளர்ப்பாயோம. மூளடா கும்பத்திற் குருவைத்தியானிமுத்திபெறவாறு செல்பின்புதானே. 447

தானென்ற சீஷனங்கே தீர்த்தமாடி தன்காலிற் குாடிட்டுக்காஷாயந்தான்மானென்ற கௌபீனமாயரைக்குக் கட்டிமகத்தான புலித்தோலைதரித்துக்கொண்டு, தேனென்ற ஓமகுண்டந்தன்னிற் சேர்ந்து தெளிவாக தெண்டனிட்டு குருவைநோக்கு, கோனென்றகும்பநீர் புரோஷித்தேதான் குருநாதன் பதஞ்சென்னி கொள்வாயாமே. 448

ஆமப்பா நாற்காலிப்பலகைமீதிலப்பனே சீடனைத்தானிருக்கச் சொல்லி, தாமப்பாசாம்பிராணி தூபம்போடு சகலவபிஷேக மெல்லாந்தானேசெய்து, வேமப்பாநெய்வேத்தியமெல்லாஞ் செய்து வேகத்தில்னந்தமூர்த்தி என்று, நாமப்பா நாமமென விபூதி சாத்திரசகுளிகைவிரலாழு தன்னைப்பூட்டே- 449

தன்னையல்லோ போதித்துச்சிவனை நோக்கித் தருவாகவே சூட்சந்தானுய்க்கொண்டு, பின்னையல்லோ தூபமொடு தீபங்காட்டி பொற்கப்பூராலாத்தி தன்னைகாட்டி, சொன்ன புஷ்பந்தன்னைச் சாற்றியுபசாரங்கள் சோடசங்கள் பதினாறுஞ் செய்தபின்பு, நன்னயமாய் சீஷரெல்லாந்தெண்டஞ்செய்ய நந்தகுருவபிஷேகப்பட்டங்கட்டே. 450

கட்டியதோர் சீஷர்தொழுங்குருநாதன் தான் கதிசீஷபிள்ளைகட்குப்பூதிசாத்தி நிட்டையனுஷ்டான விதிசெய்யுங்காலம் நோாகச் சீஷ

ரெல்லாம் பொற்பூவைத்து, பட்டாபிஷேகமே பூண்டகுரு வென்று பாதமலர்தனிலே வீழ்ந்து முத்திசேர்வார் திட்டமுடன் பின்பல்லோ சீஷர்க்கெல்லாஞ்சிவஞெளிபைக் கண்ணுறவே தெரிசிப்பாரே. 451

தெரிசிக்கதெரிசனைதான் சொல்லவேணுஞ் சிவமானகொங்கண ரேகுருவேஐயா, பரிசிக்குமாணாக்காள் சொல்லக்கேளு பார்நந்திசுழி னையிலே உற்றுப்பாரு, பொருள்சிக்கும் பூரணத்தின் பெருமைகாணும் பொன்னிருக்கும் வானமெனப் பூத்துகாணுமருல்சிக்கு மோட்சகெதி நாமேயாச்சுவாஞெடு மறுமையுமொன்ருய்க்காணே. 452

காணப்பா சேதியொன்று சொல்லக்கேளு கங்கையொருபாத்தி ரத்தில்விட்டுக்கொண்டு பூணப்பா மங்கென்றே யவவுங்கூட்டி புகழா னகடிகைகொண்டு பூணப்பாரு தோணப்பாமண்டலத்தில் முகங்கா ணுது சுகமாகப்பதிஞறுமாதம் பார்த்தால் போணப்பா சடலமெல்லா ஞ்சாய்கையில்லை பிலத்து தடாகாயத்தை யொளிபர்யாதே. 453

ஒளிகாணவொளி பாயாதுடலமெல்லா முத்தபனேசித்தமுறும் பதவியாச்சு வெளிகாணவம் பரத்தே வெளியுமாச்சு வேதாந்தஞ்சித் தாந்தம்வெளியாய்ப்போச்சு, களிகாணமூக்குநுனிமேலே கேளு, கயி லாசபாளிநந்திகாணலாச்சு, சுளிகாணபுருவமயத்தமறிலேறிச் சுகா கீதச்சிலம்பொலியைக் காணலாச்சே 454

ஆச்சப்பா நால்வேதமாறு சாஸ்திரம் அப்பனே பதினெண்புர ணமெல்லாம் போச்சபபா வறுபத்துநாற் கலைக்கியானந்தான் பொறி யிட்டபஞ்சுபோற்பூதமெல்லாம், வாச்சப்பா சரசுவதி தோத்திரஞ் செய்வாள் மகாலட்சுமியடப்பங்கட்டி நிற்பாள், பேச்சப்பா சீஷருக்கு தீட்சையோதி பிலக்கவே நவசாபந்தீர்த்துச் சொல்லே. 455

சொல்லடா வதன்பிறகு அஷ்டகர்மஞ் சுகமாகச்சித்திச்சாலனு ஷ்டானத்தைச், சொல்லடா காலைசந்திமாலை சந்திசுருக்கான சடாதா ரதீட்சையோதி, சொல்லடா மேல்மூலவறுகோணத்தைச் சூட்சத் தைப்பற்றினபின் தூலத்தாறுஞ், சோல்லடாமவுனத்தால் பூசைசெய் யத்தோன்றியபின் அஞ்சுவிததீட்சையோதே. 456

ஓதப்பாபஞ்சபூதத்தின் வாழ்க்கையுத்தமனே சண்முகமாம்வதன பூசை, ஒதப்பா விதுவெல்லாஞ் சித்தர்சொல்லா ருங்களுக்காய்ச் சொல்லிவிட்டேன் சித்தாய்போக, ஓதப்பாவதன்பிறகு தசமாந்தீட் சையுரைத்தபின்பு சூட்சத்தைப்பற்றச்சொல்லி, ஓதப்பா மூலத்தை ப்பற்றிச்சொல்லு வுண்மையுடன் குருபதத்தை பூணச்சொல்லே. 457

சொல்லான சுழினையிலே குருப்பா தந்தான் சூட்சமிது தூலமிதுமூ லமிதுமூன்றும், வில்லானதேவனூந்தம் புதைத்தாப்போல் வேதா

ந்த வெளியொளியை மேவிப்பார்க்க, வல்லாதே மணக்கண்ணுல்லாடம் நோக்கவகை சொல்லிக்குளிகைதனை கையிலீந்து, வெல்லாதேபோவ தில்லைவேதாந்தத்தை மேவியேபாராட்டால் சாம்பலாச்சே. 458

சாம்பலாபோகுமடா சடலந்தானுந் தையலார் மோகத்தால்சனங் களெல்லாம், வேம்பாகுசுழினை தனைப்பற்றினுக்கால் வீணான பெண்கள் மயல்வெந்துபோச்சு, சோம்பாதே கோபமெல்லாம் வெந்து போச்சுசுழினையென்ற நந்திசிவன் தன்னைப்பார்த்து, தாம்பானதா யென்றவாமபூசை சாதித்தாய் தையல்மயல் தருகிப்போச்சே. 459

போமடாதிரோதாயி மாய்கையெல்லாம் புண்ணியரே யுங்களுக் குப்பூட்டுச்சொன்னே, ஞமடாதிறவுகோல் சுழினைநந்தி அப்பனே சீஷ ருக்குச்சொல்லும்போ தாமடா சகலத்தினகலங்கேளு சாத்துகிறேன் சாணெட்டு நீளமீராதே மடாசிரசுமே கூடாரம்போலெண்டிசையும் விரித்துநன்றாயிருக்கச் சொல்லே. 460

இருக்கவே குருநாதன் முன்பாய்த்தானே யிதமாகச் சீஷனைத்தா னடுக்கவைத்து விருக்கவே யிடதுகுதி மூலத்தூட்டி யின்பமாய்வல முமிடமிருக்கச்சொல்லி யிருக்கவே சத்திசிவ மொன்றாயக்காணவேந் திழையார் நாதமதிற் கற்பூரமிட்டு, விருக்கவெ செவிநெஞ்சு கூடக்கூ ட்டியிருந்தபின்பு நாலாநாள் சித்தியாமே. 461

சித்தியாந்தெளிவாக விருத்துக்கொண்டு சோதிலே சாம்பிரா ணித்தயிலம் நேராய் முத்தியாங்கோ ரோசினை குங்குமப்பூ முழங்கவே காற்படிக்குக்கழஞ்சிவீதம் சத்தியாந்திருமந்திர மெட்டுங் கொண்டு சாரவிடுதேனுமதிலெட்டுக் கொன்று சத்தியாகக் கோஷ்டமது கழஞ்சு தன்னை சுகமாகப் பெண்முலைப்பால் விந்திலாட்டே. 462

ஆட்டுவாய்கீரிகட்டை துளசிச்சாற்றா லரைத்து நீயொரு கழஞ்சு கூடப்போட்டு மூட்டுவாய் குழம்பாகத் தயிலந்தன்னை முத்திபெறச் சித்திபெற நெத்திகண்ணில் தீட்டுவாய் திலதமாகவே யிட்டபின்புசீஷ னுடவிருவிழிஞ்ழிசுனைபார்க்க காட்டுவாய் குருநாதன் கடைக்கண்ணிற் றான் கைவிரலாலமிழ்த்தியே பழுத்துவாயே. 463

வாயப்பாசூரியன்போற் பிரகாசிக்கும் வட்டமாய்த் தோணுமடா மவுனந்தானும் நீயப்பா கானப்பா வென்பதில்லை நிசித்தவிட்ஞ்சிவ யோகதெரிசித்தேதான் காயப்பா பழமாக விராசனைப் போல்கனிந்து பத்தி பெருகருணைமிகவுமுண்டாந் தாயப்பா வார்த்தை சொல்வாள் சொற்கமோட்சந்தான் லபிக்குங் குருநாதன் தன்னைப்போற்றே, 463

போற்றென்று வுபதேசம் வாலைதீட்சை புரிவாகச் சொல்லியபி
ன்யோகசித்தி, முத்தென்று மத்தியுடன் கடந்தஞான முடியடியாய்க்
கண்டபின்பு மோட்சமாச்சு மற்றொன்று மில்லையப்பாயோகம்ஞானம்
மாச்சுதடா சீஷனுக்கு மருவிப்பார்த்து சித்தென்றசித் தெல்லாம் வச
மாய்ப்போகுஞ்சிவயோகந் தன்னாலே தெளிந்துகாணே, 465

தெளிவான சீஷருக்கு குருநாதன் தான்திறமாக மாத்திரைக்கோ
ல்முச்சாணீந்தான் அளியாமல் யோகசாதனையில்வெட்டி வப்பனே
வெள்ளிகட்டும் பிரம்பினோடு பளியாதவுப்புக ரஞ்சிவாக்கினைக்குபத
முடனே யெடுத்துப்பாதரெட்சை களியாமல் குறடீந்து வரைக்குக்
கட்ட காயசித்தி ஞானசித்தி கருவைக்கேளே. 466

கருவானதே தென்றால் தங்கைரநாண்பூட்டி காயாசங்கவுசன
மேதரிக்கச்சொல்லு பெருவாழ்வு கண்டகோடாலி யிந்தேபிரதாபச்
சட்டைமுனிமக்களென்றார் இருவாவாவென்பார்கள் மடியில் வைத்
தே யென்குருவே சுத்திபானந்தாவென்பார் குருவாக்கம் பிளியின்சட்
டைபூண்டார் கொத்தடுமையாவார்கள் சித்தர்தானே. 467

தானென்ற சடலமெல்லாம் நாற்றபாண்டந் தசைநரம்புமூளை
ரெத்தந்தண்ணீர் பாண்டங்காளென்ற புழுக்கூடுவெலும்புறோ மங்கா
மமோர் பொய்க்கூட்டுக் கடவாவீடுபானென்ற வொன்பது திட்டிப்பா
மூாம்பிற்றல் பாகாமிகவே படைக்கும் விந்துநாதங்கோ னென்றபஞ்ச
பாதகம் விளைக்குங்குலமானதா பரசங்கத்திற்றானே, 468

சங்கமென்றாலேழு தோற்றம் யோனிநாலு தாபரத்திநிலைபேறு
மரங்கள் பூடுவங்கமென்ற கலக்காவே யவராசைக்கு மளவில்லைக்கரை
யில்லைக்கணக்குமில்லை மாங்கதமலக்கூடு கானத்தினாட்டமாயையிலே
சென்றிருக்கும் மனந்தானப்பா வங்காரப் பெண்ணாசை தன்னைக்
கொண்டுமாளுகின்றதின் னாசைவைக்குங்காணே. 469

காணப்பாவிச்சடலநம்பவேண்டாங் கடைகெட்ட சென்மமிதுநம
னுக்கேது பேணப்பா வென்குருவே போகாபிள்ளை பிறப்பிறப்போ
வில்லையென்றீர் நமனங்கேது மாணுக்காள் சொல்லக்கேள் விந்துநாத
ம்வாயவுடன் வைத்திடும் போதழைத்த வாழ்க்கை தோணப்பாசொல்
லக்கேள் புரிடஷ்டத்தால் சுரமாகசீவகளை வீணாய்ப்போமே. 470

வீணிலேப்போயங்கே சுழுத்திக்குள்ளாய் மேலானநந்தியுடநம
ன்தான்காணும் பூணிலேகம னிடத்தையுதரச் சொன்னீருத்தமனே
யென்குருவேசூட்சமென்ன காணிலே னென்றாயே சொல்லக்கேளுகா
லடாவிடகலைதான் மதிதோய்ந்தி்ப்போல் நாணிலே புருவமையக்
கூற்றனில்லை நாடினேன் சூட்சமங்கிறக்குந்தானே. 471

இறக்குமிடம் பிறக்குமிடஞ் சொன்னீரய்யா வெளிதல்லவென் குருநன்ருய்ச்சொன்னீர், மறக்குமிடமில்லேயினியுன்பதத்தை வாழ்த்தியெந்தன்சிரசுமேற்கொண்டேனய்யா, பிறக்குமிட முன்வயிற்றில் பிறந்தேனேயா. பேரான நடைப்பிள்ளே யென்று வாழ்த்திதிறக்குமுட் டுமுபதேசஞ்செய்யவேணுந் தேங்காயும் தட்சணேயுங் வைக்கிறேனே,

வைக்கிறேன் மேருப்போல் மலேகளெல்லாம் வாதத்தில் வேதையிடுஞ்சத்தபேதி, வைக்கிறேன் தாம்பிரமோடு தீபபேதி வளமான கன்பேதி பரிசபேதி வைக்கிறேன் சிவபேதிவாயுபேதி மகத்தானரவி பேதிமதியின் பேதி, வைக்கிறேன் தவபேதி யொன்பதையுமையாமவுனமென்ற தீட்சைக்கு தியானந்தான்காணே. 473

காணவேவேதமுறை சொல்வே நன்ருய் கயிலாகவர்க்கமடாநாங்களெல்லாம், பூணவேயெங்களுக்கு வேதமார்க்கம் பொன்மாத்துவாயிரத்தந்நூறுவோடும், நாணவே நவபேதியிடுவோம நாங்கள் நன்ருன மரந்தொட்டு செடிபூமரங்கள், காணியுட செந்தூரங்கோடிமட்டுங் கனமாய்ச் செய்திடுவோ மின்னங்கேளே. 474

கேளப்பா பூமியோடு வந்தரத்தின்மட்டுங் கெடியாகப் பொன்னுக்கிவிடுவோமாயை, வேளப்பாமாணுக்கா வென்னசொன்னுய் மெய்யாவிபொருள் மூன்றுந் தத்தஞ்செய்தால், வாளப்பா வென்று சொல்லி மவனதீட்சைவைத்திடு வோந்தங்கத்தால் காப்புகட்டி, நாளப்பா வார்த்தையிட்டுக் காலமபோனல் நான் மவுனஞ்சொல்வதெப்போ நாதவாழ்வே. 475

நாதந்தப்பேரொளியே குருவேஐயா நந்தியருள் செய்வோர் தாரைவாங்கும் வேதாந்தபேரொளியே யாட்கொள்ளவேணும் விளங்கவே கடைப்பிள்ளேயாக வாழ்வேன், பேதாந்த நற்சீஷா சொல்லக் கேளு பூரணம் மதிபோலே கண்ணில்காணு, மதாந்த மதின்கடிகை ரண்டுகேளு மாதமொன்ருறபதினுறுமாதங்காணே. 476

பதினுறுமாதந்தானிரவிதன்னேப் பற்றவேயுதைத்தில் ரவியைப் பாரு, செதினுறும் பார்க்கையிலே மவுனவீடு செகமெல்லாமடங்கவே வொளிதரன்வீசுமதிகோடி வண்ணமடா மாதளம்பூ வன்னமலரொக் குங்காந்தியங்கே மனங்கூசாதே விதினுறு கோடிபட்டம் பிரமமாகில் விளங்கக்கேளிப்பலன்தா ஞெடியொன்ருச்சே. 477

ஆச்சப்பாவிப்படியே மவுனமூலம் மௌவிட்டுக் கரைகண்டோரில்லேயப்பா நீச்சப்பா மவுனத்தை யாருஞ்சொல்லார் நீ யெனக்குக்கடைப்பிள்ளேயாகச் சொன்னேன் மூச்சப்பாவற்றிடத்திற் குளிகைபோட்டால் மூவுலகு முருக்கம்பூ வர்ணமாகும் வாச்சப்பா அகாரவுகாரத்தோடுமகாரசிவமாயிருந்த வஞ்சு[illegible]ரே. 478

அஞ்செழுத்து மூன்றெழுத்தி லடங்கிப் போச்சுவப்பனே மூன்
றெழுத்தும் யோகமாச்சு விஞ்ஞையிது சாயுச்சியமிருந்த வீடுவிண்ணு
ட்டங்குடியிருக்குமில்லமாச்சு சஞ்சீவியுடற்கூடுவிட்டுப்பாயுஞ் சாரூ
பம்பெற்றிருந்த மவுனவாழ்க்கை தஞ்சமென்ற மூன்றெழுத்தின் குறி
யைச்சேரு சாத்துகிறேனிடகலை உகாரந்தானே. 479

தானென்ற பின்கலையகாரவீடுதாயிருந்த மகாரமடாசுழினை வீடு
காணென்றசுழினையின்மேற் புருவமையத்தே கண்ணொளியாய் விந்தி
னிடநாதங்காணுமானென்ற வாமியடா புருவமேலாம் வட்டங்கணுடி
விழிமருவிப்பார்க்கில் கோனென்ற வட்டத்தில் நடுவேநின்றகுமரிய
வள் வாலையடா சிறுபெண்காணே. 480

சிறுபெண்போலே யிருப்பாளாத்தாள் பாருசெகமெல்லாமவளு
டைய கூத்துகூத்து, வுருதியுடன் சொன்னீரேகொங்கணரே ஐயாவுரு
வமோ அருவமோ சொல்லவேணும் பொறுமையுறிற் சுரூபமென்னி
ல்வடிவுசொல்லும் பூரணமேயென்குருவே பூணுவேனுன் வெறுமை
தனைத்தீர்த்தொளிக்கும் வுன்பீடம் வேதாந்த நிற்குணத்தை சொல்ல
க்கேளே. 481

கேளப்பா வுருவமென்றாலழிந்துபோச்சு கிறியைதுயோகிக்கு
வெளியால்க்காணும் வாளப்பா சொரூபமென்றால்லருண காந்திமவுன
மென்றால் சுழினையிலே மனதூணிப்பாரு வேளப்பா நிற்குணமே
சுழினாடி மெய்யான நிருமலமே மூலசூட்ச மாளப்பா நிரஞ்சனமே
யொளிவதேகமப்பனே கத்திநடுவோடும்பாரே. 482

ஓடுகிறகத்தியது தூளாய்ப்போகு மோகோகோ வேதாந்த ஞான
தேசம் நாடுதற்கு பூரணத்தைநாடிநாடி நமனானேன் சுழினையிலே
மாண்டுபோனானாடுகிற கூத்தெல்லாம் பூரணத்தின் கூத்துவண்டாண்
டத்தடாகமட்டும் வளைத்தேயாடுதேடுகிற தெட்டெல்லாம் ஞானந்தெ
ட்டுசித்த முறமவுனத்தின்மோட்சந்தானே. 483

தானென்றமோட்சமதாஞ் சாயுச்சியத்திற் தானேநின்றவனே
யோகஞானி தேனென்றஞானியென்றால் சடலம் போனான் சிவநிலையி
ல்நின்றிடுவான் பரத்திற்சேர்வான் நானென்ற பாகதிதான் பெற்றா
கில் கயிலாசங்குடியிருப்புகனகதேச மானென்ற யோகியென்றால்சட
லம் பேணுவாய்வதனையுண்டிடுவான கற்பந்தானே, 484

கற்பந்தானனந்தவகைக் கோடியாக கயிலைசத்த சாகரமுங்கரு
கிப்போவான் கற்பந்தானாதி தொட்டுவந்தமட்டும் கைமுறையாய்த்த
வறுதி தினம்பாரய்யா கற்பந்தானவமிருத்து தனையகற்றிகை முறை
யாயறுசுவையுந் தனித்துப் போட[illegible] கற்பந்தான் கொண்டோர்க்குகுரு
வைக்காத்து கமலிரெண்டுந்தோணு[illegible] கருதுவானே. 485

கருதியேவாலே முதலஞ்சுதீட்சை கட்டாகவுபதேசஞ் செப்பக்
கேட்டு குருவினிற்சாய்கையென்பார் வைத்துக் கொண்டோர் கற்ப
சித்தியோகசித்திஞானசித்தி பெருவாழ்வு சித்தனெனப்பேருஞ்சொ
ல்வார்பிதற்றாதே குருபதத்தைத் தொழுதுகாக்கில் கருவிருந்தவிடங்
காட்டி நாதங்காட்டி கயிலாசதேகமதாய் வாழென்பாரே. 486

பாரப்பாகுருவுக்குச் சீஷன்தானே பாவங்கள் தனைவிளைத்தால்
நகரஞ்செல்வான் சேரப்பா குருவுக்குச் சீஷன்தானே ;செய்கருமந்த
னைவிளைத்தால் சொற்கமெய்தும் வாரப்பா ;குருவுக்குச் சீஷன்தானே
வளமாகமனதுவர நடந்தானாகிற் பேரப்பா கேட்டுடனே யெமதூதா
ள்தான் பின்பாராதோடுவர் காண்பேணுவாயே. 487

பேணுவாய் காரணமாங் குருவைக்கண்டால் பிதற்றாமலொருமன
தாய்வாரம் வைத்து பூணுவாய் மோட்சபதந்தன்னை யீவார் பூதலத்தி
ன்மேல் வம்பாய்போகாதேநீ காணுவாய் ராசாக்கள் கருதிக்காத்தால்
காசினியெல்லாஞ் செழிக்குந்தேவ நீதிதோணுவாய் தீட்சைபெற்றா
ல்ராசாக்கடானுஞ் சொற்கபதந்தனைச் சொல்வார் பாவம்போச்சே.

போச்சென்று சொன்னீரே கொங்கணரே அய்யா புகழானநா
னுமொருராச புத்திரன் ஏச்சென்றபாவமென்று விலக்கோவில்லையி
டும்பனென்றன்று கெடும்புத்தி கணக்கோவில்லை வாச்சென்றபாவமெல்
லாமாளுமோ தானசற்குருவே சீவகளே சொற்கமாமோகாச்சென்றசு
ழினையிலேந்திக்காணிற்கரை கொள்ளாப்பாவமெல்லாங் கழன்றுபோ
மே. 489

போமப்பாராசாவை நம்பினபேர்கோடி புகழாகவவரவரே செய்
பாவங்க, ளாமப்பாராச்சியங்கள் செய்பாவங்களப்பனே விதுவல்லா
மிலக்கில்லாமல் தாமப்பாராசாவினிடத்திற் சாருந்தவறுண்டோபோ
வதுதானறுமைமெத்த வேமப்பாசுழிமுனையிற் காந்திபெற்றால் வெ
றும் பாழாப்போகுமடா பாவந்தானே. 490

தானென்ற கொடும்பாவந் தீர்க்குமாசான் தருமத்தின் வழிசொல்
லிதருணைவைப்பான், ஊனென்ற மந்திரமேயுபதேசித்து யுண்மையு
டன்சுழினையிலே யிருக்குமென்று, கோனென்ற சிவரூபங்கண்ணிற்
காட்டிகோபமென்ற முனைபோக்கியாசை போக்கி, ஆனென்றவாணு
வங்கள்தன்னைப்போக்கி நாடுவார் குருநாதன் மோட்சந்தானே. 491

நாடுகின்ற சுழிமுனையிற் குறியுஞ்சொன்னேன் நடுவான புருவம
ய்யவொளியுஞ்சொன்னேன், தேடுகின்ற சித்தாந்தகிரிகை சொன்னேன்
திருட்டுவித்தைக் குருக்களிட திறமுஞ்சொன்னேன், பாடுகிறவேதா
ந்தப்பண்புசொன்னேன் பரஞான முத்திரையும் பலமாய்ச்சொன்
னேன், ஆடுகிறபுரியஷ்டக் கருத்து[illegible]சொன்னேனாதாரமாறு முதற்
பாஞ்சொன்னேனே. 492

பரமானலலாடத்தின்போதஞ் சொன்னேன் பசுபதி பரஞ்சொன் னேன்தசகாரியமுஞ்சொன்னேன், கிரமானயோகத்தின் 'மாத்திரைகள் சொன்னேன் தெவியுட பூசைவிதிற்சறப்பஞ்சொன்னேன், சரமானவி டகலேயுஞ் பிங்கலேயுஞ்சொன்னேன் தலேகீழாய்க் கொண்டிருந்தமூல ஞ்சொன்னேன், புரமான முப்புறமும் பாழுஞ்சொன்னேன் பூரணத் தினிலேசொன்னேன் பொருட்பசான்னேனே 493

பொருளோடு அருள்சொன்னெனுருவுஞ் சொன்னேன் போதத் தின்சொரூபமொடு | அருவுஞ்சொன்னேன் திருவானமகாரத்தின்மவு னஞ்சொன்னேன் சிவனேடு சத்திபிரகாரஞ் சொன்னேன், கருவான கண்ணுட்ட மனக்கண்சொன்னேன் கண்ணொளியால் விண்ணொளி யைக்காணச்சொன்னே, னிருவினேயாம் பிறப்பிறப்பு மார்க்கஞ்சொன் னேன் யோகமொடுபரஞ்சொன்னேன் ரவிசொன்னேனே. 494

ரவியோகமதியோக மொளியின்யோகம் நந்தியோகமிதுநாலு நன் ருய்ச்சொன்னேன், தவியாமற் சடலத்தின் சாய்கைசொன்னேன் சரி தையொடு கிரிகைரெண்டுந் தள்ளச்சொன்னேன், சிவமான தீட்சை யிலே மூலசூட்சஞ் செப்பினேன் தூலமொடு வட்சரங்கள்: அவவான காரியக்குருக்களேயுஞ் சொன்னே னஷ்டகர்மஞ்சித்தி சொன்னேனகஞ் சொன்னேனே. 495

அகமான சூட்சமாந்தேகஞ் சொன்னேனழியாத முத்திசொன்னே ன்சீடர்சொர்க்கச், சுகமாகசாயுச்சிய சூத்திரஞ்சொன்னேன்தோண வேடட்சத்திராசிசொன்னேன், பகமானவாமத்தின் தேவிபூசைபத மான நாற்பத்துமுக்கோணஞ் சொன்னேன் மகாரமொக்குங் குண்ட லித்தாயோ மஞ்சொன்னேன் மலியாசக்கலியினிட்வளஞ் சொன்னே னே. 496

வளமான தீட்சைவைக்கவிரதமெல்லா மவுனம்போலொளியாமல் வெளியாய்ச்சொன்னே, னுளமானதிச்சத்தி நாமஞ்சொன்னேனுரை க்கவேநாதவிடைலகிரிசொன்னேன், விளமான குருவுக்கு லட்சணமு ஞ்சொன்னேன் விருதான கோபங்கள் தள்ளச்சொன்னேன், தளமான முக்குளிகை மூலஞ்சொன்னேன் சாதனேக்கும் விரதமொடு நாள்சொ ன்னேனே. 497

நாளொடுலக்கினங்கள் பட்சஞ்சொன்னேனுடவே யனுஷ்டான விதிகள்சொன்னேன், வாழவேகுருசூட்ச மாக்கஞ்சொன்னேன்வத னத்தில்லாதாரமாறுஞ் சொன்னேன் வேளான சுயம்பினிலே பிட்சை யேற்றவேதத்தின் சங்கரணவேடஞ் சொன்னேன், பழானதத்துவங் களறியச்சொன்னேன் பஞ்சப... பாவம்பலஞ் சொன்னேனே.

பலமானபுண்ணியத்தின் சொற்களுஞ்சொன்னேன் பாழானநரகத்தின்வகையுஞ்சொன்னே, னலமானசிதம்பரத்தின் பூசைசொன்னேனுடாதசீஷனிடகுணமுஞ் சொன்னேன், புலனுகமூலருடபூசைசொன்னேன் புகழ்பெறவே சாபங்கள் நிவர்த்திசொன்னே னலையாமலப்பியாசமார்க்கஞ் சொன்னேனப்பனேபாசம் விட்டகுறை சொன்னேனே. 499

T. 15750

விட்டகுறையாலேதான் தேவிதோத்திரம் விளம்பினேன்பொறிபுலன்கள் கரணவாயு பட்டணமாமண்டலங்களண்ட பிண்டம்பரமபதம்பெறவேண்டிச் சொன்னேனையா நிஷ்டையெல்லாமொன்றுனஏகவஸ்துகேடு மோனட்சரமேமவுனபீடம் வட்டமதென்றேறெழுத்தையறியச்சொன்னேன் மகத்தானரவிவட்டமானவாறே. 500

வாறுன சாஸ்திரத்திலாறுகாண்டம் வகையாகக் குறுக்கியதில் மூன்றுகாண்டங், கூறுனகடைக்காண்டமிந்தஞானங் கொட்டினேனைந்நூறுசீஷர்க்காக, வீறுனநடுக்காண்டம் நூறுசொன்னேன் வேதையிட்டு முதற்காண்டமந்நூறுசொன்னேன், தாறுனமுத்தகைகுமூன்றுசூஸ்திரந் தப்பாமற்சோடசமுந்தெளிந்துமுற்றே. 501

கடைக்காண்டம்-500-முற்றிற்று.

---


## பகவத்கீதை வசனம்.

பாக்கெட் அளவு 18-அத்தியாயங்களும் அடங்கியது, படங்களுடன் சுத்தப்திப்பு.

இதில் வேதாந்த ரஹஸ்யத்திற்கு உபமானமாக ஸந்தர்ப்பானுசாரமாய் உபநிஷத்து வாக்கியங்கள் ஆங்காங்கு உபகரிக்கப் பட்டிருக்கின்றன. யோகஞானங்களை விளக்கிக்காட்டும் நூற்களில் இதுவே முதன்மை பெற்றதுவாம் அலையுமனத்தை அகத்தில் அடக்குவதற்கு அரிய பெரிய கருவியாம். கற்றோரேயன்றி மற்றோரும் களிப்புடன் வாசிக்கத்தக்கனவாம்ஏழைகளும் எளிதில் வாங்கும் பொருட்டே பாக்கெட் அளவு விலை மிகவும் சஹாயமாய் ஏற்படுத்தப் பட்டது.

இதன்விலை ராபர் 0 8 0 ஷ கலிகோ பயின்ட் 0 10 0
ஷ வசனம்பெரிசு 1 8 0

த. துரைசாமி முதலியார்.
நெ. 23, பாளையப்பன் தெரு
மின்ட் பேஸ்டு மதராஸ்.,


புவனேஸ்வரி அச்சுக்கூட்ட[illegible] பதிப்பிக்கப்பட்டது.

உ

கடவுள் துணை.

கடைக்காண்டம்.௫௱.

# பொருளடக்கவராதி:


| பெயர். | பக்கம். | பெயர். | பக்கம். |
|---|---|---|---|
| அட்சரமுறை | 7 | நாற்பத்துமுக்கோணம் | 4 |
| அனுஷ்டாநிலை | 31 | பரிகலசேடங்கொள்ள | 11 |
| அங்கநியாசம் | 32 | பஞ்சதீட்சை | 25 |
| அப்பியாசம் | 36 | பட்சம்பார்க்க | 38 |
| அஷ்டகர்மம் | 45 | பஞ்சமலம் | 56 |
| இராசியறிய | 39 | பாவவழி | 44 |
| உச்சாடனம் | 47 | பிரமதேவர்பூசை | 15 |
| கணபதிபூசை | 12 | பூசிக்குமுறை | 8 |
| கரநியாசம் | 32 | பூதம்பெயர் | 56 |
| காப்பு | 3 | பேதனம் | 46 |
| கிரியையோகஞானம் | 49 | மவுனநிலை | 3 |
| குளிகைமுறை | 38 | மகேஸ்வரபூசை | 17 |
| கோமுகாசனம் | 37 | மவுனபூசை | 17 |
| சண்டிகேசர்பூசை | 15 | மாதனபூசை | 14 |
| சதாசிவபூசை | 18 | மாரணம் | 46 |
| சடாதாரதீட்சை | 26 | மூலாதாரநிலை | 24 |
| சத்திசூட்சம் | 27 | மோகனம் | 47 |
| சந்திரயோகம் | 36 | யாகசாலைகட்டுமுறை | 28 |
| சரியை | 49 | யோகநிலைமை | 13 |
| சபாநிவர்த்தி | 50 | யோகக்குறி | 21 |
| சிதம்பரபூசை | 20 | யோகத்திற்குபத்தியம் | 22 |
| சிவதீட்சை | 24 | யோகத்திற்குமாதம் | 38 |
| சுப்பிரமண்ணியர் பூசை | 14 | யோகவகை | 48 |
| சூரியயோகம் | 36 | ருத்திரபூசை | 16 |
| சூட்சயோனி | 52 | வடுகன்பூசை | 12 |
| தட்சணாமூர்த்திதிபூசை | 14 | வசீகரசித்தி | 45 |
| தீட்சைமுறை | 6 | விஷ்ணுபூசை | 16 |
| தேவிபூசைமகிமை | 3 | வித்வேஷணம் | 47 |
| நந்திபூசை | 13 | ஸ்தம்பனம் | 46 |


பொருளடக்கவகராதி-முற்றிற்று,